# உதயன்



www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 334 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 09 வியாழக்கிழமை (25/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00


# அரசின் முடிவல்ல '13'ஐ அகற்றுவது

## புதுடில்லியிடம் இலங்கை நேரில் விளக்கும்

கொழும்பு, ஒக்ரோபர் 25

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அகற்றுவது தொடர்பாக வெளிவந்துகொண்டிருக்கும் தகவல்கள் அரசின் உத்தியோகபூர்வ கொள்கை அல்லவென இந்தியாவிடம் இலங்கை தெரிவிக்குமென உயர் மட்ட அரச வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இன்று இந்தியாவுக்கான பயணமொன்றை மேற்கொள்ளும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இந்திய உயர்மட்டத் தரப்பினருக்கு அரசின் இந்த நிலைப்பாட்டை விளக்குவாரெனத் தெரிவிக்கப்படுகிறது.



13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச்செய்யுமாறு அரசின் சில பங்காளிக் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் சூழ்நிலையில் அது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 13 ஆவது திருத்தம் இப்போதைய காலகட்டத்துக்கு உசிதமானதல்லவெனத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தையடுத்து 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக

பார்க்க பக்கம் 4

### சபைக்கு வரும் மஹிந்தவுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஒக்.25

நவம்பர் 8 ஆம் திகதி, 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவு - செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பிப்பார். இதன் முன்னேற்பாடாக நாடாளுமன்ற வளாகத்தில் அதியுயர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பிரதி சபாநாயகர் நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார். பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவிக்கையில், எதிர்வரும் நவம்பர் 6 ஆம், 7ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் சகல இடங்களும்

பார்க்க பக்கம் 4

### பொன்சேகாவுக்கு ஐ.தே.கவின் கதவு திறந்தே உள்ளது

கொழும்பு,ஒக் 25

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவதற்கான வாசல் கதவு எப்பொழுதும் திறந்தே உள்ளது. அவருடைய அரசியல் எதிர்காலம் ஐ.தே.க.வுடன் இணைந்தே இருக்கும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாக லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும், ஒரேயொரு இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டுமாயின் விரைவில் ஒன்றி

பார்க்க பக்கம் 4


8 — தமிழர்கள் கொல்லப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்ட இலங்கை அரசின் போர் நினைவுச் சின்னம் மற்றும் அருங்காட்சியகம் அமைப்பது தமிழர் நெஞ்சில் வலியை ஏற்படுத்தும் செயல் எனக் கருணாநிதி கண்டனம்.

9 — காஸா மீது எந்த நேரத்திலும் போர் தொடுப்போம் என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன் யாஹு, எச்சரிக்கை விடுத்துள்ளார்.

10 — தாய்வானின் தைனான் நகர மருத்துவமனையில் நேற்று ஏற்பட்ட தீ விபத் தால் 12 நோயாளிகள் பரிதாபகரமாய் உயிரிழந்துள்ளனர்.

17 — இலங்கையில் தற்போது அதிக அளவில் சட்டத்துக்கு முரணாக இடம்பெறும் கருக்கலைப்பு நடவடிக்கைகளை சட்ட ரீதியானதாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


## வடமாகாண சபை அமைந்தால் தனி நாட்டுப் பிரகடனம் உறுதி

### கூட்டமைப்பின் திட்டம் அதுவே என்கிறார் மேத்தானந்த தேரர்

கொழும்பு, ஒக். 25

வடமாகாணசபை அமைந்தால் தனி ஈழத்துக்கான நகர்வுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் முன்னெடுக்குமென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனவே, பிரிவினையை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ள 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அரசு உடனடியாக அடியோடு இல்லாதொழிக்கவேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எல்லாவெல மேத்தானந்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.

இது விடயத்தில் அரசு இனியும் காலம் கடத்துமானால், அன்று வரதராஜப் பெருமாள் தனி ஈழப் பிரகடனத்தை அறிவித்தது போல் கூட்டமைப்பும் தனி நாட்டுக்கான பிரகடனத்தை முன்வைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பார்க்க பக்கம் 4

## கே.பி. விடயத்தில் அரசுக்கு எதிராக சபையில் பிரேரணை

### எதிர்க்கட்சிகள் தீர்மானம்

கொழும்பு, ஒக். 25

கே.பி. எனப்படுகின்ற குமரன் பத்மநாதனின் விடயத்தில் அரசின் உண்மையான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துமாறு வலியுறுத்தி சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இந்த விடயத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கமைய எதிர்வரும் 6ஆம் திகதி குறித்த பிரேரணையை எதிர்க்கட்சிகள் கொண்டுவரவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பின் தலைவராகச் செயற்பட்ட கே.பியிடமிருந்து திரட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிதிக்கு என்ன நடந்துள்ளது? சர்வதேச குற்றவாளியான கே.பிக்கு எதிராக அரசு ஏன் இன்னும் வழக்குத் தொடராமல் உள்ளது ஆகியன உட்பட முக்கிய பல கேள்விக்கணைகளை இவ்விவாதத்தின்போது எதிர்க்கட்சி

பார்க்க பக்கம் 4

## ஆசிரியர்களின் பிரச்சினைகள் இரு வாரத்தில் தீர வேண்டும்

### இல்லையேல் போராட்டத்தில் குதிப்போம் தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.25

தமது கோரிக்கைகள் தொடர்பில் இரண்டு வாரங்களுள் உரிய பதில் தர வேண்டும். தவறின் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம். கல்வி அமைச்சின் செயலாளருக்கு இவ்வாறு தொழிற்சங்கங்கள் அறிவிப்பு விடுத்துள்ளன.

12 தொழிற் சங்கங்கள் இணைந்து நேற்று கொழும்பில் பாதயாத்திரைப் பேரணி ஒன்றை நடத்தின. இதன்போதே கல்வி அமைச்சுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

" அமைச்சரவை அங்கீ

பார்க்க பக்கம் 4

## வயோதிப பெண்ணுக்கு கோடரி வெட்டு

கிளிநொச்சி, ஒக்.25

கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் தனித்திருந்த மூதாட்டி ஒருவரை நேற்றுமாலை வீடு புகுந்து இனம்தெரியாதவர்கள் கோடரியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் பலத்த காயமடைந்த வயோதிபப் பெண் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவத்தில் இரத்தினபுரத்

பார்க்க பக்கம் 4

## முல்லைத்தீவில் மீள்குடியேறிய மக்கள் தொடர்மழையால் அவதி

யாழ்ப்பாணம், ஒக்.25

கடந்த மூன்று தினங்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால், புதுக் குடியிருப்பு ஆகிய இடங்களில் அண்மையில் மீளக்குடியமர்ந்த சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்விட வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளன.

இந்த நிலைமை தொடர்பில் அம்பலவன் பொக்கணையில் அண்மையில் மீள் குடியேறிய ந. நவரட்ணம் என்பவர் கருத்து தெரிவிக்கையில்;

" செம்மன் குன்று, மாத்த

பார்க்க பக்கம் 4

### கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில்

## 21 காணித் துண்டுகளை கோருகிறது இராணுவம்

### வழங்கவும் சில அதிகாரிகள் முயற்சி

கிளிநொச்சி,ஒக். 25

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் சுமார் 21 காணித்துண்டுகளை இராணுவத் தேவைகளுக்கு வழங்குமாறு கோரப்பட்டு கரைச்சிப் பிரதேச செலயகத்துக்கு இராணுவத்தினர் கடிதம் அனுப்பியுள்ளனர். ஆனைவிழுந்தான்குளம், வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம், இரத்தினபுரம், திருவையாறு, கணேசபுரம், திருநகர் உள்ளிட்ட பகுதிகளில் பொது மக்கள், மற்றும் பிரதேச சபை ஆகியவற்றுக்கு சொந்தமான சுமார் பதினேழு காணித்

பார்க்க பக்கம் 4

## பிரிட்டனில் இருந்து 48 பேர் கட்டுநாயக்கா வந்தடைந்தனர்

### நீதிமன்றத் தீர்ப்பால் 12 பேர் தப்பினர்

கொழும்பு, ஒக்.25

பிரிட்டனில் இருந்து விசேட விமானம் மூலம் இலங்கைக்கு நாடுகடத்தப்படவிருந்த அகதிகளுள் 10 தொடக்கம் 12 பேர் வரையில் விமானத்தில் இருந்து இறக்கப்பட்டனர். அதே வேளை, 48 புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கையை வந்தடைந்தனர் என லண்டனில் வெளியாகும் த கார்டியன் பத்திரிகை செய்தி வெளி

பார்க்க பக்கம் 4

## '13' ஒழிப்புக் கோஷமும் சர்வதேசத்தின் சதியாம்

### திஸ்ஸ விதாரணவின் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஒக் 25

13ஆவது திருத்தச் சட்டத்தை ரத்து செய்யுமாறு விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைகள் சர்வதேசச் சதித் திட்டமாக இருக்கக் கூடும் என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் சில தரப்பினர் 13ஆவது திருத்தச் சட்டத்தை ரத்து செய்யுமாறு முன்னொரு போதும்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா இலங்கையையே விழுங்கும் போது சீனர் வைரக்கல் விழுங்கியது அதிசயமா?

## சபையை 'கொல்' என சிரிக்க வைத்தார் தயாசிறி

மஹிந்த சிந்தனை ரணசிங்க பிரேமதாசவினால் உருவாக்கப்பட்டதல்ல. அது மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டது. அதனைப் பற்றித்தான் கேள்வி கேட்டிருந்தேன் அதற்கு நேரடியாகப் பதிலளித்தால் போதும் என வீடமைப்பு புனர்நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு அறிவுரை கூறினார், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்கப் பிரேமதாசவின் புதல்வரும், அம்பாந்தோட்டை மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே இப்படியொரு சுவாரஷ்யமான சம்பவம் இடம்பெற்றது.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒருமணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

### நவம்பர் எட்டில் வரவு-செலவுத் திட்ட உரை

2013ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என்றும் அதற்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தொடர்பாகவும் உத்தியோகபூர்வ அறிவித்தல் ஒன்றை விடுத்தார் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி.

### விடை கிடைக்காத வினாக்கள்

வழமைபோல் நாடாளுமன்ற ஒழுங்குபடுத்தலில் வாய்மூல விடைக்கான பதினைந்து கேள்விகள் குறிப்பிடப்பட்டிருந்தன. அவற்றுள் பெருமளவிலானவை மூன்று தடவைகளுக்கு மேல் கேட்கப்பட்டுப் பதிலளிக்க கால அவகாசம் கேட்கப்பட்டவை. அதேபோல் இன்றும் பன்னிரெண்டு வினாக்களுக்கு விடையளிக்கக் கால அவகாசமே கேட்கப்பட்டது. உரிய பதில்கள் கிடைக்கவில்லை.

### வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு 15, 000 வீடுகள் எப்போது

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு 15, 000 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உங்களுடைய அமைச்சின் மூலம் இதுவரை எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு. எத்தனை பேருக்கு வீடுகள் தேவை என்ற புள்ளி விவரம் இருக்கின்றதா? என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச வீடமைப்பு நிர்மாணத்துறைகள் அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.




### 6197 மில்லியனில் 8858 வீடுகள்

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தனது அமைச்சின் மூலம் 6197 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 8858 வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். இந்த இடத்தில் இடைமறித்தார் சஜித் பிரேமதாச. நீங்கள் 15, 000 வீடுகள் என்கின்றீர்கள் ஜனாதிபதி 15 லட்சம் வீடுகள் என்கிறார்கள். எதுவும் நடந்தபாடில்லை. வடக்கு- கிழக்கில் எத்தனை பேருக்கு வீடுகள் தேவை என்ற விவரமாவது உங்களிடம் உண்டா என்று கேட்டார்.

### நாம் மட்டுமல்ல பல அமைப்புகள் வீடுகளைக் கட்டுகின்றன

இது தொடர்பாக நான் ஏற்கனவே கூறிவிட்டேன். பாதுகாப்பு அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, சமுர்த்தி மீள்குடியேற்ற அமைச்சு என்பனவும் தொண்டர் நிறுவனங்களும் வீடுகளைக் கட்டி உள்ளன. இந்திய அரச 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது என்றார் அமைச்சர் விமல் வீரவன்ச.

**இந்திய வீடு- 5 லட்சம் ரூபா**
**நமது வீடு - 3½ லட்சம் ரூபா**

இந்தியா 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ள போதும், வீடுகளைக் கட்டுவதற்கு தகுதியான இடமும் பயனாளிகளின் பெயர்ப் பட்டியலும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதால்தான் இந்திய வீட்டுத் திட்டம் தாமதப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றதே என கிண்டிவிட்டார் சஜித் பிரேமதாச.

### நீங்கள் இந்தியப் பிரதிநிதியா? அல்லது தூதுவரா?

சஜித் பிரேமதாசவின் கேள்வி விமல் வீரவன்சவுக்கு கடுப்பை ஏற்றிவிட்டது. நாம் சகலவிவரங்களையும் தக்க சமயத்தில் கொடுத்துள்ளோம். நீங்கள் என்ன இந்திய அரசின் பிரதிநிதியா? அல்லது இந்தியத் தூதுவரா?

மஹிந்த சிந்தனையின் படி நாம் எமது வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றோம். இந்தியா ஒரு வீட்டைக் கட்டுவதற்கு 5 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. நாங்கள் 3½ லட்சம் ரூபாவில் வீடுகளை அமைக்கின்றோம். இங்கே 'றோ' அமைப்பிடம் பணம் பெறுபவர்கள் தான் வெறுமனே அலட்டிக்கொள்கின்றனர் எனப் பதிலடி கொடுத்தார் அமைச்சர் விமல் வீரவன்ச.

### சூடான விவாதம் சுவையான விடயங்கள்

இதனால் இருவருக்குமிடையில் சூடான விவாதம் ஏற்பட்டது. அப்போது முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்கப் பிரேமதாசவின் பெயரும் சபையில் இழுக்கப்பட்டது.

பிரேமதாச ஜனாதிபதியாக, பிரதமராக மட்டுமன்றி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராகவும் இருந்தார். அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தின் கீழ் 5 லட்சம், 10 லட்சம், 15 லட்சம் வீடுகளைக் கட்டுவோம் என்று கூறினார். ஆனால் 45 ஆயிரம் வீடுகளை மட்டுமே கட்டினார். பிரேமதாச கூறியபடி வீடுகளை அமைத்திருந்தால் இன்று நாட்டின் மக்களை விட வீடுகளே அதிகமாக இருந்திருக்கும் என்றார் அமைச்சர் விமல் வீரவன்ச.

### மஹிந்த சிந்தனை ரணசிங்க பிரேமதாசவுடையதல்ல

அமைச்சர் எப்போதும் இடக்கு முடக்காகப் பேசுவதில் கெட்டிக்காரர். நான் மஹிந்த சிந்தனை தொடர்பாகத் தான் கேள்வி எழுப்பினேன். அவர் பிரேமதாச பற்றிப் பேசுகின்றார். பாவம் அறியாதவர்.

### ஒரு மணி நேரத்தில் 11 வீடுகள்

அமைச்சர் கூறுகின்றார் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன் ஆறு லட்சம் வீடுகள் கட்டப்படும் என்றார். அப்படியானால் ஒரு மணி நேரத்தில் 11 வீடுகளைக் கட்டி சாதனை படைத்துவிடுவார்களோ என்றும் ஒரு கேள்வியை மீண்டும் எழுப்பினார் சஜித் பிரேமதாச.

### பிரேமதாச உயிருடன் இருந்தால் தற்கொலை செய்து கொள்வார்

இந்த உறுப்பினர் இடக்கு முடக்காகப் பேசுகின்றார். பிரேமதாச ஜனாதிபதியாகவும் அமைச்சராகவும் இருந்தபோது இவர் வெளிநாட்டில் இருந்தார். இங்கே இருந்திருந்தால் வீட்டைக் கட்ட எவ்வளவு சிமெந்து, எவ்வளவு கற்கள், எவ்வளவு சுண்ணாம்பு செலவிடப்பட்டது என்று அவரிடமே கேள்ளி எழுப்பி இருப்பார்.

இன்று அவர் உயிருடன் இருந்தால் இப்படியொரு பிள்ளையைப் பெற்றோமே என்று தற்கொலை செய்து கொண்டிருப்பார் என்று திருப்பி அடித்தார் அமைச்சர் விமல் வீரவன்ச.

இப்படியான சூடான வாதப் பிரதிவாதங்களுடன் கேள்விநேரம் முடிந்தது.

கேள்விகளுக்கு விடைகள் கிடைக்காவிட்டாலும் விமல்- சஜித் விவாதம் சூடாகவும் சுவாரஷ்யமாகவும் இருந்தது.

### காப்புறுதி தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்ட வரைவு

இதனைத் தொடர்ந்து வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம காப்புறுத் தொழிலை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான திருத்தச் சட்ட வரைவை சபையில் சமர்ப்பித்தார். இந்த விவாதத்தில் ஆளும் தரப்பினரை விட எதிர்த் தரப்பினரே கூடுதலாகப் பங்கு கொண்டனர்.

### சீனா நமது நாட்டையே விழுங்கப்போகின்றது ஒரு சீனர் இரத்தினக் கல்லையே விழுங்கிவிட்டார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினராக தயாசிறி ஜயசேகர பல விடயங்களைப் புட்டு வைத்தார். அதாவது இன்றைய அரசாங்கம் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் நாட்டின் பெரும்பகுதியை கொடுக்கப்போகின்றது. சீனா நமது நாட்டையே விழுங்கப் போகின்றது. இப்படியான ஒரு நிலையில் கண்காட்சிக்கு வந்த ஒரு சீனர் இரத்தினக் கல்லை விழுங்கியது ஒன்றும் ஆச்சரியமில்லை என்றார்.

இந்தியாவுக்கும் - றோ அமைப்புக்கும் எதிராக வீரம் பேசுபவர்கள் இரகசியமாக ஒப்பந்தங்களை செய்வது ஏன்?

அமைச்சர் விமல் வீரவன்ச 13ஆவது திருத்தத்தை ஒழிப்போம் என்கின்றனர். இந்திய அரசையும் றோ அமைப்பையும் காரசாரமாக விமர்சிக்கின்றார். சபையில் தான் ஒரு தேசிய வீரர் போன்று பேசுகின்றார். அதேவேளை இந்தியாவுக்கும் போகின்றார். அரசாங்கம் பல உடன்படிக்கைகளைச் செய்து கொள்கின்றது, காணிகளை வழங்குகின்றது. இலங்கை- இந்திய உறவைப் பலப்படுத்துவோம் என்றும் கூறுகின்றார். ஏன் இந்த இரட்டை வேடம் என்றும் கடுமையாக விமர்சித்தார் தயாசிறி ஜயசேகர.

13ஆவது திருத்தத்தை மேலும் பலப்படுத்துவோம் என்கிறார் அரச தரப்பு எம்.பி.

இன்று நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது 13ஆவது திருத்தம். ஜனாதிபதியின் சகோதரர்களாக கோத்தபாய, பஸில் ஆகியோருடன் அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க உட்பட சிலர் 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டுமென பொதுவாகப் பரப்புரை செய்கின்றனர்.

ஆனால் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினராக அருந்திக்கப் பெர்ணாண்டோ இந்த அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை மேலும் பலப்படுத்தும். பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம். தனிப்பட்ட நபர்களின் கருத்துகள் அரசின் கருத்துகள் அல்ல என்றும் குறிப்பிட்டார்.

# தமிழ்ப் பெண் அரசியல் கைதிகளுக்கு வெலிக்கடையில் பாலியல் கொடுமைகள்

## பாதுகாப்புச் செயலருக்கு முறையிட முடிவு

யாழ்ப்பாணம், ஒக்.25

அரசியல் யாப்புக்கு முரணாக இராணுவத்தினரும், கடற்படையினரும் தமிழ்ப் பெண் அரசியல் கைதிகளை மிகக் கேவலமான முறையில் முழு நிர்வாணமாக்கிச் சோதனை என்ற பெயரில் பாலியல் ரீதியான கொடுமைகளைச் செய்ததாக வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண் அரசியல் கைதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கடிதம் மூலம் முறையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முறையற்ற சோதனை நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி அனுப்பப்படவுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :-

சிறைத்துறைச் சட்டத்தின்படியும், விதிமுறைகளுக்கமைவாகவும் சிறைக் கைதிகளைச் சிறை அதிகாரிகள் தவிர வேறு பிரிவினர் சோதனை செய்வது முறையற்ற செயல். ஆனால் நீதிக்குப் புறம்பான வகையில் இவற்றை எல்லாம் மீறி கொழும்பு நகரில் அமைந்துள்ள மூன்று பிரதான சிறைகளிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெலிக்கடை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை, புதிய சிறைச்சாலைகளில் இராணுவத்தினர், கடற்படையினர் சட்டத்துக்கு முரணான வகையில் சோதனைகளை மேற்கொள்கின்றனர்.

மிகவும் கேவலமான முறையில் முழு நிர்வாணமாக்கி, பத்து, பதினைந்து தடவைகள் இருத்தி எழுப்பி, கேலிச் சிரிப்புகளுக்கு நடுவில் சோதனை என்ற பெயரில் பாலியல் ரீதியான சித்திரவதைகள் இடம்பெறுகின்றன.

வெலிக்கடைப் பெண்கள் பகுதியில் உள்ள பெண் அரசியல் கைதிகளை மிகவும் மிலேச்சத்தனமான முறையிலும் கீழ்த்தரமான வகையிலும் பெண் அதிகாரிகள் சோதனை செய்கின்றனர். இதன்போது இழிவான சொற்பிரயோகங்களையும் மேற்கொண்டு எம்மை வதைக்கின்றனர்.

இவையனைத்தும் சிறை அதிகாரிகளின் பூரண பாதுகாப்புடன் விலங்கிடப்பட்டு நீதிமன்ற தவணைகளுக்கும், வைத்திய பரிசோதனைகளுக்காகவும் சென்று வரும் போதே நடைபெறுகின்றன. அவர்களுள்ளேயான நம்பிக்கையீனமான நிலையில் நாம் பாதிக்கப்படுவது சரியானதா?

இந்த நிலையைச் சுட்டிக்காட்டிய இரண்டு கைதிகள் அண்மையில் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

பெண்களாகிய நாம் எத்தனை துன்பங்களுக்கு முகம் கொடுத்து வெளியில் சொல்ல முடியாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கையும் தாக்கல் செய்ய எண்ணியுள்ளோம். ஏனைய சிறைச்சாலைகளில் இடம்பெறும் நடவடிக்கைகளைப் போல் இந்த சிறைச்சாலைகளிலும் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற உறுதிசெய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# பல்கலையில் குறும்படம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட ஊடகக் கற்கை மாணவர்களினால் உருவாக்கப்பட்ட 'பயணங்கள்' குறுந்திரைப்பட வெளியீடு நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

மாணவன் என்.கஜிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த திரைப்பட வெளியீட்டில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக கலைப் பீடப் பீடாதிபதி எஸ்.சிவநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஜ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுகூட உத்தியோகத்தர் போதியளவு இங்கு இல்லை

## வைத்தியசாலைகளில் நோயாளர் பாதிப்பு

*யாழ்ப்பாணம், ஒக்.25*

***யாழ்.மாவட்டத்தில் பல்வேறு நோய்கள் காணப்படுகின்றபோதிலும் இந்த நோய்களைக் கண்டறியக் கூடிய ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் போதிய அளவு இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.***

மாவட்டத்தில் மாகாண சுகாதார அமைச்சுக்கு உட்பட்ட நான்கு ஆதார வைத்தியசாலைகள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் உள்ளன. 5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர்.

இந்த மக்களுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறியக் கூடிய ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் நால்வர் மட்டும் கடமையாற்றி வருகின்றனர். அவர்களில் ஒருவர் மீள்நியமனத்தில் கடமையாற்றுகிறார்.

நான்கு ஆதார வைத்தியசாலைகளில் ஊர்காவற்றுறை, சாவகச்சேரி ஆகிய ஆதார வைத்தியசாலைகளில் நிரந்தர ஆய்வுகூட உத்தியோகத்தர் இல்லை. நால்வரில் இருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையிலும் ஒருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலும் ஒருவர் நடமாடும் ஆய்வுகூட சேவை வாகனத்திலும் கடமையாற்றுகின்றனர்.

ஆய்வுகூட வைத்திய சேவையில் இணைந்து பயிற்சி பெற தமிழர்கள் எவரும் முன்வராததும் இதற்கு ஒரு காரணமாக அமையலாம்.

வைத்தியசாலைகளில் ஆய்வுகூட உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்கள் தனியார் வைத்தியசாலைகளின் ஆய்வுகூடங்களில் கடமையாற்றுகின்றனர். மீள் நியமனத்தில் கிடைக்கும் வருமானத்தை விட பெருமளவு வருமானம் 'தனியார் நிறுவனங்களால் வழங்கப்படுவதால் ஓய்வுபெற்றவர்கள் மீள் நியமனத்துக்கு விண்ணப்பிப்பதில்லை.

ஆய்வுகூட உத்தியோகத்தர் நியமனங்கள் மத்திய சுகாதார அமைச்சினால் வழங்கப்படுவதால் தென்னிலங்கையைச் சேர்ந்த எவரும் யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்ற விரும்புவதில்லை. இதனால் வடக்கு மாகாணத்துக்கு வழங்க வேண்டிய நியமனங்களை வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டப் பொது வைத்தியசாலைகளுக்கு வழங்கி இரண்டு வருடங்களின் பின்னர் அவர்களின் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

இதனால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு யாழ். மாவட்ட வைத்தியசாலைகளுக்கு ஆய்வுகூட அலுவலர்களை நியமிக்க முடியாமல் திண்டாடி வருகிறது.

ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் வைத்தியசாலைகளில் இல்லாததால் நோயாளர்கள் தனியார் ஆய்வுகூட நிலையங்களில் பணம் செலுத்தி பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. (த-9)

## சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் மேலும் 180 பயனாளிகளுக்கு



யாழ்ப்பாணம், ஒக்.25

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 180 பயனாளிகள் நேற்று புதன்கிழமை இணைந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் சுமண ஆரியரட்ண கலந்துகொண்டு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்ட பயனாளிகளுக்குப் புத்தகங்களைக் கையளித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 540 பயனாளிகள் இத்திட்டத்தில் இணைந்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

### 20 பயனாளிகளுக்கு ஓய்வூதிய உறுதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஒக்.25

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளாகவுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 20 பேருக்கு உறுதிப்பத்திரம் கொழும்பில் இருந்து வந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் வைத்து அவை வழங்கப்படவுள்ளன என்று சமூகப் பாதுகாப்புச் சபையின் தலைவர் திருமதி சுமண ஆரியரட்ண தெரிவித்தார். (த-7)

## ஒரு கிராமம் இரு பெயர்கள்

### இறுதிப் பெயருக்கு நீதிமன்றை நாட முடிவு

*யாழ்ப்பாணம், ஒக்.25*

*வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஒரு கிராமத்துக்கு இரு பெயர்களை முன்வைத்து இரண்டு குழுக்கள் நீதிமன்ற உதவியை நாடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.*

*சிந்துபுரம் என்ற பெயரை முன்னிறுத்தி ஒரு சாராரும் சிவன் கோயிலடி என்ற பெயரை முன்னிறுத்தி இன்னொரு சாராரும் நீதிமன்றம் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*நீண்ட காலமாக வலி. மேற்குப் பிரதேச சபை - பிரதேச செயலகங்களில் ஆராயப்பட்டும் இதுவரை முடிவுறுத்தப்படாத நிலையிலேயே நீதிமன்றம் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ -50)*

## கிடைக்குமா மின்சாரம்?

தென்மராட்சி, ஒக்.25

கொடிகாமம் கெற்பேலி மத்திப் பிரிவுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்விநியோகம் வழங்கப்படுமா என அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கெற்பேலி கிராமத்துக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை கெற்பேலி மத்திப் பிரிவுக்கு மின்விநியோகம் கிடைப்பதற்குரிய எந்தவொரு பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.


கெற்பேலி கிழக்கு, மேற்கு ஆகிய பிரிவுகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ள போதிலும் மத்திப் பிரிவுக்கு இதுவரை எந்தவொரு பணிகளும் இடம் பெறாததால் தமது பிரிவுக்கு வடக்கின் வசந்தம் திட்டம் கிடைக்குமா எனக் கேட்டுள்ளார்.

மின் விநியோகம் இல்லாமைால் மாணவர்களின் கல்வியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது இந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் நலன்கருதி விரைவில் மின்விநியோகம் வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளனர். (த-9)

### நல்லூர் பிரதேச சபை நடமாடும் சேவை

நல்லூர் பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கொக்குவில் மேற்கு பிடாரி அம்மன் கோயில் சனசமூக நிலைய முன்றிலில் நாளை வெள்ளிக்கிழமை நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. இதில் ஆதன பெயர் மாற்றம், கட்டட விண்ணப்பம், வியாபார உரிமம் தொடர்பான நிலைப்பாடு மற்றும் பொதுமக்கள் ஆலோசனைகள், ஆயுள்வேத நூலக சேவைகளும் கொக்குவில் உப அலுவலக உத்தியோகத்தர்களால் வழங்கப்படவுள்ளது. (த)

## செம்மணி இந்து மயானத்தில் மின் உலை அமைக்க அடிக்கல்



யாழ்ப்பாணம், ஒக்.25

செம்மணி இந்து மயானத்தில் மின்சாரத்தில் உடல்களைத் தகனம் செய்யும் மின் உலை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சமய சமூகப் பெரியார்கள் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். பொதுமக்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை கேட்டுள்ளது. (த-7)

## நெற்செய்கை ஆரம்பித்துள்ளதால் கால்நடைகளைக் கட்டிவையுங்கள்

### காரைநகர் பிரதேச சபைத் தலைவர் கோரிக்கை

காரைநகர், ஒக்.25

காரைநகர் பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்களில் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கால்நடை வளர்ப்போர் அவற்றை கட்டி வளர்க்குமாறும் மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனக் காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் தெரிவித்துள்ளார்.

நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கால்நடைகள் பல வயல் நிலங்களை அழித்து வருகின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. வயல் நிலங்களில் காணப்படும் கால்நடைகளைப் பிடிப்பதற்கு பிடிகாரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களால் பிடிக்கப்படும் கால்நடைகளை உரிய தண்டப் பணம் செலுத்தி உரியவர்கள் பெற்றுக் கொள்ளத் தவறும் பட்சத்தில் அவற்றை மூன்று தினங்களின் பின் ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-250)

## யாழ்.கலைஞர்கள் தயாரிப்பில் விரைவில் வருகிறது திரைப்படம்

யாழ்ப்பாணம், ஒக் 25

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக தென்னிந்திய திரைப்பட சாயலில் யாழ்ப்பாணக் கலைஞர்கள் தயாரித்து வழங்கும் முழு நீளத்திரைப்படம் இந்த வருட இறுதிக்குள் வெளியிடப்படவுள்ளது.

நல்லூரான் பிக்சர்ஸ் வழங்கும் 'என்னுள் என்ன மாற்றமோ' திரைப்படத்தில் யாழ்ப்பாணக் கலைஞர்கள் பாடல்,நடிப்பு, பின்னணிக் குரல் ஆகியவற்றை வழங்குவதுடன் யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற இடங்களில் பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

இதுவரை குறும்படங்களைத் தயாரித்து வெளியீடு செய்து வந்த குறித்த நிறுவனம் இரண்டு வருடங்களாக 'என்னுள் என்ன மாற்றமோ' திரைப்படத்துக்கான காட்சிகளைத் தயாரித்துள்ளது.

ஈழக் கலைஞர்களுக்கு சினிமாத்துறையில் இருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தும் நோக்குடனும் யாழ்ப்பாணத் திரைப்பட வரலாற்றை எடுத்துக் கூறும் வகையிலும் இந்தப் படம் வெளியிடப்படவுள்ளதாக திரைப்படத்தின் இயக்குநர் கவிமாறன் தெரிவித்தார்.

முழுநீளப் படங்கள் தென்னிந்தியாவில் இருந்து வெளியிடப்படுவதையே அதிகமான ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர். மக்கள் எதிர்பார்க்கக் கூடிய கதை, பாடல்,காட்சிகள் என்பவற்றை இந்தத் திரைப்படம் வழங்குவதுடன் வருட இறுதிக்குள் யாழ்ப்பாணத்தில் பிரபல திரையரங்குகளில் இதனை வெளியீடு செய்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக திரைப்படத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார். (த-14)

## திருக்குடும்ப கன்னியர் மடத்தின் 150ஆவது ஆண்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் 150 ஆவது ஆண்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமலமரித் தியாகிகள் சபை மாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளாரும், கௌரவ விருந்தினராக திருக்குடும்பக் கன்னியர்சபை வட மாகாண முதல்வர் அருட்சகோதரி லோலண்ட் மத்தியாள், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.குணநாதன், பழைய மாணவர் சங்கத் தலைவிகள் செல்வி. வயலற் இம்மானுவேல், திருமதி நவமலர் கனகசுந்தரி, திருமதி மல லிகா பாலநாதன், திருமதி கெலான றொட்ரிக்கோ ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் "familian Flame" என்ற பொன் விழா சஞ்சிகை வெளியிடப்படுவதுடன் பாடசாலையின் மூத்த அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (த-14)

### அதிபர்களுக்கான கூட்டம் இன்று

தென்மராட்சி,ஒக்.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று மு.ப 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கரித்த, இடைக்கால சம்பள பிரேரணையை உடன் நடைமுறைப்படுத்த அதிபர், ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பை நிலுவையுடன் வழங்கு, அதிபர்,ஆசிரியர்களின் பதவி உயர்வுகளை உடன் வழங்கு'' '' சம்பள நிலுவை வீடமைப்பு கடன் உள்ளிட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு உரித்தான அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் அவசியமான நிதியை ஒதுக்கீடு செய், மொத்த தேசிய உற்பத்தியின் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்'', கல்வித்துறையை அரசியல் மயப்படுத்துவதை உடன் நிறுத்தி இலவசக் கல்வியின் பாதுகாப்பை உறுதிப்படுத்து'' ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் பாத யாத்திரை போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பு இராஜகிரிய என்.எம். பெரேரா சிலை அருகாமையிலிருந்து ஆரம்பித்த இந்தப் பாத யாத்திரை 6 கிலோமீற்றர் 2.30 மணித்தியாலயங்கள் நடைபவனி இசுரு உள்ள கல்வி அமைச்சு முன்பாகச் சென்றடைந்தது. நாடளாவிய ரீதியில் சுமார் 3 ஆயிரத்து 500 அதிபர், ஆசிரியர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர். 12 தொழிற் சங்கங்கள் தலைவர்கள் ஒன்றிணைந்து கல்வி அமைச்சரைச் சந்தித்து மனு கையளிப்பதாக ஒரு மாதத்துக்கு முன்னரே அவருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் அமைச்சில் அவரைச் சந்திக்க முடியவில்லை. பின்னர் அமைச்சின் செயலாளர் கோத்தபாயவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. தமது பாதயாத்திரை போராட்டம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் யோசப் ஸ்ராலின் கருத்து தெரிவிக்கையில்,

இரண்டு வாரங்களில் தமது கோரிக்கைகள் தொடர்பான பதில் வழங்கப்படல் வேண்டும். தவறின் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

கடந்த ஜூன் மாதம் இதே போராட்டம் நடந்தது. அவகாசம் வழங்கியிருந்தோம். பதில் தரப்படவில்லை. இதுவரையும் அது பற்றி பதிலளிக்கவில்லை என்றார். (ஐ-4)

## கேள்விகளுக்குப் பதில் அளிக்க சபையில் அமைச்சர்கள் அவசியம்

கொழும்பு, ஒக்.25

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களால் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் கட்டாயமாக சபையில் இருக்க வேண்டும். இல்லையேல் பதில் அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும் என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

இன்று(நேற்று) ஒழுங்குப் பத்திரத்தில் 15 கேள்விகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் மூன்று கேள்விகளுக்கு மட்டுமே பதில்கள் வழங்கப்பட்டன. பெருமளவான கேள்விகள் மூன்றாவது தடவையாகவும் கேட்கப்பட்டவை. ஆனால் பதில் வழங்க தொடர்ச்சியாக கால அவகாசம் கேட்கப்படுகின்றன. இது கேள்வி கேட்கப்படும் உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி நாட்டு மக்களையும் ஏமாற்றும் ஒரு செயலாகும் என ஜே.வி.பி. உறுப்பினரான அனுர குமார திஸாநாயக்க சபையில் சுட்டிக்காட்டினார். (த-2)

## 21 காணி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துண்டுகள் தற்போது இராணுவத் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றதுடன் அவற்றை தமக்கு வழங்குமாறும் விண்ணப்பித்துள்ளனர்.

அதற்கு மேலதிகமாக 4 காணித் துண்டுகளையும் தமக்கு வழங்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இராணுவத்தினரால் விண்ணப்பிக்கப்பட்ட காணித் துண்டுகளை வழங்குவதற்கு சில அரச அதிகாரிகள் விருப்பம் தெரிவிப்பது மட்டுமல்லாமல், அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-6)

## கே.பி....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யினர் தொடுக்கவுள்ளனர்.

இவ்வார நாடாளுமன்ற அமர்வுகள் இன்றுடன் முடிவுக்குவருகின்றன. குறிப்பாக இன்று நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் முழுநாள் விவாதம் நடைபெறவுள்ளது.

இதனையடுத்து அடுத்த மாதத்திற்கான சபை அமர்வுகள் 6ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதன் போதே கே.பி. தொடர்பில் விவாதம் நடைபெறவுள்ளது.

கே.பிக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு எவ்வித சாட்சியங்களோ அல்லது தடயங்களோ இல்லையென அரசு அண்மையில் தெரிவித்திருக்கும் நிலையிலேயே எதிர்க்கட்சிகள் இந்தப் பிரேரணையைக் கொண்டுவருகின்றன.

அதேவேளை, இந்த விவாதத்தின்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் காத்திரமான உரைகளை நிகழ்த்தவுள்ளனர் என அறியமுடிகின்றது. (த-சி)

## பிரிட்டனில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யிட்டுள்ளது.

இறுதி நேரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த தடையுத்தரவு கோரல் மனுவின் அடிப்படையில், நீதிமன்றம் குறித்த 10 - 12 பேரை நாடு கடத்த வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளது.

அவர்களின் வழக்குகளில் வாதாடிய சட்டத்தரணிகள் இந்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதற்கு எதிராக சுமார் 12 சட்ட அமைப்புகள் மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தன.

இந்த மனு மீதான விசாரணையை அடுத்து, தமது கட்சிக்காரர்கள் பலரை நாடுகடத்த தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது என குறைந்தது மூன்று சட்டஅமைப்புகள் உறுதி செய்துள்ளன.

இலங்கைக்கு இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால், கைது, சித்திரவதை, உயிர் அச்சுறுத்தல் ஆபத்து இருக்கிறது எனவும் சட்டவாளர்கள் வாதிட்டிருந்தனர்.

கட்டுநாயக்கா திரும்பிய 48 அகதிகளிடமும் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, இலங்கைக்கு அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிராக, ஹீத்ரோ விமான நிலையத்துக்கு அருகேயுள்ள குடிவரவுத் தடுப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

## அரசின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பல்வேறு தரப்பிலும் குரல் எழுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தற்போது இந்தியாவுக்கான பயணத்தை ஆரம்பித்துள்ள பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ 13 ஆவது திருத்தத்தின் நீக்கம் தொடர்பில் இலங்கை அரசு இறுதியான முடிவு எதனையும் எடுக்கவில்லையென இந்தியாவிடம் திட்டவட்டமாகத் தெரிவிப்பாரென மேற்படி அரச வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

(த-சி)

## வயோதிப...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தைச் சேர்ந்த சோமசுந்தரம் ஈஸ்வரிஅம்மா (வயது-70) என்பவரே படுகாயமடைந்தார்.

கொள்ளையிடும் நோக்கில் சிலர் இந்தச் செயலைச் செய்திருக்கலாம் என்ற பாணியில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

## பொன்சேகா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ணைய வேண்டும். அது நடக்காவிடின், இந்த நாட்டு மக்கள் பாரியளவில் துன்பங்களை அனுபவிப்பர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுவோ அல்லது கட்சியின் தலைவரோ தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்க முடியாது. அதே வேளை கட்சிக்குத் துரோகம் செய்பவர்களைத் தாலாட்டும் அளவுக்கு எமது கட்சி தரமிழந்து போகவில்லை.

கட்சித் தீர்மானத்துக்கு எதிராக நடந்துகொள்ளும் எவராயினும் நடவடிக்கை எடுக்கப்படும். கட்சிக்கென்றதொரு ஒழுக்கம் காணப்பட வேண்டும்.ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு இல்லை. செயற்குழுவிலும் பிளவு இல்லை. வேறு கட்சிகளில் கூட்டங்களுக்குச் செல்பவர்கள், தாங்கள் இந்த நாடாளுமன்றப் பதவிகளுக்கு வரக் காரணம் ஐ.தே.க. என்பதை மறந்துவிடக் கூடாது.

ஐக்கிய தேசியக் கட்சி இன்றி இவர்கள் ஒருவராலும் வெற்றி பெற்றிருக்க முடியாது. நாட்டின் எதிர்க்கட்சி ஐ.தே.க என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. சரத் பொன்சேகா எமது எதிரியல்ல. அவர் தொடர்பிலான எமது கொள்கை உண்மையானது.

அவர் சிறையிலிருந்து விடுதலையானதை அடுத்து ஐ.தே.க.வுடன் இணைந்துகொள்ளுமாறு உத்தியோகபூர்வ அழைப்பு விடுத்தோம். இருப்பினும் பல்வேறு காரணங்களை முன்வைத்த அவர் அந்த அழைப்பினை நிராகரித்தார்.

எந்தவொரு நபரும் கட்சிக்குள் வருவதற்கு ஒரு முறை உள்ளது. அவர் ஐ.தே.க.வுடன் இணைவதற்கான வாசற் கதவு எப்பொழுதும் திறந்தே உள்ளது. அவரால் ஏன் ஐ.தே.க.வுடன் இணைய முடியவில்லை? அவருடைய அரசியல் எதிர்காலம் ஐ.தே.க.வுடன் இணைந்தே உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, சரத் பொன்சேகா, பிக்கு முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, மனோ கணேசன், விக்ரமபாகு கருணாரத்ன ஆகியோர் நீண்ட காலமாகவே அரசுக்கு எதிரான கொள்கையில் இருப்பவர்கள்.

ஒரேயொரு இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டுமாயின் இவர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். விரைவில் அது நடக்காவிடின், இந்த நாட்டு மக்கள் பாரியளவில் துன்பங்களை அனுபவிப்பர்-என்றார்.

(த)

## 13 ஒழிப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இல்லாதவாறு வலியுறுத்தி வருகின்றனர். எதிர்வரும் நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அகில கால மீளாய்வு அமர்வுகள் நடைபெறவுள்ளன. இந்த அமர்வுகளில் இலங்கைக்கு நெருக்கடி நிலைமையை ஏற்படுத்த எத்தனிக்கும் சர்வதேச சக்திகள் 13ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்வது தொடர்பான கருத்துக்களை போதிப்பதாக அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். இதற்கு ஆளும் கட்சியின் சில தரப்பினரும் துணை போவதாக திஸ்ஸ வித்தாரண மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

## வடமாகாண...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

13ஆவது அரசமைப்புத் திருத்தம் இல்லாதொழிக்கப்படவேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் முன்வைத்துள்ள கருத்துக்கு அரச தரப்பில் ஆதரவு வலுத்துவரும் நிலையிலேயே அரசின் பங்காளியான எல்லாவல மேதானந்த தேரரும் கோத்தாவின் கூற்றுக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் பாதுகாப்புச் செயலாளரின் கூற்றை வன்மையாகக் கண்டித்திருந்தாலும், அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட அரச தரப்பின் முக்கிய புள்ளிகள் அதனை வரவேற்றுள்ளனர்.

இதனால் இந்த '13' விவகாரம் நாட்டில் பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. இந்நிலையில், 13ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் கருத்து வெளியிட்ட எல்லாவல மேதானந்த தேரர் மேலும் கூறியவை வருமாறு:-

13ஆவது அரசமைப்புத் திருத்தம் நாட்டின் அபிவிருத்திக்கும், நிர்வாகத்துக்கும் தடங்கலாக உள்ளது. எனவே, அரசு அதை உடனடியாக அரசமைப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மறுபுறத்தில், தனிநாட்டுக்கு வழிகோலும் வகையில் குறித்த திருத்தம் அமைந்துள்ளது. அதை உடன் நீக்காவிட்டால் நாடு கூறுகளாகப் பிளவுபடும் அபாயநிலையும் உள்ளது.

ஏனெனில், 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளிட்ட தனிநாட்டுக்கான விடயங்கள் உள்ளன. சிலவேளை, வடமாகாண சபை அமைந்தால் இந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனி ஈழத்துக்கான பிரகடனத்தை முன்வைக்கலாம். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது.

ஏலவே, 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கும் விடயத்தில் அரசு அசமந்தமாக இருந்தால் அன்று வரதராஜப்பெருமாள் செய்ததை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை நிச்சயம் செய்யும். இதனால், இந்த அபாயநிலைக்கு 13ஐ நீக்குவதே ஒரே தீர்வாக அமையும் - என்றார்.

(த-சி)

## சபைக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தீவிர பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும். அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ அறைகள், வாகனத் தரிப்பிடங்கள் அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்படும்.

வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் தினமான 8 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனத் தரிப்பிடம் மூடப்பட்டிருக்கும். இதற்குப் பதிலாக விசேடமாக ஒரு இடத்தில் வாகனத் தரிப்பிடம் ஏற்பாடு செய்யப்படும்.

சாரதிகள் இன்றித் தாமாக வாகனங்கள் செலுத்தும் உறுப்பினர்களின் வாகனங்களை விசேட தரிப்பிடத்துக்குக் கொண்டு செல்ல நாடாளுமன்றத்தின் சாரதிகள் விசேட கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

மனைவி மற்றும் அதிதிகளுடன் வரும் உறுப்பினர்கள் பொது நுழைவாயில் வழியாகவே வர முடியும்.

நவம்பர் 8ஆம் திகதி பார்வையாளர் கலரியில், அழைப்பு விடுக்கப்பட்டவர்களும், அதிதிகளும் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என பிரதி சபாநாயகர் நேற்று சபையில்அறிவித்தார். (ஐ-2)

## முல்லைத்தீவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ளன், புது மாத்தளன், இடைக்காடு, அம்பலவன் பொக்கணை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவில் சுமார் 360க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீடுகள் முழுமையாக அழிவடைந்துள்ளன. இறுதியாக மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடுகளை வழங்குவதற்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளி மாவட்டங்களில் இருந்து வந்தவர்கள் பற்றி எந்தவித கவனமும் செலுத்தப்படவில்லை அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். எனது குடும்பம் கடந்த மூன்று நாள்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் தறப்பாள் கொட்டகையின் கீழ் அவதிப்படுகிறது. எனக்கு ஆறு பிள்ளைகள், மனைவி என நாங்கள் 8 பேர், அந்தக் கூடாரத்துக்குள்ளேயே அவதிப்படுகிறோம். இரவு வேளைகளில் மழை பெய்தால் நித்திரையும் இல்லை. மழைகாலம் என்பதால் விஷ ஜந்துக்களும் அதிகம். அதற்கு பயம்தான் என்றார். இதே இடத்தில் தனது அவலத்தை விவரிக்கிறார் சி. இளங்குமரன். '' கடந்த போர் எமது வாழ்வையும் எமது சொத்துக்களையும் முழுமையாக அழித்து விட்டது.

இப்போ எதுவித வசதிகளும் இன்றி மீளக் குடியமர்ந்துள்ளோம். தற்போது நிவாரணம் மட்டும் கிடைக்கின்றது. வேறு எந்த உதவிகளும் இல்லை. மீள்குடியேறிய பகுதியில் உதவித் திட்டங்களை செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வாழ் வாதார உதவிகள் இல்லை, அரச அதிகாரிகளுக்கு இல்லை என பாகுபாடுகளை கட்டி வருகின்றன.

போர், அரச அதிகாரிகள், பொது மக்கள் என பாகுபாடு காட்டி இழப்புக்களை ஏற்படுத்தவில்லை. எல்லோருமே பாதிக்கப்பட்டவர்கள், இரண்டு நாள்களாக பெய்து வரும் கடும் மழையினால் நாங்கள் அவதிப்படுகின்றோம்.

36 அடி நீளமான மிகவும் விசாலமான வீடு கூரைகள் இன்றி குண்டுச் சிதறலினால் சேதமடைந்து கிடக்கிறது. நானும் எனது குடும்பத்தினரும் மாமரத்தின் கீழ் தறப்பாள் கொட்டகை ஒன்றினை அமைத்து அதில் பல்வேறு சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றோம் என்றார்.

நாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளோம் என்று மக்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் முல்லைத்தீவு அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது '' இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 37 ஆயிரம் குடும்பங்கள் வரையில் மீள்குடியேறியுள்ளனர். இதில் இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், மாத்தளன், அம்பல வன் பொக்கணை போன்ற பகுதிக ளில் உள்ளன. இவர்களுக்கு உதவி கள் முழுமையாகக் கிடைக்க வில்லை. எனினும் கட்டம் கட்டமாக பல்வேறு நிறுவனங்கள் உதவிகளைச் செய்து வருகின்றன.

சகலருக்கும் உதவித் திட்டங்கள் கிடைக்கும், அதற்குரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என எவரும் புறக்கணிக்கப்படவில்லை என்றார். (ஐ-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவது குறித்து இந்தியாவின் நிலைப்பாடுதான் என்ன...?

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளை ஒழிப்பதற்கு அரச உயர்மட்டத்தில் ஆதரவு அதிகரித்து வருகிறது. மாகாண சபைகளை உருவாக்குவதற்குக் காரணமாக அமைந்த அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதலில் முன்வைத்தவர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே.

அதன் பின்னர் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் அதற்கு ஆதரவாகக் குரல் எழுப்பினர். அதுமட்டுமன்றி, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும்படி ஜனாதிபதிக்கு ஆலோசனையும் தெரிவித்தனர்.

ஆகப்பிந்தி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் இதற்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளார். "வடக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 13 ஆவது திருத்தச் சட்டம் தடையாக இருந்தால், அதனைத் திருத்துவதோ அல்லது இல்லாமல் செய்வதோ தவறில்லை. அவ்வாறு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் போது சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவும் அரசு தயாராகவே உள்ளது என்று பஸில் ராஜபக்ஷ தமது அலுவலகத்தில் தமிழ் ஊடகவியலாளர்களை சந்தித்துப் பேசும்போது ஆணித்தரமாக வெளிப்படுத்தினார்.

அதாவது, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படுவது ஓரளவு உறுதியாகிவிட்டது. ஜனாதிபதியின் ஆதரவும் இதற்கு உண்டு. ஜனாதிபதியின் ஒப்புதல் இன்றி இந்தியா சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய ஒரு விடயம் குறித்து கோத்தபாயவும், பஸில் ராஜபக்ஷவும் கருத்துக் கூறியிருக்க முடியாது.

இறையாண்மை உள்ள ஒரு நாடு என்ற வகையில், எந்தவொரு சட்டத்தையும் திருத்தும் அதிகாரம் அரசுக்கு உண்டு. ஆனால், 13 ஆவது திருத்தம் வழமைப் பிரகாரம் உள்நாட்டின் முடிவை மட்டும் கொண்ட சட்டம் அல்ல. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் செய்து கொண்ட ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்டது. இதனை இலங்கை மீது திணிக்கப்பட்ட ஒன்றெனவும் கூறமுடியாது.

இலங்கை நாடாளுமன்றம் பெரும்பான்மை வாக்குகளினால் இதனை நிறைவேற்றி இருந்தது. அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, இந்த ஒப்பந்தம் மூலம் ஒரே கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தி இருந்தார். தெற்கில் ஜே.வி.பி.யின் கிளர்ச்சியை அடக்குவதற்கு வடக்கு, கிழக்கில் இருந்த இராணுவத்தை தெற்கே நகர்த்தவும் வடக்கு, கிழக்கில் இந்திய படையினரை நிலை கொள்ள வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோத விடவும் அவரால் முடிந்தது.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் இந்தியாவினால் திணிக்கப்பட்டது என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. ஜே.வி.பி.யினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் போராட்டங்களை அடக்குவதற்கு ஜே.ஆர் செய்த தந்திரோபாயமே அது!. ஜே.வி.பி. ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு விட்டு இப்போது அரசியலுக்குள் வந்து விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை இப்போதைய அரசு இல்லாமல் செய்து விட்டது. இத்தகைய நிலையில் அரசு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அடிப்படையாகக் கருதப்பட்டு வரும் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தையே ஒழிக்க முற்படுவது மிகவும் ஆபத்தான நகர்வாகும்.

மனித வள விவகாரம் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்திருப்பது போன்று, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் போராட்டத்தை இந்த நடவடிக்கை நியாயப்படுத்துகிறது. மற்றொரு ஆயுதப் போராட்டத்துக்கு வித்திடுகிறது.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கக் கூடாது என்று கருத்துக் கூறிவரும் இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் திஸ்ஸ விதாரண, அதனை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை, அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்குச் சங்கடத்தை உண்டாக்கும் சதி என்று வர்ணிக்கிறார்.

அத்தோடு நிற்காமல், இலங்கையின் கட்டுக்கோப்பைக் குலைப்பதற்கு முனைப்புடன் செயற்படுவோருக்கு, பதின்மூன்றாவது திருத்தத்துக்கு எதிராகக் குரல் கொடுப்போர் வெடிபொருள்களை வழங்குகிறார்கள் என்றும் உவமானம் காட்டுகிறார் அவர். அவ்வாறு கருத்துத் தெரிவிப்பதால், நாட்டுக்கு எதிர்மறையான விளைவுகளையே தரும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்த விவகாரத்தில், இந்திய அரசு தொடர்ந்தும் பார்வையாளராகச் செயற்பட முடியாது. இந்தியா தனது கவலையையும் அதிருப்தியையும் இலங்கைக்கு இராஜதந்திர மட்டத்தில் தெரியப்படுத்தியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை இந்த முக்கிய விவகாரத்தில் - இந்தியா சம்பந்தப்பட்ட பிரச்சினையில்- இந்தியா பகிரங்கமாக தனது கருத்தை தெரிவிக்காது இருப்பது பலவித ஊகங்களுக்கும் வழிவிட்டுள்ளது. அதன் மூலம், இலங்கைத் தமிழர் மீதான அதன் கரிசனை போலித்தனம் நிறைந்தது என்றாகி விடும்!

அரச அமைப்புக்கான 13ஆவது திருத்தம் நீக்கப்படுமானால், இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா இதுவரை மேற்கொண்ட சகல முயற்சிகளும் அர்த்தமற்றதாகி விடும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்கு ஆப்பு வைத்ததாகியும் விடும்!

ஆகவே, இலங்கை அரசியலில் இன்று உருவாகி இருக்கும் நிலைமை மிகவும் பயங்கரமானது. எந்தவொரு மாகாணத்திலும் தமிழ் மக்களோ முஸ்லிம் மக்களோ பெரும்பான்மையினராக இருக்க இயலாத விதத்தில், குடிப்பரம்பலை மாற்றும் விதத்தில், ஐந்து மாகாண சபைகள் உருவாக்கப்படும் திட்டம் குறித்து ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் எச்சரித்திருப்பது கூர்ந்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

முழு நாட்டையும் சிங்கள, பௌத்த நாடாக மாற்றுவதே அரசின் திட்டம். இனியும் இந்திய அரசு மௌனம் சாதிக்கக்கூடாது. கோத்தபாய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ இருவருமே 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ள நிலையில், அதுவே இலங்கை அரசின் தீர்க்கமான நிலைப்பாடு என்று கொள்ள வேண்டும். ஆகையால், இந்தியா தனது எதிர்ப்பைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் அல்லது தனது நிலைப்பாட்டையேனும் பகிரங்கப்படுத்த வேண்டும். செய்யுமா?

# நிகழ்ச்சித் திட்ட அலுவலர்கள் பிரமாணக் குறிப்பு வெளியானது

யாழ்ப்பாணம், ஒக் 25

நீண்ட காலத்தின் பின்னர் அரச பட்டதாரி அலுவலர்களுக்கான மாகாண அரச சேவையின் நிகழ்ச்சித் திட்ட அலுவலர் பிரமாணக் குறிப்பு வெளியாகியுள்ளது.

தேசிய சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழு சில பரிந்துரைகளை முன்வைத்து இதனை அங்கீகரித்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் மேலதிக செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட கோவைப் பிரமாணக் குறிப்பின்படி ஆளுநர்களால் அனுமதிக்கப்பட்ட திகதிகளில் இருந்து இதனை நடைமுறைப்படுத்த முடியும்.

மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்புப்படி நியமன அதிகாரியாக மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது பொது நிர்வாக செயலகம் இருக்கும்.

சம்பள வகுதி எம்.என் 4-2006 ஏ என்பதாகும்.

1 ஆவது ஆரம்பச் சம்பள படிமுறை 15215 ரூபாவும், 12 ஆவது ஆரம்பச் சம்பளப் படிமுறை 17605 ரூபாவும், 23 ஆவது ஆரம்பச் சம்பள படிமுறை 20925 ரூபாவும் ஆகும்.

அனுபவம், தொழில்சார் தகைமைகள் இன்றி அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றின் ஊடாக ஆள் சேர்ப்பு இடம்பெறும்.

தற்போது 17-5-1999 இற்குப் பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி நியமனத் திட்டத்தின் கீழான 60 ஆயிரம் பட்டதாரிகள் இந்தச் சேவைப் பிரமாணக் குறிப்பு ஊடாக உள்வாங்கப்படுவர்.

1999 இல் நியமனம் பெற்ற அரச நியமனப் பட்டதாரிகள் இந்தத் திட்டத்தில் முதல் பகுதியினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-50)

## ஐவருக்கு 'கலைப்பரிதி' விருது

யாழ்ப்பாணம்,ஒக்.25

வடமராட்சி வடக்குக் கலாசாரப் பேரவையினால் ஐவர் "கலைப்பரிதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை நடத்திய பண்பாட்டு விழா வடமராட்சி வடக்கு பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான சி.த.ஜெயசீலன் தலைமையில் பருத்தித்துறை அஞ்சலியக மண்டபத்தில் இடம்பெற்றபோது பருத்தித்துறைப் பிரதேச கலைஞர்கள் ஐவர் கௌரவிக்கப்பட்டனர்.

சிந்து நடைக் கூத்துக்காக கந்தவனம் இளையதம்பியும், இலக்கியத்துக்காக ஆரன் கந்தையாவும், பாரம்பரிய உடற்பயிற்சிக் கலைக்காக மாணிக்கவாசகம் இரத்தின சோதியும், இசை வாத்தியக் கலைக்காக காத்தமுத்து அமுதனும், மரச்சிற்பக் கலைக்காக வைரமுத்து விஜயகுமாரும் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (த-250)

## நவாலி வடக்கில் 'நேர்ப்' திட்டத்தில் வீடுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.25

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்கு - புலவர் வீதியில் 'நேர்ப்' திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஜே/134 நவாலி வடக்கு கிராம அலுவலரின் பரிந்துரையில் திருமதி கதிரமலை ஜெயராணி என்பவருக்கு 'நேர்ப்' திட்டத்தின் கீழ் இறுதியாக பரிந்துரை செய்யப்பட்ட வீடு கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நவாலி வடக்கில் மூன்று வீடுகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (த-50)

# 14 லட்சத்தைக் கடக்கிறது அரச ஊழியர் எண்ணிக்கை

### 5 லட்சத்தை எட்டுகின்றனர் ஓய்வூதியர்

கொழும்பு,ஒக்.25

இந்த ஆண்டின் இறுதியில் அரச ஊழியர்களின் எண்ணிக்கை 14 இலட்சங்களையும் கடக்கும் என்று நிர்வாக சேவை மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள 50 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுடன் இந்த எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் பி.பீ.அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

அரச ஓய்வூதியர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டிலிருந்து 5 இலட்சங்களைத் தாண்டுகிறது.

மேலும், கடந்த ஆண்டில் அரச ஊழியர்களின் சம்பளத்துக்கு 717 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுகளுக்கு 108 பில்லியன் ரூபா செலவாகியுள்ளது எனவும் அமைச்சின் செயலாளர் கூறினார்.

இந்த ஆண்டில் ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுகளை வழங்க மதிப்பிடப்பட்டுள்ள தொகை 111 பில்லியன் ரூபாவாகும். (த-22)

# குமரகுருபரனின் வேலைப்பளுவை குறைப்பதற்கே பதவி மாற்றங்கள்

### ஜனநாயக மக்கள் முன்னணி கூறுகிறது

யாழ்ப்பாணம், ஒக் 25

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஏற்கனவே செய்துவரும் பணிகளைச் செம்மைப்படுத்தும் விதமாகவும், நல்லையா குமரகுருபரனின் வேலைப் பளுவைக் குறைக்கும் விதமாகவுமே கட்சியில் பதவி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் எஸ்.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தேசிய தளத்தில் எமது கட்சியின் பணிகளும்,பங்களிப்புகளும் அதிகரித்து வருகின்ற சூழலில் அரசியல் பணிகளை முறைப்படுத்தும் நோக்கில் பதவி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தலைவர் மனோ கணேசன் ஏற்கனவே செய்துவரும் பணிகளைச் செம்மைப்படுத்தும் விதமாகவும், நல்லையா குமரகுருபரனின் வேலைப்பளுவைக் குறைக்கும் விதமாகவும், வெற்றிடமாக இருந்த கட்சியின் இரண்டாம் பதவி நிலையான பிரதித் தலைவர் பதவியை நிரப்பும் முகமாகவும், இந்தப் பதவி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தலைவர், பிரதித்தலைவர் உட்பட அனைத்து அரசியல் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு கருத்துப் பரிமாற்றங்கள் செய்து, ஏகமனதாக முடிவுகள் எடுக்கப்பட்டே மேற்கொள்ளப்பட்டன.

மேலும் தலைவருக்கு அடுத்த பதவி நிலையில் எமது பிரதித் தலைவர் நல்லையா குமரகுருபரன் பணியாற்றும் அதேவேளையில் சிரேஷ்ட உபதலைவராக வேலணை வேணியன், உதவிப் பொதுச் செயலாளராக எஸ்.குகவரதன், ஊடகச் செயலாளராக எஸ்.பாஸ்கரா ஆகிய நானும் வடக்கைச் சேர்ந்தவர்களே என தெரிவித்துக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (த-5)

# பொது இடங்களில் மது அருந்தினால் உடனடியாக எமக்கு அறியத்தாருங்கள்

### சுகாதார சேவைப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.25

பொது இடங்களில் மது பாவனை மற்றும் புகைத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவோரைக் கண்டால் மக்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆர்.கேதீஸ்வரன்.

பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மது பாவனை மற்றும் புகைத்தல் மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட புகைத்தல் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழு 'பொது இடங்களில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது' எனும் பாதாகைகள் மற்றும் ஸ்ரிக்கர்கள் ஒட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

புகைத்தலால் நுரையீரல் தாக்கம் ஏற்படுவதுடன் புகைப்பவருக்கு அருகில் இருப்பவர்களுக்கும் அதே பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இதனை பொது இடங்களில் தவிர்க்கவே இந்த செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் பொது இடங்களில் புகைத்தல் மதுபானச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை மக்கள் அவதானித்தால் மதுவரித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களத்திற்கும் பொலிஸூக்கும் தகவல் கொடுத்தால் உடனடி சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர்களை ஏற்றியிறக்கும் பணியில் ஓட்டோ வாகனம்



துணுக்காய், ஒக்.25

துணுக்காய் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்திலிருந்து நோயாளர்களை ஏற்றி இறக்கும் பணிக்கென ஓட்டோ ஒன்று வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார திணைக்களத்தினர் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இயங்கி வரும் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்துக்கு ஓட்டோவை வழங்கியதால் நோயாளர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

கடந்த 15 நாள்களாக இந்தப் பராமரிப்பு நிலையத்தில் வைத்தியர் இல்லாமையால் நோயாளர்கள் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். துணுக்காயிலுள்ள கல்விளான், ஆலங்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த மருத்துவமனையையே நம்பியுள்ளனர்.

இந்த நிலையில் நோயாளர்களை ஏற்றி இறக்கும் பணிக்காக வழங்கப்பட்ட ஓட்டோ நோயாளருக்குப் பயனுள்ளதாக விளங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைப்போன்று ஐயன்கன்குளம் மருத்துவமனையிலும் வைத்தியர் இல்லாத நிலைமையே காணப்பட்டது.

தற்போது ஒரு மருத்துவர் தினமும் இங்கு வந்து செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக கிராம மக்கள் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர். இவர்களை இந்த ஓட்டோ மூலமாக மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு ஏற்றி இறக்கும் நடவடிக்கை இடம் பெற்று வருவதாகவும் அறிய முடிகின்றது.

மேலும் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சகோதர மொழி பேசும் மருத்துவர்கள் கடமை புரிந்து வருவதால் மொழி புரியாத நிலையில் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஏற்கனவே மூன்று தமிழ் பேசும் மருத்துவர்கள் இங்கு கடமை புரிந்தனர்.

நோயாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு தமிழ் மொழி பேசும் வைத்தியர்களை மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கும், துணுக்காய் ஐயன்கன்குளம், நட்டாங்கண்டல் வைத்திய சாலைகளுக்கும் நியமிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(க-415)

## முன்னாள் போராளிகளை சந்தித்தார் புனர்வாழ்வு அமைச்சர் கஜதீர

### கரைதுறைப்பற்று செயலகத்தில்

நெடுங்கேணி, ஒக்.25

முல்லைத்தீவில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் பேராளிகளை புனர்வாழ்வு அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இந்த நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமானது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 450 பேருக்கு சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்குதல் தொடர்பாக இங்கு முக்கியமாக ஆராயப்பட்டது.

புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவுடன் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் விதானகே, ஆலோசகர் சி.ரதீஸ்குமார், புனர்வாழ்வு ஆணையாளர் தருசன ஹெட்டி ஆராய்ச்சி, புனர்வாழ்வு அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரி ஜினதாஸ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்ல ஆகியோர் உடன் இருந்தனர். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன் அவர்களுக்கான சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேலும் முன்னாள் போராளிகளின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. (க-435)

## மக்களை வெறுக்க வைக்கும் துணுக்காய் திருநகர் வீதி



துணுக்காய், ஒக்.25

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள திருநகர் பிரதான வீதி மோசமான நிலையிலுள்ளதால் போக்குவரத்தில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பாதையால் செல்லும் பயணிகள் தமது பயணத்தை வெறுப்புடனேயே மேற்கொள்கின்றனர்.

சுமார் 191 குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் வசித்து வருகின்றன. இந்தக் குடும்பங்கள் திருநகர் பிரதான வீதியையே தினமும் உபயோகித்து வருகின்றனர். ஆனால் இந்த வீதி பாவனைக்கு தவாத வகையில் மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றது.

இந்தக் கிராமத்தில் மக்கள் மீள்குடியமர்ந்து மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் அதிகாரிகள் எவரும் இதனைக் கவனிப்பதாக தெரியவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பகல் வேளையிலேயே இந்த வீதியில் செல்லும் போது அவலங்களை எதிர்கொள்ளும் மக்கள் இரவு வேளைகளில் இதில் செல்வதற்கு பெரிதும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைகாலமும் ஆரம்பமானதால் இந்த வீதியின் நிலை மிக மோசமாக மாறியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. (க-415)

# கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகம் ராணுவ மயமாக

### போரியல் வரலாற்றுச் சின்னமும் ஒரு பகுதியில் மாணவரின் கல்விச் செயற்பாடு பாதிப்பு

கிளிநொச்சி, ஒக்.25

கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகம் ஓர் இராணுவ மயப்படுத்தப்பட்ட பகுதியாக காணப்படுவதாக பெற்றோர் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சியின் முதல் நிலைப் பாடசாலையாக காணப்படும் கிளிநொச்சி மத்திய கல்லூரி கடந்த கால போர் காரணமாக மோசமான சேதங்களைச் சந்தித்த போதிலும் தற்போது வளர்ச்சி கண்டு வரும் பாடசாலையாகவே காணப்படுகின்றது. எனினும் பாடசாலை வளாகம் இராணுவ மயப்படுத்தப்பட்ட பகுதியாக காணப்படுகின்றது.

இராணுவத்தினரின் பிரசன்னம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கல்லூரி வளாகத்தின் ஒரு பகுதியில் இராணுவத்தின் போரியல் வரலாற்றுச் சின்னம் பெரியளவில் நிறுவப்பட்டு அதனைச் சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகமாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதனைவிட பாடசாலை விளையாட்டு மைதானம் தொடர்ந்தும் இராணுவத்தினரின் பாவனையில் உள்ளது. இராணுவத்தினர் இதனைப் பயன்படுத்தி வருவதால் பாடசாலை வேளைகளில் மாணவர்கள் மைதானத்தைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும் இராணுவத்தினரின் பிரசன்னம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகவும் பெற்றோர் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர். (க-6)

## மின்சாரம் இல்லாததால் சிரமங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சில கிராமங்களுக்கு மின்னிணைப்புகள் வழங்கப் படாததால் அந்தக் கிராம மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது.

உடையார் கட்டு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம், கைவேலி, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலுள்ள ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு இன்னமும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

தற்போது முல்லைத்தீவிலும் மின்சார சபையின் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. மின்சார இணைப்புக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இங்கேயே விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்திய பின்னர் ஒப்படைக்க வேண்டுமென மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். (க-555)

## நவராத்திரிப் பொதிகள்

முல்லைத்தீவு, ஒக்.25

ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் நவராத்திரியை முன்னிட்டு அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் மகளிர் குழு உறுப்பினர்களுக்கும் பொங்கல் பொருள்கள் அடங்கிய பொதியை வழங்கியுள்ளனர். இந்தப் பொதி வழங்கும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் சங்க மண்டபத்தில் அதன் தலைவர் செ. மதியழகன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் 110 பேருக்கு இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சங்கங்களின் இணைப் பொதுமுகாமையாளர் சி. வேதவனம், கூட்டுறவுப் பரிசோதகர் அருள்நாதன், சங்கப் பொதுமுகாமையாளர் வி.உதயச்சந்திரன், கணக்காளர் த.செல்வராணி, பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க)

## இது என்ன வீதியா, சாக்கடையா....?



துணுக்காய் கரும்புள்ளியான்குளம் வீதி மழை காரணமாக சே[illegible] சைக்கிள்களிலோ செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. (க-415)

## ஆசிரியர் பற்றாக்குறையை சுட்டிக்காட்டி மாவிலங்கேணி பெற்றோர்கள் கடிதம்

### மன்னார் கல்விப் பணிப்பாளருக்கு

மன்னார், ஒக்.25

மன்னார் மாவிலங்கேணி றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்யுமாறு கோரி அப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் பெற்றோர்களின் கையெழுத்துக்களுடன் கூடிய கடிதம் ஒன்றை மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

கடந்த 2ஆம் தவணையின் ஆரம்பத்தின் போது இப்பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்கள் பலர் திடீர் என இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் அப்பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு விஞ்ஞான பாட ஆசிரியரும், மூன்று ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுமே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் புதிதாக இரண்டு ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்த ஆசிரியர் இடமாற்றம் இப்பாடசாலையில் கல்வி கற்கும் 142 பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தைப் பெரிதும் பாதித்துள்ளது.

இது தொடர்பாக கடந்த ஜூன் மாதம் எமது பெற்றோர் குழு ஒன்று தங்களை அணுகிய போது இன்னும் ஒரு வார காலம் பொறுத்துக் கொள்ளுங்கள் உங்கள் பாடசாலைக்கு தேவையான ஆசிரியர்களை நியமித்துத் தருகின்றோம் எனக் கூறப்பட்டது. ஆனால் இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை மிகவும் வேதனை அளிக்கின்றது.

எனவே இங்கு கல்வி கற்கும் 68 ஆரம்பக்கல்வி மாணவர்களினதும், 74 இடைநிலைக் கல்வி மாணவர்களினதும் எதிர்காலக் கல்வியைச் கருத்தில் கொண்டு ஒரு விஞ்ஞான ஆசிரியர், ஒரு சங்கீத ஆசிரியர், ஓர் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆகிய மூன்று ஆசிரியர்களை உடன் நியமித்துத் தருமாறு மிகவும் தயவுடன் தங்களைக் கேட்டு நிற்கின்றோம் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியானுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

தற்போது இந்தப் பாடசாலையில் முக்கியமாக கணித பாட ஆசிரியரே தேவைப்படுகின்றார். அடுத்த ஜனவரி மாதத்தில் இவர் நிச்சயமாக நியமிக்கப்பட்டுவிடுவார் என அவர் தெரிவித்தார்.

(க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ள இடங்களில் ஆய்வு

## தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வசதியாக

வலி.தென்மேற்கு, ஒக்.25

குடாநாட்டில் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளை இனம் கண்டு அழிக்கும் நோக்குடன் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்துள்ள இடங்களில் பூச்சியியல் ஆய்வுப் பிரிவினரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் கட்டுப்படுத்தப்பட்டிருந்த டெங்கு நோய், பருவ மழையைத் தொடர்ந்து மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது. இந் நோயினால் பாதிக்கப்பட்ட பலர் இனம் காணப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். சிலர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார்கள்.

**டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளைக் கண்டறிந்து அழிக்கும் நோக் குடன் பூச்சியியல் ஆய்வுப் பிரிவினர் குறித்த பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற் கொண்டுள்ளனர்.**

டெங்கு நோய்ப் பரம்பல் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து சுகாதாரப் பிரிவினர் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்து வருவதுடன் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய பொருள்களைக் கண்டறிவதிலும் சம்பந்தப்பட்டவர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

கடந்தவாரம் கொக்குவில், திருநெல்வேலி, குருநகர் ஆகிய இடங்களில் பலர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளானதைத் தொடர்ந்து, டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளைக் கண்டறிந்து அழிக்கும் நோக்குடன் பூச்சியியல் ஆய்வுப் பிரிவினர் அப்பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற் கொண்டுள்ளனர். (த-115)

# கடற்கரை வீதியில் மதகு புனரமைப்பு



யாழ். கோட்டைக்குப் பின்புறமாகவுள்ள கடற்கரை வீதியில் உள்ள மதகின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

கோட்டையில் இடம் பெற்ற போர் நடவடிக்கைகளின்போது பெரும் சேதத்துக்கு உள்ளான இந்த மதகு பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்து வந்தது.

இந்த மதகு சேதமடைந்திருந்ததால் அதன் மேல் தளத்தில் இரும்பு கேடர்கள் இடப்பட்டு அதன் ஊடாகவே போக்குவரத்து இடம்பெற்று வந்தது.

தற்போது இந்த இரும்புக் கேடர்கள் முற்றாக அகற்றப்பட்டு மதகின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-17)

## வயலுக்குச் சென்ற இளைஞரை திடீரெனத் தாக்கியது பன்றி

நெற்பயிருக்கு உரம் எறியச் சென்றவரை வயல் வரம்புடன் மறைந்திருந்த பன்றி எதிர்பாராத விதமாகத் தாக்கியதில் இளைஞர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை கைதடி- நுணாவில் வயல்வெளியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் நவநீதன் (வயது- 23) என்னும் இளைஞரே காயமடைந்தவராவார்.

உரமூடையைத் தலையில் சுமந்து சென்ற போது வரம்புடன் மறைந்திருந்த பன்றி திடீரெனப் பாய்ந்து தாக்கியதாகத் தெரிவிக்கப் பட்டது. (த-9)

# முன்னறிவிப்புச் செய்த பின்பே மின் துண்டிக்கப்பட வேண்டும்

## வலி.மேற்குப் பிரதேச சபையில் தீர்மானம்

அறிவித்தலின்றி மின்சாரம் துண்டிக்கப்படுவதனால், பல்வேறு வேலைத் திட்டங்கள் தடைப்படுவதுடன், மக்கள் மத்தியில் தாக்கங்களும் ஏற்படுகின்றன. எனவே, மின்சாரம் துண்டிக்கப்பட முன்பு அதுபற்றி பொது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்று வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி என்.ஐங்கரன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளார்.

வலி.மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற போது, இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தவிசாளரால் முன் மொழியப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.மேற்குப் பிரதேசத்தில் மின்சாரத்தை நம்பிப் பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதனால் பல குடும்பங்களும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் முன்னறிவித்தலின்றி மின்சாரம் திடீர் திடீரென்று துண்டிக்கப்படுவதனால் வேலைத் திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. அவசர வேலைகளை உரிய முறையில் நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி பொது மக்களின் இலத்திரனியல் பொருள்களும் சேதத்துக்குள்ளாகின்றன.

எனவே, மக்களின் நலன் கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும். மின் துண்டிப்பது பற்றி முற்கூட்டியே அறிவித்தல் வழங்கப்படுமிடத்து மக்கள் அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது இலகுவாக இருக்கும்- என்றுள்ளது. (த-15)

# விதை நெல் தேக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ். மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் விதை நெல் தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2 ஆயிரம் புசல் விதை நெல் விற்பனை இன்றிக் களஞ்சியத்தில் தேங்கிக் காணப்படுவதாகச் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறை பெரும் போகத்திற்கெனப் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து விதை நெல்லைச் சங்கம் கொள்வனவு செய்திருந்தது.

இந்த விதை நெல்லை பெரும்போகத்துக்காகக் குறைந்த அளவிலேயே விவசாயிகள் வாங்கியிருந்தனர்.

கூடுதலான விவசாயிகள் கடந்த போகத்தில் இதற்கென ஒதுக்கப்பட்ட விதை நெல்லைக் கொண்டே இம்முறையும் செய்கையில் ஈடுபட்டனர்.

இதனால் பெரும் தொகையான விதைநெல் சங்கத்தில் தேங்கியுள்ளது- என்றார்.

இதேவேளை- அநேகமான விவசாயிகள் விதைப்புக்கு முன்னர் தமது கையிருப்பில்இருந்த விதைநெல்லை சங்கத்தின் நெல் சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் துப்புரவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டியிருந்தனர். (த-17)

## வடமராட்சி கிழக்கு மக்களுக்கு ஆயுள்வேத வைத்திய சேவை

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியையும் அதன் அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் வசதி கருதி மாதந்தோறும் பிரதி முதலாவது மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் இலவச ஆயுள் வேத வைத்திய சேவை நடைபெற்று வருகின்றது.

குடத்தனையில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கிவரும் மருதங்கேணி அரசினர் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் பணியாற்றும் ஆயுள்வேத வைத்திய அதிகாரி இவ் வைத்திய சேவையை நடத்தி வருகிறார். அத்துடன் அங்கு நோயாளர்களுக்குத் தேவையான ஆயுள் வேத மருந்து வகைகளும் வழங்கப்படுகின்றன. முள்ளிய வளை, வெற்றிலைக் கேணி, ஆழியவளை, தாளையடி, மருதங்கேணி, உடுத்துறை, செம்பியன் பற்று ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆயுள் வேத வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இச் சேவை மூலம் ஏற்பட்டுள்ளது. (த-8)



சில பாடசாலைகள் மற்றும் ஆலயங்களில் வித்தியாரம்பம் நிகழ்வு விஜயதசமி தினமான நேற்று புதன்கிழமை நடைபெற்றது. யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் சிறுமி ஒருவருக்கு ஆசிரியர் ஒருவர் ஏடு தொடக்கி வைக்கிறார். (த-17)

# உள்ளூராட்சி வாரத்தில் நிலுவைகள் அறவிடல்

யாழ்ப்பாணம், ஒக்.25

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையால் நிலுவைகள் அறவிடும் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. நடமாடும் சேவையில் பெருமளவு தொகை அறவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நகர சபைக்குச் செலுத்த வேண்டிய ஆதனவரி, வியாபாரக் கட்டணம், வாடகை போன்றவற்றை அறவிடும் வகையில்நடமாடும்சேவையை உள்ளூராட்சி வாரத்தில் மேற்கொண்டிருந்தனர் நகர சபையினர்.

நகர சபையின் எட்டாம், ஒன்பதாம் வட்டாரப் பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் நேரடியாகச் சென்று நிலுவைகளை அறவிடும் பணியில் ஈடுபட்டனர்.

வர்த்தகர்களும் வரியிறுப்பாளர்களும் நடமாடும் சேவைக்கு ஒத்துழைப்பு நல்கினர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ம-9)

## பனம் நாற்றுக்கள் நடுகை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.25

தற்போது மழை ஆரம்பித்துள்ளதை அடுத்துப் பனம் நாற்றுக்களை நடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது பனை அபிவிருத்தி சபையில் 71 ஆயிரம் பனம் நாற்றுகள் கையிருப்பில் உள்ளன.

கையிருப்பில் இருக்கும் இந்தப் பனம் நாற்றுக்களை அடுத்து வரும் சில நாள்களில் நடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொது இடங்கள், மயான வளாகங்கள், வெற்றுக் காணிகள் ஆகிய இடங்களில் பனம் நாற்றுக்கள் நடுகை செய்யப்படவுள்ளன.

அழிந்து போயுள்ள பனை வளத்தை மீண்டும் பெருக்குவதற்காக இம்முறை கூடுதலான பனம் நாற்றுக்கள் நடுகை செய்யப் படவுள்ளன. (த-17)

# நோயாளர்களுக்கு ஒரு மாதம் மருத்துவச் செலவு எவ்வளவு?

## சாவகச்சேரி வைத்தியசாலையில் பார்வையிடலாம்

தென்மராட்சி,ஒக்.25

வைத்தியசாலைகள் வரலாற்றில் நோயாளர்களுக்கு ஒரு மாதத்தில் வழங்கப்பட்ட சேவைகளுக்கு ஏற்பட்ட செலவு பற்றிய விவரம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்தமாதம் (செப்ரெம்பர்) வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றவர்களின் விவரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகளுக்கு ஏற்பட்ட செலவுகளும், காயங்களுக்கு மருந்து கட்டியதால் ஊசி மருந்துகள் ஏற்றியதால் ஏற்பட்ட செலவுகளும் கணக்கிடப்பட்டு ஒரு மாதத்தில் ஒரு நோயாளிக்கு ஏற்பட்ட சராசரி செலவு விவரமும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கடந்த மாதம் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் 10 ஆயிரத்து 499 பேர் சிகிச்சை பெற்றுள்ளதால் இவர்களுக்கு மருந்துகள் வழங்கியதால் 4 லட்சத்து 32 ஆயிரத்து 964 ரூபா 60 சதம் செலவாகியதாகவும் சராசரியாக ஒரு நோயாளிக்கு 41 ரூபா 23 சதம் செலவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுள் பனடோல் குளிசைகள் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபாவும், பனடோல் சிறப்புக்கு 5 ஆயிரத்து 785 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் வெளிநோயாளர் பிரிவில் ஆயிரத்து 800 பேருக்கு மருந்து கட்டிய செலவாக 11 ஆயிரத்து 357 ரூபா செலவாகியதாகவும் சாராசரியாக ஒருவருக்கு மருந்து கட்டுவதற்கு ஆறு ரூபா 70 சதம் செலவாகியுள்ளதாகவும் ஊசி மருந்துகளுக்கு 86 ஆயிரத்து 201 ரூபா செலவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நெஞ்சில் வலியை ஏற்படுத்தும் போர்ச்சின்னம்

## கலைஞர் கண்டனம்

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்ட இலங்கை அரசின் போர் நினைவுச் சின்னம் மற்றும் அருங்காட்சியகம் தமிழர் நெஞ்சில் வலியை ஏற்படுத்தும் செயல் என தி.மு.க. தலைவர் கருணாநிதி கண்டனம் தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து 'தாய்த் தமிழகத்தின் தவிப்பு' என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை அரசின் இத்தகைய செயல் நாகரிகமற்றதாக அமைந்துள்ளது. தமிழரின் கண்ணைக் குத்துவது போல் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழருடன் சமாதானம் எனக்கூறும் இலங்கையின் முயற்சிக்கு சமரசத்துக்கு இந்தச் செயல் உதவாது.

எமது பல்வேறு கோரிக்கைகளுக்கு இந்திய அரசு உதவிட முன் வருவதாக உறுதி கூறிய போதிலும், உலக நாடுகளின் மத்தியில் நடுநிலை நாடுகளில் ஒன்று இந்தியா என்ற பெயரைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவாவது, சிலவற்றில் விட்டுக் கொடுத்துப் போகிறதோ இந்திய அரசு என்று சிலர் சந்தேகம் கொள்ளக் கூடிய அளவிலே தான் செயற்படுகிறது.

எந்தளவுக்கு இலங்கைத் தமிழர்களுக்கு விரோதமாக இலங்கை செயற்படுகி றது என்பதற்கு எடுத்துக் காட்டாக 22-10-2012 இந்து நாளிதழில் முதல் பக்கத்தில் ஒரு கட்டுரையை பிரபல பத்திரிகையாளர்களான நிருபமா சுப்ரமணியனும், ஆர்.கே. ராதாகிருஷ்ணனும் எழுதியுள்ளனர். அந்தக் கட்டுரைக்கான தலைப்பே, 'விடுதலைப் புலிகள் இறுதியாகப் போரிட்ட இடத்துக்கு அருகிலேயே - தமிழர்களை வெறுப்பேற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வெற்றி நினைவுச் சின்னம்' என்பதாகும்.

இலங்கையில் வடக்குப் பகுதியின் மையத்தில் - 2009ஆம் ஆண்டு நடந்த உச்சக்கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட ரத்தம் தோய்ந்த பூமிக்கு அருகில் - அந்தப் போரில் இலங்கை அரசு பெற்ற வெற்றியை உணர்த்திடும் வகையில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு போரின்போது கொடுமையான நிகழ்ச்சிகள் நடந்த இடத்தில் கருங்கல் குன்று ஒன்றின் மீது இலங்கை இராணுவத்தின் படையினர் ஒருவரின் முகத்தில் பெருமகிழ்ச்சியோடும், பெருமிதத் தோடும் ஒரு கையில் துப்பாக்கி ஏந்தியபடி - மற்றொரு கையில் இலங்கையின் தேசியக் கொடியை ஏந்தியபடியான சிலை ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தின் ஒவ்வொரு மூலையிலும் கருங்கல்லால் செதுக்கப்பட்ட இலங்கை அரசின் தேசிய விலங்கான



சிங்கம் நிறுவப்பட்டுள்ளது. இந்தப் போர் நினைவுச் சின்னத்துக்கு அருகில், போர் அருங்காட்சியகம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது

போர் நினைவுச் சின்னமும், போர் அருங்காட்சியகமும் இலங்கை அரசின் நாகரிகமற்ற செயல். இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகச் சொல்லிக் கொள்ளும் சமாதான முயற்சிக்கு, இந்தச் சின்னங்கள் எந்த வகையிலும் உதவிக்கரமாக இல்லை.

இலங்கையின் வடக்குப் பகுதியில் இலங்கை இராணுவம் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் இருந்து வருகிறது என்பதற்கு அடையாளம் தான், இந்தப் போர் நினைவுச் சின்னமும், அருங்காட்சியகமும் ஆகும். இது கண்டு போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழர்கள் அனைவரும் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர்- என்றுள்ளது. (வ)

---

மின் வயர் அறுந்து விழுந்தது

## தீப்பற்றி எரிந்தது பஸ் 12 பேர் கருகிச் சாவு

உத்தரப்பிரதேசத்தில் பஸ் மீது உயர் அழுத்த மின்சார வயர் அறுந்து விழுந்து ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். ஃபதேபூர் மாவட்டத்தில் உள்ள ஜகநாபாத்தில் 50 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ் மீது உயர் மின் அழுத்த வயர் அறுந்து விழுந்ததால் பஸ்ஸில் தீ விபத்து ஏற்பட்டது.

அப்போது பயணம் செய்து கொண்டிருந்த பய ணிகள் கூச்சலிட்டதில் அரு கில் இருந்தவர்கள் அவர் களைக் காப்பாற்ற உதவினர். கடும் போராட்டத்தின் பின்னர் 12 பேரை அவர்கள் காப்பாற்றினர். மேலும் சிலர் பஸ்களின் கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு தப்பினர். குறித்த தீ விபத்தில் சிக்கி 12 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் 25 பேர் காயமடைந்தனர். விபத் தில் காயமடைந்தவர்கள் ஃபதேபூர், கான்பூர் ஆகிய மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

---

## பா.ஜ.கவுடன் இனிமேல் எந்தத் தொடர்பும் இல்லை

### எடியூரப்பா திட்டவட்டம்

பாரதீய ஜனதாக் கட்சிக்கும் தனக்கும் இனிமேல் எந்தத் தொடர்பும் இல்லை என்று கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி புதிய கட்சியை ஆரம்பிக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கூட்டணியில் தோன்றிய உட்பூசல் காரணமாகவே குறித்த தீர்மானத்தை அவர் மேற்கொண்டுள்ளதாக அரசில் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், கர்நாடக மாநிலத்தில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் எடியூரப்பாவின் இந்த அறிவிப்பானது, ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு பெரும் பின்னடைவு என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (வ)

---

## கடத்தப்பட்ட குழந்தை தொழிலாளர் 17 பேரும் மும்பையில் மீட்பு

மும்பைக்குக் கடத்தப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் 17 பேர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டனர். கடலூர் பகுதியிலிருந்தே மேற்படி குழந்தைகள் கடத்தப்பட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கிள்ளைப் பகுதியைச் சேர்ந்த 17 பேர் முகவர்கள் மூலம் மும்பைக்குக் கடத்தப்பட்டனர். அங்கு கடந்த 3 மாதங்களாகக் கொடுப்பனவு எதுவும் வழங்காத நிலையில் தொடர்ந்து இவர்களைப் பணி செய்யக் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

இந்தநிலையில் அந்த 17 பேரிலிருந்து மூவர் தப்பி வந்து கொடுத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையால் மீதமுள்ள 14 குழந்தைத் தொழிலாளர்களும் மும்பையிலிருந்து பத்திரமாக நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டு கடலூர் அழைத்துச் செல்லப்பட்டனர். (வ)

---



டில்லியில் பொதுத்துறை நிறுவன தலைவர்க ளுடன் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## மக்களின் வரிப்பணத்தை வீணடித்த இந்திய ராணுவம்

### சீனாவின் தரம் குறைந்த கருவிகளை வாங்கியதால்

> கடந்த 2009- 2010 மற்றும் 2010-2011 ஆகிய இரண்டு வருடங்களில் மட்டும் சுமார் 103.55 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இராணுவத்துக்குத் தேவையான கருவிகளைக் கொள் முதல் செய்ததில் ரூ.100 கோடி அளவுக்கு வரிப் பணம் வீணடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தணிக்கை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் தளபதி வி.கே. சிங் தற்போதைய தளபதி பிக்ராம் சிங் மற்றும் இராணுவ அதிகாரிகள் கடந்த 2 வருடங்களில் ரூ.100 கோடி அளவுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இதில் இராணுவத்துக்குத் தேவையான பைனாகுலர் மற்றும் புல்லட் புரூப் ஜாக் கெட்டுகளை தரம் குறைந்தவையாக சீனாவிடமிருந்து வாங்கியுள்ளனர்.

இதேவகையான பொருள்களை இந்திய சந்தையில் குறைந்த விலையில் கொள் முதல் செய்திருக்கலாம்.

இதன் மூலம் கடந்த 2009- 2010 மற்றும் 2010-2011 ஆகிய இரண்டு வருடங்களில் மட்டும் சுமார் 103.55 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து இரண்டு இராணுவ அதிகாரிகளிடம் முழு விசாரணை நடத்த வேண்டும் என்று- அதில் உள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

---

## கசாப்பின் கருணை மனுவை நிராகரித்தது உள்துறை அமைச்சு

### தூக்குத் தண்டனையில் மாற்றமில்லை

மும்பைத் தாக்குதலில் ஈடுபட்ட அஜ்மல் கசாப்பின் கருணை மனுவை உள்துறை அமைச்சகம் நிராகரித்தது.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி லஷ்கர்- இ-தொய்பா தீவிரவாதிகள் 10 பேர் தாக்குதல் நடத்தினர். இந்தப் பயங்கரத் தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர். இதேவேளை பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் தீவிரவாதிகள் 9 பேர் கொல்லப்பட்டனர். அஜ்மல் கசாப் என்ற தீவிரவாதி மட்டும் சிக்கினார்.

அவர் மீதான விசாரணை மும்பை ஆர்தர் ரோட் சிறையில் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் நடை பெற்றது. அதில் அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதனையடுத்து குறித்த தண்டனையை மும்பை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது.

இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி அவருக்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை உறுதிசெய்தது.

இந்தநிலையில் தனக்கு கருணை காட்டக் கோரி ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பினார். அந்த மனு கடந்த செப்ரெம்பர் மாதம் மகாராஷ்டிர உள்துறை அமைச்சகத்தால் நிராகரிக்கப்பட்டது.

அதன்பின்னர் அந்த மனு முதல்வர் அலுவலகம் மூலமாக மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டது.

தற்போது கசாப்பின் கருணை மனுவை மத்திய உள்துறை அமைச்சகம் நிராகரித்துள்ளது. ஜனாதிபதியும் கசாப்பின் மனுவை நிராக ரிக்குமாறு பரிந்துரைசெய்துள்ளார்.

---

## ஊழல் முறைப்பாடு; கேள்வி கேட்ட செய்தியாளருக்கு மிரட்டல்

ஊழல் முறைப்பாடு குறித்து கேள்வி கேட்ட தொலைக்காட்சிச் செய்தியாளருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டது.

இமாச்சலப் பிரதேசத்தில் எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது.

இதில் காங்கிரஸ் சார்பில் முதல் வேட்பாளர் என கூறப்படும் முன்னாள் முதல்வர் வீரபத்ரசிங் மீது, பாதீய ஜனதா நேற்று முன்தினம் புதிய ஊழல் முறைப்பாடுகளைத் தெரிவித்தது.

அந்த முறைப்பாட்டின் பேரில் சிறப்பு சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத் தியது.

உருக்கு நிறுவனத்தில் ரூ. 6.5 கோடி ரூபா பணம் பெற்றார் என்று தொலைக்காட்சி ஒன்று கடந்த சில தினங்களுக்கு முன்பு செய்தி வெளியிட்டது. அந்த நிறுவனத்திடமிருந்து சி.பி.ஐ. கைப்பற் றிய இரகசிய நாள் குறிப்புகளை வெளியிட்டு வீரபத்ர சிங்குக்கு நெருக்கடி ஏற்படுத்தியது. இதற்குப் பதிலளித்த சிங், தன் மீதான குற்றச் சாட்டு அடிப்படை ஆதாரமற்றது என்றார். அப்படியும் விடாமல் தொலைக்காட்சி செய்தியாளர் சிங்கிடம் சரமாரியாகக் கேள்வி கேட்டனர்.

இதில் கோபமடைந்த வீரபத்ரசிங், ஒரு டி.வி செய்தியாளரை நோக்கி, உனக்கு வேறு வேலை இல்லையா? உனது கமராவை உடைத்து வீசி எறிந்து விடுவேன் என்று மிரட்டியுள்ளார். (வ)

---

## சின்மயி முறைப்பாடு மேலும் ஒருவர் கைது

டுவிட்டரில் பாடகி சின்மயி குறித்து ஆபாசமாக விமர்சித்ததாக மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி சென்னை மாநகர பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தில், தன்னை பற்றி சமூக இணையத்தளமான டுவிட்டரில் ஆபாசமாக எழுதப்பட்டிருப்பதாகவும், அதனை எழுதிய 6 பேர் மீது நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றும் சின்மயி முறைப்பாடு கொடுத்திருந்தார். (வ)

# காஸா மீது எந்த வேளையிலும் போர் தொடுப்பது நிச்சயம்



## எச்சரிக்கிறார் இஸ்ரேலியப் பிரதமர்

ஜெரூசலம்,ஒக்.25

காஸா மீது எந்த நேரத்திலும் போர் தொடுப்போம் என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்ச்மின் நெத்தன் யாஹூ, எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கட்டார் நாட்டின் ஜனாதிபதி ஷெய்க் ஹமாத் பின் கலீஃபா அல்தானி இஸ்ரேலின் சட்டவிரோத முற்றுகைக்கு உட்பட்டிருக்கும் காஸாவுக்கு முதன் முறையாகப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ஆக்கிரமிக்கப்பட்ட ஜெரூசலம் நகரில் பல்கேரிய ஜனாதிபதி ரோஸன் ப்ளீவ் னெலீவ் உடனான சந்திப் பின்போது இஸ்ரேலியப்பிரதமர்பெஞ்சமின்நெத்தன்யாஹூ, தம்முடைய அரசு காஸாமீது எந்தக் கணத்திலும் போர் தொடுக்கலாம் என்று எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து நெத்தன் யாஹூ மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டுப் படையணியைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் படுகாயமடைந்திருப்பது குறித்து நான் மிகுந்த விசனம் அடைந்துள்ளேன். அதற்கான பதிலடியை வழங்கத் எமது அரசு ஒரு போதும் தயங்காது- என்றார்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை மாலை இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினர் காஸாமீது மேற்கொண்ட அத்துமீறிய தாக்குதலில் பலஸ்தீனப் பொதுமக்களுள் மூவர் உயிரிழந்துள்ளனர். கட்டார் ஜனாதிபதியின் காஸா வருகைக்கு சற்றுமுன் நிகழ்ந்த இந்தப் படுகொலை நிகழ்வால் மேற்படி பிராந்தியமெங்கும் பெரும் பதற்றம் நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலையில் ஆக்கிரமிப்பு இராணுவம் காஸாவின் கான் யூனிஸ் பிரதேசத்தில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது பாதையோரம் வெடித்த குண்டால் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படை உயரதிகாரி ஒருவர் காயமடைந்தார்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் எந்த ஒரு பலஸ்தீன விடுதலைப் போராட்டக் குழுவும் உரிமை கோரவில்லை எபது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப்படையினர் கராரா கிராமத்தில் உள்ள பலஸ்தீன வீடுகளை இலக்குவைத்து ஏவுகணைத் தாக்குதலில் ஈடுபட்டிருந்த சமயத்தில், படையினரின் கவனக் குறைவால் அக்குண்டு எதிர்பாராதவிதமாக வெடித்திருக்கக்கூடும் என்றுநம்பப்படுகின்றது. (வ)

## போராட்டம் கலவரமாகியது; ராணுவம் சூடு; 6 பேர் சாவு



லெபனானில் ஏற்பட்ட கலவரத்தில் இராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 6 பேர் உயிரிழந்தனர்.

லெபனான் விவகாரங்களில் சிரியாவின் தொடர்பை எதிர்த்த மூத்த உளவுத்துறை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு பதற்றம் நிலவி வந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் பிரூட்டில் நடந்த போராட்டத்தில் இராணுவத்தினருக்கும், போராட்டக்காரர்களுக்கும்இடையேயானமோதல் கலவரமாக வெடித்தது. அப்போது அங்கிருந்த வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன.

கலவரத்தைக் கட்டுப்படுத்த இராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 6 பேர் உயிரிழந்தனர். (வ)

## பெண்களைக் குறி வைத்து தாக்குதல் நடத்திய சிறுவன் கைது

ரொறண்டோ, ஒக்.25

கனடாவில் பெண்களைக் குறி வைத்துத் தாக்கி வந்த 15 வயதுச் சிறுவனை பொலிஸார் கைது செய்தனர்.

கனடாவின் டொராண்டோ மாகாணத்தில் இரவில் வீதியில் நடமாடும் பெண் களை 15 வயதுச் சிறுவன் தாக்குவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து அந்தச் சிறுவனைக் கைது செய்வதற்காக பொலிஸார் திட்டமொன்றை வகுத்தனர்.

அதன்படி பெண் பொலிஸ் அதிகாரியொருவர் இரவில் தனியாக நடந்து வந்தபோது, சிறுவன் அந்த பெண் பொலிஸையும் தாக்க முயன்றுள்ளார். அந்தவேளையில் சிறுவனைப் பொலிஸார் கைது செய்தனர். மேற்படி சிறுவன் மீது பெண்கள் மீது தாக்குதல் நடத்தியதாக 14 வழக்குகளும், ஆண்கள் மீது தாக்குதல் நடத்தியதாக 2 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரிபில் பிளேர் கூறுகையில்,

பெண் பொலிஸ் அதிகாரியின் ஒத்துழைப்பு இல்லாமல் இருந்திருந்தால், குற்றவாளியைக் கைது செய்திருக்க முடியாது. அவருக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம். குற்றவாளி மீது வழக்கு விசாரணை நடைபெறும் என்று தெரிவித்தார். (வ)

## கொலை முயற்சியில் இருந்து தப்பினார் பின்லாந்துப் பிரதமர்



பின்லாந்து பிரதமர் ஜொர்கி கடானெனை கொலை செய்ய முயன்ற நபரை பொலிஸார் கைது செய்தனர். பின்லாந்தின் தென் மேற்கு நகரான டுர்குவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பின்லாந்துப் பிரதமரைக் கொல்லும் நோக்கில் அவரைக் கத்தியால் குத்த முயன்றவரை பொலிஸார் விரைவாகச் செயற்பட்டு தடுத்ததால் அவர் நூலிழையில் தப்பினார்.



*நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஹெய்தியிலுள்ள கராகல் பகுதியில் தொழில் பூங்காவை அமைக்கத் தயாராகி வரும் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் அந்நாட்டு முன்னாள் ஜனாதிபதியும் ஹிலாரியின் கணவருமான பில் கிளின்டன் ஆகியோர் அதிகாரிகளுடன். (வ)*

## குரங்குகளால் வளர்க்கப்பட்ட பெண்; நூலின் மூலம் விவரிக்கிறார் வரலாறை

பிரிட்டனில் வசிக்கும் மரினா சப்மான் என்ற பெண் தான் குரங்குகளால் வளர்க்கப்பட்டதாக அவரது நூல் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

1950 ஆம் ஆண்டு பிறந்த மரினா, 5 வயது சிறுமியாக இருந்தபோது கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு காட்டில் விடப்பட்டார்.

அப்போது குரங்குகளுக்கு மத்தியில் வாழ்ந்ததாகவும், பறவைகளையும் முயல்களையும் பிடிக்கக் கற்றுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மரினா மேலும் தெரிவித்ததாவது:-

வேட்டைக்காரர்கள் என்னை ககுடா நகரிலுள்ள விபசார விடுதியொன்றில் விற்றனர். பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றேன்.

அதன்பின் பல வருடங்களை வீதிகளில் கழித்த அவர் சில சமயங்களில் கைது செய்யப்பட்டு சிறைவாசமும் அனுபவிக்க நேர்ந்தது.

தொடர்ந்து சுமார் 15 வயதில் கொலம்பிய குடும்பமொன்றில் வீட்டுப் பணியாளராக பணியாற்றிய



போது, மரினா எனப் பெயர் சூட்டப்பட்டது.

இந்தநிலையில் நான் வீட்டுப்பணியாளராக பணியாற்றிய கொலம்பிய குடும்பம் வர்த்தக நடவடிக்கைகளுக்காக பிரிட்டன் பிரட்போர்ட்டில் 6 மாத காலம் தங்கியபோது அவர்களுடன் பிரிட்டனுக்குச் சென்றேன்.

பின்னர் தேவாலயமொன்றில் ஜோன் சப்மான் என்பவரைச் சந்தித்துக் காதல் கொண்டேன். 1977 ஆம் ஆண்டில் அவருடன் திருமண பந்தத்தில் இணைந்தேன். தற்போது எனக்கு இரு மகள்மார் உள்ளனர்.

தென் அமெரிக்காவில் நிலவும் ஆள்கடத்தல் நடவடிக்கைகளின் மோசமான நிலைப்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எனது வாழ்க்கைக் கதையை புத்தகமாக எழுதியுள்ளேன்- என்றார். (வ)

## 10 பேருக்கு தூக்குத் தண்டனை ஈரானில் நிறைவேற்றம்

ஈரானில் போதைப் பொருளை கடத்திய குற்றத்துக்காக 10 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஈரானில் கடத்தல், கொலை, கொள்ளை, பெண்களைத் துன்புறுத்துதல் போன்ற குற்றங்களில் ஈடு படுபவர்களுக்கு தூக்குத் தண்டனை அளிப்பது வழக்கம். இதன்படி போதைப் பொருள் கடத் திய குற்றத்துக்காக 10 பேருக்கு புதிதாக தூக்குத் தண்டனை நிறை வேற்றப்பட்டது.

இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை உடனடியாக இதனை நிறுத்துமாறு பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் இரண்டு போதைப் பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த முக் கிய நபர்களுக்கே மேற்படி தண்டனை விதித்துள்ள தாகவும், இஸ்லாமிய சட்டத்தின் படி இது சரியான நடவடிக்கையே என்றும், நாட்டில் போதைப் பொருள் பிரச்சினை வளர்வதைத் தடுக்க இதைத் தவிர வேறுவழி தம்மிடம் இல்லை எனவும் ஈரானிய அரசு தெரிவித்தது. (வ)

## கடாபி மகனின் பிறந்தநாள் விழாவில் விபசாரிகளும்

### ஆரம்பமாகியது விசாரணை

லிபியா முன்னாள் ஜனாதிபதி மும்மர் கடாபியின் மகன் முத்தாஸீம் கடாபியின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக அழைத்து வரப்பட்ட விபசார குழு மீதான விசாரணை ஆரம்பமாகியது.

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் முத்தாஸீம் கடாபி ஆவார். அவரது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக 5 விபசாரப் பெண்கள் மற்றும் 2 பாதுகாவலர்கள் என ஐந்து பேர் மீது விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

அவர்களுடன் தொடர்புடைய வேறு 5 பேர் மீதும் விசாரணை ஆரம்பமானது. இந்தக் குழுவில் விளம்பர நடிகைகளும் இடம்பெற்றுள்ளன. அவர்களில் ஏலி நகாஸ் என்ற பெண் விளம்பர நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் ஆவார்.

இவர் 2004ஆம் ஆண்டு முத்தாஸீம் கடாபியின் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

இந்த விழாவுக்கு மொத்தம் 20 விளம்பர அழகிகளை வரவழைத்ததில், 1.5 மில்லியன் டொலர் செலவானது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் கேன்ஸ் பட விழாவில் பாலியல்தொழில்கள்நடப்பது உறுதி செய்யப்பட்டு விட்டது.

இந்த விழாவுக்குச் செல்லும் இளம் பெண்களுக்கு மத்திய கிழக்கு நாடுகள், சவுதி அரேபியா, குவைத் நாடுகளிலிருந்து வரும்



ஆண்கள் ஆயிரக்கணக்கான டொலர் பணத்தை வழங்குகின்றனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸி. உள்ளூராட்சி தேர்தலில் 41 இந்தியர் போட்டி

ஆஸ்திரேலிய உள்ளூராட்சித் தேர்தலில் நாற்பதுக்கும் மேற்பட்ட இந்தியர்கள் போட்டியிடுகின்றனர்.

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் இந்தியர்கள் கணிசமான அளவில் வசித்து வருகின்றனர். அங்கு 77 சபைகளுக்கான உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெற உள்ளது.

மேற்படி தேர்தலில் 41 இந்தியர்கள் போட்டியிடுகின்றனர். இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட மேலும் 10பேரும்போட்டியிடுகின்றனர் என்று விக்டோரியா மாகாணத் தேர்தல் ஆணைய இணையத்தளம் தெரிவித்தது. ஆஸ்திரேலியத் தேர்தல்களில் இது ஆக்க பூர்வமான மாற்றமாகக் கருதப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் இந்தியர்கள் பெருமளவில் பங்கேற்பது அவர்களின் செல்வாக்கு அதிகரித்திருப்பதைக் காட்டுவதாக மெல் போர்னில் வசிக்கும் இந்தியப் பத்திரிகை உரிமையாளரான நீரஜ் நந்தா தெரிவித்தார். நான் வெற்றி பெற்றால் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான நல்லுறவுக்குப் பாடுபடுவேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## அமெரிக்காவில் நிலநடுக்கம்

சான்ஜோஸ், ஒக்.25

அமெரிக்காவின் கோஸ்ட்டா ரிக்கா பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

மேற்படி நிலநடுக்கத் தின் போது தலைநகர் சான் ஜோஸில் உள்ள கட்டடங்கள் அனைத்தும் குலுங்கின.

இதனால் மக்கள் அனைவரும் வீதிகளுக்கு ஓடி வந்துள்ளனர். மேலும், இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்த உடனடி தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

(வ)

# மருத்துவமனையில் தீ

## தாய்வானில் 12 நோயாளிகள் சாவு



தாய்வானின் தைனான் நகர மருத்துவமனையில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தால் 12 நோயாளிகள் பரிதாபகரமாய் உயிரிழந்துள்ளனர்.

தாய்வானின் சின்யிங் மருத்துவமனைக்குச் சொந்தமான ஐந்து மாடிக் கட்டடத்தின் களஞ்சிய அறையில் ஏற்பட்ட தீ பரவலடைந்ததில், இரண்டாம் மாடியில் இருந்த 12 நோயாளிகள் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளதோடு, மேலும் 60 பேர் படுகாயமடைந்தனர்.

மேற்படி மருத்துவமனையின் இரண்டாம் மாடியில் இருந்த கட்டிலைவிட்டு நகரமுடியாத நோயாளிகளும் உள நலம் பாதிக்கப்பட்டவர்களுமே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தனர். அண்மைக் கால மாக மருத்துவமனைகளில் நிகழ்ந்த மிக மோசமான தீவிபத்து இது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த தீவிபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பதைக் கண்டறிவதற்கான தீவிர விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்தக்கோரமான விபத்து குறித்துத்தாம் பெரும் அதிர்ச்சி அடைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள தாய்வான் பிரதமர் சீன் சென், இத் தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்குத் தம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

## பொதுஇடத்தில் 20இற்கு மேற்பட்டோர் குவைத்தில் ஒன்று கூடுவதற்குத் தடை

### அந்த நாட்டு அரசு அறிவிப்பு

குவைத்தில் வீதிகள் மற்றும் பொது இடங்களில் 20 இற்கும் அதிகமானவர்கள் ஒன்று கூட முடியாது என்று அந்தநாட்டு அரசு அறிவித்துள்ளது.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அளவுக்கு அதிகமானவர்கள் ஒன்றுகூடுவதற்கு அரசு தடை விதித்துள்ளது. அத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிஸாருக்கு மேலதிக அதிகாரங்களை குவைத் அரசு வழங்கியுள்ளது.

தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை ஏற்படுத்த குவைத் மன்னர் தீர்மானித்தமைக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

சட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்படுகின்றமை தமது வாய்ப்புக்களை இல்லாமல் செய்யும் ஒரு முயற்சி என எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

இந்த நிலையில், எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலை புறக்கணிக்கவுள்ளதாக அறவித்துள்ள எதிர்க்கட்சி பெரியளவிலான ஆர்ப்பாட்டங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

## "நான் நலமாக இருக்கின்றேன்". பிடல் காஸ்ட்ரோ அறிவிப்பு

"நான் நலமாக உள்ளேன்" என்று கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ தெரிவித்தார்.

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ சாவை ஏற்படுத்தும் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

கியூபாவின் ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த பிடல் காஸ்ட்ரோவுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

இந்தநிலையில் கடந்த வாரம் ஸ்பெயின் பத்திரிகையில் பிடல் காஸ்ட்ரோ இறக்கும் நிலையில் உள்ளார் என்று செய்தி வெளியானது.

**கடந்த வாரம் ஸ்பெயின் பத்திரிகையில் பிடல் காஸ்ட்ரோ இறக்கும் நிலையில் உள்ளார் என்று செய்தி வெளியானது.**

மேற்படி தகவலுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள பிடல் காஸ்ட்ரோ, கியூபாவுக்கு எதிரானவர்கள் இதுபோன்ற பொய்யான செய்தியைப் பரப்பி உள்ளனர்.

எனக்கு பக்கவாத நோய் தாக்கியுள்ளது. இருப்பினும் என்னுடைய பணிகளை செய்து கொள்ளும் அளவுக்கு உடல் நலத்துடன் உள்ளேன். என்னைப் பற்றி தவறான செய்தியைப் பரப்பிய கெட்ட சாத்தான் பறவைகளைப் பற்றி நான் எண்ணிப்பார்க்க விரும்பவில்லை என்றார்- காட்ஸ்ரோ.

## எண்ணெய் ஏற்றுமதியில் தடைநீடித்தால் மாற்று வழியைக் கையாள நேரிடும்

### ஈரான் அறிவிப்பு

மேற்குலக நாடுகளின் தடைகள்தொடருமானால் எண்ணெய் ஏற்றுமதியை விடுத்து மாற்றுவழிகளின் மூலம் வருமானம் தேட ஈரான் முற்படும் என்று தெரிவித்தது.

வெளிநாடுகளுக்கான எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்துவது குறித்தும் ஈரான் கவனம் செலுத்திவருவதாக அந்தநாட்டு எண்ணெய் வள அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணெய் மூலமான வருமானமின்றி நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக கூறப்படுகின்றது.

எனினும், தற்போது விதிக்கப்பட்டுள்ள தடைகளால் தமது நாடு சிக்கல்களை எதிர்நோக்கவில்லை என்றும், எதிர்காலத்தில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாகவும் ஈரான் குறிப்பிட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய அணுத் திட்டங்களை அடுத்து ஈரானுக்கு எதிராக மேற்குலக நாடுகள் தடை விதித்துள்ளன.

## இத்தாலியின் இடர் முகாமைத்துவ நிலையத் தலைவர் ராஜினாமா

இத்தாலியின்இடர் முகாமைத்துவ நிலையத்தின் தலைவர் லூசியானோமையானி தனது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2009ஆம்ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் உரிய முறையில் செயற்படவில்லை என்று தெரிவித்து விஞ்ஞானிகள் உள்ளிட்ட 7 பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, இவரின் பதவி விலகல்இடம்பெற்றுள்ளது.

நிலநடுக்கத்துக்கு முன்னதாக பிழையான தகவல்களை வழங்கியமையால் அதிகளவான உயிரிழப்புக்கள் இடம்பெற்றதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

2009ஆம்ஆண்டு 6.3 ரிச்டர் அளவில் பதிவான குறித்த நிலநடுக்கத்தால் 309 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)


அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

பிறப்பு 19.09.1944 இறப்பு 25.09.2012



கடந்த 25.09.2012 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

பத்மநாதன் செல்வரட்ணம் (மணிஅக்கா)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 23.10.2012 செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரர் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று இன்று [25.10.2012] வியாழக்கிழமை 9.30மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண வீட்டுக்கிருத் திய நிகழ் விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

16/36,8ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம்,மன்னார் வீதி,வவுனியா. (20934)(5-6)

குடும்பத்தினர்.






"GLORY TO GOD ALONE"

TRIPLE GOLDEN JUBILEE

OF

J/HOLY FAMILY CONVENT

Will be held on

25th October 2012

in the School main Hall at 8.30 a.m.

Principal &School Socity

(C/4302)(5-6)



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

100% சுத்தமான

றோயல் குளுக்கோஸ்

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட் காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

Packed by:

Royal Industries, colombo -13

Hot line: 077 727 7670




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 222 2567 சத்திரச் சந்திக்கு அருகில்.



2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11.09.1952

மறைவு 18.10.2010

அமரர் சுப்பிரமணியம் சுகுமாரன்

அன்பின்உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய் உங்கள் வசீகரமான பேச்சால்
எல்லோரையும் வழி நடத்தினீர்கள்
எம்மை விட்டுப் பிரிந்து இரண்டாண்டுகள் கடந்தாலும்
என்றும் எங்கள் நினைவுகளில் நீங்காது நிலைத்திருப்பீர்கள்

சுகுண வாசம்
நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.


அம்மா, மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(17)

அவனுக்கு திராட்சைப் பழங்கள் என்றால் உயிர். தினமும் பெரிய பெரிய திராட்சைகளை வாங்கிச்சாப்பிடுவான். மீன்களுக்கும் திராட்சை என்றால் பிடிக்க வேண்டுமே என்று எண்ணினான். ஆகவே திராட்சைகளை வாங்கிக் கொண்டு போய் தூண்டில் முன்னால் மாட்டி விட்டு தூண்டிலை ஏரியில் போட்டுவிட்டு உட்கார்ந்தான். மணிக்கணக்காக உட்கார்ந்தும் மீன்களில் ஒன்றுகூட மாட்டவில்லை.



வழக்கமாக மீன் பிடிப்பவன் ஒருவன் பக்கத்தில் கொஞ்சம் தொலைவில் உட்கார்ந்து பத்தே நிமிடத்தில் சுமார் அரை டசின் மீன்களைப் பிடித்து கூடையில் போட்டான்.

அவன் பக்கத்தில் சென்றான்.

''நான் இரண்டு மணி நேரமாக உட்கார்ந்தும் ஒரு மீன் கூட என் தூண்டிலில் மாட்டவில்லையே'' என்றான்.

'தூண்டிலில் என்ன போட்டாய்?'

'திராட்சைப்பழம், தூண்டிலில் போட்டது அப்படியே இருக்கிறது'

'அட பைத்தியக்காரா! மீனுக்குப் புழு என்றால் தான் பிடிக்கும். புழுவைப் பிடித்துத் தூண்டிலில் மாட்டிப் பார். ஒரே வினாடியில் பெரிய பெரிய மீன்கள் எல்லாம் வந்து விழும்'

'புழுவைக் கண்டால் எனக்குப் பிடிக்காதே'

''உனக்குப் பிடிக்காவிட்டால் என்ன? மீனைக் கண்டால் பிடிக்கும் அல்லவா? மண்ணைத் தோண்டு. புழுக்கள் கிடைக்கும். ஒரு புழுவை எடுத்துத் தூண்டிலில் மாட்டு. பிறகு பார். நான் தினமும் புழுக்களைத்தான் தூண்டிலில் போடுகிறேன்''

நாம் ஒரு பொருளைப் பெற வேண்டுமானால், அதைப் பெற என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் வெற்றி பெற முடியும்.

கண்ணன் சிறு பையன், மூன்று வயது நிரம்பிய அவனை முதன் முதலில் அவன் பெற்றோர்கள் பள்ளியில் எப்படியோ கஷ்டப்பட்டு, நிறையப் பணம் செலவழித்துச் சேர்த்தார்கள். முதல் நாளே அவன் பள்ளிக்குப் போக முடியாது என்று அழுதான். அவன் தாய் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. சண்டித்தனம் அதிகமாகி விட்டது.

அவனை அடிப்பதா? மிரட்டுவதா? அலாக்காகத் தூக்கிப் போய் பள்ளியில் விட்டு விட்டு வருவதா?

அவன் தந்தை கொஞ்ச நேரம் சிந்தித்தார். பிள்ளையை மிரட்டியோ, அதட்டியோ பள்ளிக்குக் கட்டாயமாக அனுப்புவதை அவர் கொஞ்சமும் விரும்பவில்லை.

'பள்ளிக்குப் போக விருப்பமில்லையா? விட்டுத் தள்ளு' என்றார்.

பிறகு அவரும் அவர் மனைவியும், ஐந்தாம் வகுப்பு படிக்கும் மூத்த பையனும் ஒரு திட்டம் போட்டார்கள். மூவரும் ஒரு தனி அறையில் உட்கார்ந்தார்கள். வெள்ளைக் காகிதங்களை எடுத்து வைத்துக் கொண்டு பல வகை வண்ணங்களில் படங்களை வரைந்தார்கள். காகிதங்களில் கப்பல், காற்றாடி போன்றவைகளைச் செய்தார்கள். பந்து ஒன்றை வைத்துக் கொண்டு விளையாடினார்கள். சின்னச் சின்ன பாலர் பாட்டுக்களைப் பாடினார்கள். சிரித்தார்கள். பிஸ்கெட்டுக்களையும் இனிப்புக்களையும் வைத்துக் கொண்டு சாப்பிட்டார்கள்.

கண்ணன் எட்டிப் பார்த்தான். இவர்கள் மட்டும் விளையாடி மகிழ்வதா? வண்ண வண்ணப் படங்களை வரைவதா? 'அப்பா! நானும் வந்து விளையாடுகிறேன்' என்றான்.

'கண்ணா' இந்த விளையாட்டுக்களையெல்லாம் நாங்கள் பள்ளியில் சேர்ந்தபோது கற்றுக் கொடுத்தார்கள். உனக்குத் தான் பள்ளிக்குப் போகவே விருப்பமில்லையே! உனக்கு இதெல்லாம் தெரியாது. நீ வேண்டாம்'' என்றார் தந்தை.

கண்ணனுக்கு ஏகப்பட்ட ஏமாற்றம்.

மறுநாள் காலையில் எழுந்து அவன் தன் தாயிடம் பள்ளிக்கு போகப்போகிறேன் என்று பிடிவாதம் பிடிக்கத் தொடங்கினான். நேரப்படி பையைத் தூக்கிக் கொண்டு கொஞ்சமும் அழாமல் சிரித்துக் கொண்டே பள்ளிக்குச் சென்றான்.

மற்றவர்கள் எதையாவது விருப்பமில்லை என்றால், அதற்குக் காரணம் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு அவர்கள் பயத்தையும் சந்தேகத்தையும் போக்க முயல வேண்டும்.

அடிப்பதாலோ, மிரட்டுவதாலோ எந்தவிதப் பயனும் ஏற்படாது.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு பையன் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் தந்தை பொக்கெட்டில் செலவுக்காகக் கொடுத்த பணத்தையெல்லாம் சிகரெட் வாங்கப் பயன்படுத்தினான். அவனை எப்படிக் கண்டிப்பது என்று முதலில் தந்தைக்குப் புரியவில்லை.

-தமிழ்வாணன்-

(தொடரும்)

# மாணவர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவும் கல்வியில் மேம்பட்டவர்களாகவும் திகழ வேண்டும்

## அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஒக்.25

''மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களில் சிறந்தவர்களாகவும், கல்வியில் மேம்பட்டவர்களாகவும் திகழ வேண்டும். ஒழுக்க விழுமியத்தோடு கூடிய கல்வியில் மேம்பட்டவர்களை சமூகம் உயர் நிலையில் வைத்து மதிக்கும். அவர்களே தலைநிமிர்ந்து வாழ முடியும் என்று அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி றொசற் தவநாயகம் தெரிவித்தார்.

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா கல்லூரி அதிபர் வே.அரசகேசரி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திருமதி றொசற் தவநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பரிசில்கள், பாராட்டுக்கள் என்பன ஊக்குவிப்பின் வெகுமதியாகவே வழங்கப்படுகின்றன. இன்று பரிசில் பெறுவர்களைப் போல ஏனைய மாணவர்களும் அடுத்த வருடம் பரிசில் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும், சாதனை படைக்க வேண்டும்.

மாணவர்கள் பாடத்தை மட்டும் கற்று பரீட்சையில் சித்தியடைந்தால் போதாது. ஒழுக்க விழுமியங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். ''ஒழுக்கம் உயிரினும் மேலானது'' ஒழுக்கம் இல்லாத கல்வியால் பயன் இல்லை. இன்று ஒழுக்கம் கேள்விக்குறியாகி உள்ளது. இது எமக்கு கவலையைத் தருகின்றது. மாணவர்கள் ஒழுக்க சீலங்களில் மேம்பட்டவர்களாக முன்னோடிகளாகத் திகழ வேண்டும்.

ஒழுக்க சீலங்களோடு கூடிய கல்வியில் மேம்பட்டவர்களை சமூகம் உயர் நிலையில் வைத்துப் போற்றும். அவர்களுக்கு தலை குனிவு ஒரு போதுமே ஏற்படாது. கல்வியில் சிறந்து விளங்கிய போதிலும், ஒழுக்கம் குறைந்தவர்களை சமூகம் மதிக்காது; உதாசீனம் செய்யும்.

மாணவப் பருவம் கற்றலுக்கு உரிய பருவம். எனவே மாணவர்களுக்கான தேவைகளைப் பெற்றோரும்,சமூகமும் நிறைவு செய்கின்ற நிலையில், மாணவர்கள் ஒழுக்கசீலங்களையும், கல்வியையும் சமநிலையில் கற்றுத் தேற முடியும்.

பரிசில்களும், பாராட்டுக்களும் ஊக்குவிப்புக்கான வெகுமதிகள். இவை நாம் உயர்நிலை பெறுவதற்கு எம்மை வழிப்படுத்துகின்றன. சாதாரணமாக வீடுகளில் இருந்து வளர்த்துவரும் செயற்பாடு, பாடசாலையில் பரிசளிப்பு விழா என்ற வகையில் மாணவர்களின் திறமையை சமூகத்துக்கு வெளிப்படுத்துகின்றது. பரிசில் பெறுபவர்கள் வெற்றிப் பெருமிதத்துக்கும், பரிசில் பெறாதவர்கள் தோல்வி மனப்பாங்குக்கும் உள்ளாகக்கூடாது. தோல்வியை வெற்றியின் முதற்படியாகக் கொள்ள வேண்டும்-என்றார். (எ-11)



உதயன் அலுவலக வாணி விழா நேற்று பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஆசிரியர் கே.தாரணி சிறப்புரையையும் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகள் குழுப் பாடலையும் வழங்கினர். நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம ஆசிரியர், பொது முகாமையாளர், கணக்காளர் மற்றும் பணியாளர்களையும் காணலாம். (14)

# இயந்திரமயமான வாழ்வு முறையால் உளப்பாதிப்பு, தேவையற்ற தலையீடுகள்

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.25

இயந்திரமயமான வாழ்க்கை முறைக்குள் எம்மவர் வாழப் பழகி விட்டதால், பொழுதுபோக்கு நேரத்தைத் தவிர்த்து அவசர அவசரமாக காரியங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக உளப்பாதிப்புகளும் தேவையில்லாத் தலையீடுகளும் ஏற்படுகின்றன என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்தார்.

யாழ். வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற உலக உளநலநாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே உதயகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தீய, நல்ல விடயங்கள் எல்லாவற்றையும் நாமே தேடிக் கொள்கிறோம். கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் எமது வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும், எவை நல்லவை எவை தீயவை என்பதை நாமே உருவாக்கிக் கொள்கிறோம்.

வாழ்க்கையில் நேரான சிந்தனை இருந்தால் வாழ்க்கையும் சீரானதாக இருக்கும். இடையூறுகள் ஏற்படும் போது எம்மால் முடியும், இது பலன் தரும் என்ற நேர் சிந்தனையை மனதில் கொள்ள வேண்டும். எமது பிரதேசத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் மக்களையும், மாணவர்களையும் வெகுவாகப் பாதிப்படையச் செய்துள்ளது.

> தனிநபர் மட்டுமல்லாது அனைவரும் ஏதோ ஒரு நெருக்கீடுகளுக்குள் தள்ளப்பட்டுள்ளோம். இதன் காரணமாகவே உளப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

எனினும் தற்போது இயந்திரமயமான வாழ்க்கை முறைக்குள் தள்ளப்பட்டுள்ளதால் மனதை ஆற்றுப்படுத்தக் கூடிய பொழுது போக்கு நிகழ்வுகளில் பங்குபற்றுவதைத் தவிர்த்து வருவதுடன் நேரம் போதாமையால் அவசரமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தனிநபர் மட்டுமல்லாது அனைவரும் ஏதோ ஒரு நெருக்கீடுகளுக்குள் தள்ளப்பட்டுள்ளோம். இதன் காரணமாகவே உளப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. குறிப்பாக மாணவர்கள் மத்தியில் உளப் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள், நூல்களை வாசித்தல் போன்ற செயற்பாடுகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார். (எ-14)

### மூன்றாமிடம்



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இணுவில் இந்துக் கல்லூரி மாணவி க.மோகனஜெனனி 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (எ)

### பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றோர்

தீவக வலய மட்டத்தில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரம் வெளிவந்துள்ளது.

பிரிவு-1

1 ஆம் இடம்-ஜே.டினோஜா-காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், 2 ஆம் இடம்-ஏ.தர்சனா-நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், 3 ஆம் இடம்-சி.சதுஸ்ரா-தம்பாட்டி அ.த.க.பாடசாலை.

பிரிவு-2

1 ஆம் இடம்-சி.வனிதா-காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயம், 2 ஆம் இடம்-சி.புருஷோத்தமி-காரைநகர் சுப்பிரமணிய வித்தியாலயம், 3 ஆம் இடம்-இ.லஜானன்-நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்.

பிரிவு-3

1 ஆம் இடம்-சி.சிவப்பிரியா-யாழ்ற்ரன் கல்லூரி, 2 ஆம் இடம்-தே.வேணுப் பிரியா-யாழ்ற்ரன் கல்லூரி, 3 ஆம் இடம்-கோ.டிலக்சன்-நயினாதீவு மகா வித்தியாலயம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# தொடரும் அழிப்பு

போர் முடிந்து விட்டாலும் தமிழ் மக்களின் இழப்புக்கள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. போரின் போது உயிர்களையும் உடைமைகளையும் சுடுகலன்களுக்கும் எறிகணைகளுக்கும் தமிழர்கள் காவு கொடுத்தனர். அரச படையினரும் அவர்களை ஏவி விட்ட அரசும்தான் இவற்றைச் செய்தன.

போரின் போது தமிழ் மக்களின் உயிர்களையும் சொத்துக்களையும் அழித்தமைக்காக வருத்தப்படவோ மக்களுக்கு இழப்பீடுகளை வழங்கவோ இந்த அரசு முன்வரவில்லை. அத்துடன் நின்றுவிடாது போரின் பின்னரும் தமிழ் மக்களுக்கு இழப்புக்களையே ஏற்படுத்தி வருகின்றது.

அவற்றில் முக்கியமானவை காணிகள் மற்றும் வளங்கள். தமிழ் மக்களின் காணிகள் தொடர்ந்தும் இராணுவத்தினராலும் மற்றைய படையினராலும் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகள் வைத்திருந்த சொத்துக்கள் அனைத்தும் அரசுக்குரியவை என்ற சுவப்பாடுகளுடன் முதலில் இந்தக் காணி அபகரிப்புத் தொடங்கியது. பின்னர் படை முகாம்கள் அமைப்பதற்கான அரச காணிகள் என்ற போர்வையில் அது வளர்ந்தது. அடுத்து தேசிய பாதுகாப்புத் தேவைகள் என்பதன் கீழ் பொதுமக்களின் காணிகள் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டன.

அதில் கடைசியாக இடம்பெற்றது கேப்பாபிலவு சம்பவம். படை முகாம் அமைப்பதற்காக பொதுமக்களின் காணிகளைப் படையினர் பிடுங்கிக் கொள்ள, சூரியபுரத்தில் –காட்டுப்பகுதியில் அந்த மக்களுக்குக் காணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. கேப்பாபிலவில் ஆகக் குறைந்தது 2 ஏக்கர் காணியையாவது கொண்டிருந்த ஒரு குடும்பத்துக்கு சூரியபுரத்தில் இப்போது கொடுக்கப்பட்டிருப்பதோ வெறும் அரை ஏக்கர் காணிதான்.


இவ்வாறு தொடர்ந்தும் மக்களின் காணி நிலம் அரசால் பிடுங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மற்றொரு பக்கத்தில் அபிவிருத்திக்கு என பெருமளவிலான காணிகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்படுகின்றன, பிரதேச மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறியாமலேயே.

இது மட்டும் போதாது என்று, இறுதிப் போரில் மக்களால் கைவிடப்பட்ட தமிழ் மக்களின் சொத்துக்களும் பெருமளவில் சூறையாடப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை வாகனங்கள். முள்ளிவாய்க்காலில் கைவிடப்பட்ட வாகனங்கள் இரும்புகளாக வெட்டி சட்டவிரோதமாக விற்கப்படுகின்றன. அவ்வாறு திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்பட்ட 21 வாகன இயந்திரங்கள் ஓமந்தையில் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வன்னி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது வாகனங்களுக்கான அரச பதிவுகள், புத்தகங்கள் என்பவற்றில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் இப்போது வாகனங்களின் உரிமையாளர்கள் பலரால் தமது உரிமையை நிலைநாட்ட முடியாமல் உள்ளது. இதனை வாய்ப்பாகக் கொண்டுதான் வாகனங்களைத் துணிவாகத் திருடுகிறார்கள். முள்ளிவாய்க்கால் முழுவதும் படையினர் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்து அவர்களுக்குத் தெரியாமல், அவர்களின் துணையில்லாமல் திருட்டு நடக்கிறது என்பதை பச்சைக் குழந்தையும் ஏற்காது. அப்படி எனில் இதுவும் தமிழர்களின் சொத்துக்களைத் திட்டமிட்டு அழிக்கும் அரசின் திட்டத்தில் ஒன்று என்று சந்தேகங் கொள்வதில் தவறேதும் இருக்காது.

# அடுத்ததாக உலகை ஆளப்போவது யார்?

சு.வெங்கடேஸ்வரன்



ஜனநாயக நாட்டில் தேர்தல் காலம்தான் திருவிழா. நாடாளுமன்றம் எனும் கோயிலில் மூலவராகவும், உற்சவ மூர்த்தியாகவும், அதனைச் சுற்றியிருக்கும் பரிவார தேவதைகளாகவும் யார் யார் இருக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்கிறார்கள்.

ஜனநாயக நாடுகள் ஒவ்வொன்றிலும் ஆட்சியாளர்கள் தேர்வு செய்யப்படும் முறை சிறிது மாறுபட்டாலும், அவர்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் என்னவோ மக்கள்தான்.

சாதாரண நாடுகளிலேயே இந்த நிலை என்றால் உலகையே ஆட்டிப் படைக்கும் அமெரிக்காவில் நடக்கும் தேர்தல் என்றால் கூடுதல் முக்கியத்துவம்தான்.

ஒரு நாட்டின் அதிபர் எடுக்கும் முடிவு நல்லதோ, கெட்டதோ அது பெரும்பாலும் அந்த நாட்டுடன் முடிந்து விடும். ஆனால் அமெரிக்க அதிபர் என்றால் அப்படியல்ல; அவர் எடுக்கும் முடிவுகள் உலகின் தலையெழுத்தையே மாற்றவல்லது. எனவே உலக நாடுகள் அனைத்தினாலும் ஆவலுடனும், சில நாடுகளால் சற்று அச்சத்துடனும் எதிர்பார்க்கப்படுகிறது அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவு.

ஜனநாயகக் கட்சி சார்பில் இப்போதைய அதிபர் பாரக் ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். குடியரசுக் கட்சி சார்பில் மிட் ரோம்னி களமிறங்கியுள்ளார். துணை அதிபர் தேர்தலில் இப்போதைய துணை அதிபர் ஜோ பிடென், குடியரசுக் கட்சியின் போல் ரயானை எதிர் கொள்கிறார்.

வேட்பாளர்கள் அனல் பறக்கும் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர். தேர்தல் நாளும் குறிக்கப்பட்டு விட்டது. வழக்கமாக நவம்பர் மாதத்தில் வரும் முதல் செவ்வாய்க் கிழமைதான் அங்கு தேர்தல் நடத்தப்படும். அதன்படி எதிர்வரும் 6ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது.

**தேர்தல் முறை**

அமெரிக்க அதிபர், துணை அதிபர் ஆகியோர் மறைமுகத் தேர்தல் முறையிலேயே தேர்வு செய்யப்படுகிறார்கள். குடிமக்கள், அவர்களை நேரடியாகத் தெரிவு செய்வதில்லை. மக்கள் தமது வாக்காளர் குழுவுக்கான (எலெக்டோரல் கொலிஜ்) உறுப்பினர்களைத் தேர்வு செய்கின்றனர். மாகாணம் வாரியாக இந்த வாக்காளர் குழு தெரிவு செய்யப்படுகிறது. மாகாண மக்கள் தொகைக்கு ஏற்ப வாக்காளர் குழுவுக்கான வாக்கு எண்ணிக்கை மாறும். பின்னர் இந்த வாக்காளர் குழுவினர் அதிபரையும், துணை அதிபரையும் தேர்வு செய்கின்றனர். இதுவே அமெரிக்காவில் அதிபர் தேர்தலுக்கான நடைமுறை.

**ஒபாமா தடுமாற்றம்**

தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதகால அவகாசம்கூட இல்லாத நிலையில், முதலில் ஒபாமாவின் கையே சிறிது ஓங்கியிருப்பதாக கருத்து கணிப்புகள் தெரிவித்தன. ஆனால் அதிபர் தேர்தலை முன்னிட்டு நடைபெறும் வேட்பாளர்களின் நேரடி விவாதத்தில் ஒபாமாவைப் பின்னுக்குத் தள்ளினார் ரோம்னி.

உள்நாட்டுப் பொருளாதாரம், வேலை வாய்ப்பு, சுகாதாரம் உள்ளிட்ட பிரச்சினைகளில் ஒபாமாவின் நிர்வாகம் தோல்வியடைந்து விட்டது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு ஒபாமா பதிலளித்தாலும், அது எடுபடவில்லை என்பது இந்த நேரடி விவாதம் தொடர்பாக எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் தெரியவந்தது. விவாதத்தில் ரோம்னி சிறப்பாகச் செயற்பட்டதாகவே பெரும்பாலானவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

**சறுக்கிய உத்தி**

விவாதத்தில் ஒபாமாவுக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு அவரது பரப்புரை உத்திகளும் காரணம். ஒபாமாவின் கொள்கைகள் அனைத்து நிலைகளிலும் தோல்வியடைந்து விட்டன, எனவே ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்பதை மையமாக வைத்து அமைந்துள்ளது ரோம்னியின் பரப்புரை முறை.

அதே நேரத்தில், அதிபராக ரோம்னிக்கு தகுதி உள்ளதா? அவருக்கான மதிப்பு என்ன? என்பதை மையமாகக் கொண்டு தனிப்பட்ட விமர்சனத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது ஒபாமாவின் பரப்புரை.

**காலைவாரிய லிபியா**

லிபியாவில் அமெரிக்கத் தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தூதர் உள்ளிட்ட 4 பேர் கொல்லப்பட்ட சம்பவம் ஒபாமாவுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

''ஒபாமா அதிபரான பின் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தும், பயங்கரவாத அமைப்புகளிடம் இருந்தும் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. எனவே, அமெரிக்கர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், வெளியுறவுக் கொள்கையை மாற்றவும் தனக்கு ஆதரவு தரவேண்டும்'' என்று ரோம்னி கூறியுள்ளது அமெரிக்க மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இரண்டாவது நேரடி விவாதத்தில் வரிச் சீர்திருத்தம், குடியுரிமை, வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான ரோம்னியின் கொள்கைகளை ஒபாமா கடுமையாக விமர்சித்தார்.

**இந்தியர்களின் ஆதரவு**

ரோம்னியின் 'வெளிப்பணி ஒப்படைப்பு' (அவுட் சோர்ஸிங்) திட்டத்தில் இந்தியர்களும், சீனர்களும்தான் பயனடைவார்கள் என்ற ஒபாமாவின் குற்றச்சாட்டு எடுபட்டு, அவரது கை ஓங்கியுள்ளது.

அமெரிக்காவில் வேலையின்மை விகிதம் குறைந்திருப்பது, முன்பு இருந்ததைவிட பொருளாதாரம் சற்று மேம்பட்டிருப்பது ஆகியவை ஒபாமாவுக்குச் சாதகமான அம்சங்கள்.

கடந்த முறை, அமெரிக்க அதிபராகும் முதல் கறுப்பினத்தவர் என்ற பெருமையுடன் ஒபாமா பதவியேற்றபோது அமெரிக்க மக்களிடம் மட்டுமின்றி, சர்வதேச அளவிலும் மிகுந்த எதிர்பார்ப்பு இருந்தது. அவை நிறைவேற்றப்படவில்லை என்பதே பொதுவான கருத்து.

உலக நாடுகள் அனைத்தினாலும் ஆவலுடனும், சில நாடுகளால் சற்று அச்சத்துடனும் எதிர்பார்க்கப்படுகிறது அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவு.

இந்தத் தேர்தலில் அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரின் ஆதரவையும் பெற்றுள்ளார் ரோம்னி. இந்தியாவுக்கும், தங்களுக்கும் ஆதரவாக ரோம்னி இருப்பார் என்பது அவர்களது நம்பிக்கை.

அயல்பணி ஒப்படைப்பு போன்ற விஷயங்களில், ஒபாமா இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தார் என்பதே இந்திய வம்சாவளியினரின் ஆதரவை அவர் இழக்கக் காரணம்.

**கவர்ச்சி குறையவில்லை**

அதேநேரத்தில் ஒபாமாவுக்கு மிகத்தீவிர ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். பல்வேறு பிரச்சினைகளைச் சமாளிப்பதில் ஒபாமா தோல்வியடைந்துவிட்டார் என்று குறை கூறப்பட்டாலும், அவ்வாறு குறை கூறுபவர்களே, ஒபாமா மீது தங்களுக்கு தனிப்பட்ட அபிமானம் உண்டு என்று கூறுவது அவரது பலம்.

அரசியல்வாதி என்பதைத் தவிர வெற்றிகரமான தொழிலதிபர் என்ற பெருமையைப் பெற்றவர் ரோம்னி. கடந்த முறை குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை ரோம்னி இழந்தார். எனினும் அவரை அதிர்ஷ்டக்கார அரசியல்வாதி என்று வர்ணிக்கும் அவரது ஆதரவாளர்கள், இந்த முறை வெற்றிபெற வேண்டும் என்பதால்தான் அவருக்குக் கடந்த முறை வாய்ப்பு கிடைக்கவில்லை என்று கூறி வருகின்றனர்.

மொத்தம் 538 வாக்காளர் குழு வாக்குகள் உள்ளன. இதில் 270 வாக்குகளைப் பெறுபவரே வெற்றி பெறுவார். கடந்த முறை ஒபாமா 365 வாக்குகள் பெற்று அபார வெற்றி பெற்றார். ஆனால் இந்த முறை வெற்றிக்காக அவர் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும்.

இப்போதைய சூழ்நிலையில் ரோம்னி, ஒபாமாவைவிட ஒரு படி பின்தங்கியிருந்தாலும், தேர்தலுக்கு இன்னும் சிறிது கால அவகாசம் இருப்பதால், முடிவு எப்படி வேண்டுமானாலும் மாற வாய்ப்புள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சிகளை பீடைகளாக மாற்றுவது நாம் தான்



ச.சுவந்தினி
விவசாய உயிரியல் துறை விவசாய பீடம்.

உலகில் எண்ணிலடங்கா பூச்சியினங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றில் ஒருவீதத்திற்கும் குறைவானவையே பீடைகளாக இனங் காணப்பட்டுள்ளன. பீடைகள் என்று கருதப்படுபவைகூட எண்ணிக்கையில் அதிகமாகும். பயிர்களுக்கு பொருளாதாரச் சேதத்தை விளைவிக்கும் போது தான் அவை விவசாயிகளின் எதிரிகளாக மாறுகின்றன. இதனைக்கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு வழிகளில் முயல்கின்றனர் விவசாயிகள். ஆனால் அநேகராலும் விரும்பப்பட்டு பின்பற்றப்படுவது இரசாயனக் கட்டுப்பாட்டுமுறையே ஆகும். விரைவான பலன் கிடைக்கச் செய்வதே இம் முறையினைப் பயன்படுத்துவதற்கான பிரதான காரணமாகும். யாழ்.மாவட்ட மக்கள்கூட பீடைத் தாக்கமற்ற புதிய அழகான மரக்கறி, பழ வகையையே விரும்புகின்றனர். அவற்றிற்கு பின்னால் மறைக்கப்பட்டிருக்கும் விரும்பத்தகாத விளைவுகளை யோசிப்பதில்லை. வெயிலிலும் மழையிலும் அல்லற்பட்டு உருவாக்கிய உற்பத்திகளை பீடைத் தாக்கம் காரணமாக உரிய முறையில் சந்தைப்படுத்த முடியவில்லை என்றால் அவற்றினால் ஏற்படும் நட்டமானது பெரியளவில் விவசாயிகளை தாக்குகின்றது. சிலர் குறைந்த விலைக்கு தமது உற்பத்திகளை விற்க மனம் வராது கால்நடைகளுக்கு உணவாக்குகின்றனர். எனவே பீடைக் கட்டுப்பாடு என்பது அத்தியாவசியமான தொன்றாகக் காணப்படுகின்றது.

பயிர்ச்செய்கையில் பீடைக்கட்டுப்பாட்டு முறைகளைப் பார்ப்பதை விடுத்து பூச்சிகள் எவ்வாறு பீடைகளாக மாறின? அவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கான நுட்பங்கள் பற்றி தெளிவாக்க முனைவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு சூழல் தொகுதியினை எடுத்துக் கொண்டால் பல்வேறு வகையான இடைத்தொடர்புகள் உயிரிகளுக்கிடையில் காணப்படுகின்றன. அவற்றிலொன்று தான் தாவரங்களுக்கும் பூச்சிகளுக்குமிடையில் காணப்படுவது. தாவரங்களும் பூச்சிகளும் ஒன்றிலொன்று பரஸ்பரம் வாழக் கூடியவை. அதாவது தாவரம் பூச்சிகளுக்கு உணவினையும் பூச்சிகள் தாவரங்களுக்கு அத்தியாவசியமான சூழலியற் சேவைகளையும் வழங்குகின்றன.

ஒவ்வொரு சூழற்தொகுதியிலும் உயிர்ப்பல்வகைமை என்பது முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இவை ஒரு சூழற்தொகுதியின் உற்பத்தியினைப் பெருக்க உதவுவதோடு உணவுச்சங்கிலியை உருவாக்கும் முக்கிய அம்சங்களாகவும் காணப்படுகின்றன. மேலும் இயற்கையாக நிகழும் வட்டச் செயற்பாடுகளை (உ-ம்:- நீர் வட்டம்) சமநிலைப்படுத்துவதிலும் முக்கியபங்கு வகிக்கின்றன. இதனால் ஒரு சூழல் தொகுதியில் ஒரு குறிப்பிட்ட இனம் எந்த எண்ணிக்கையில் இருக்கின்றது என்பது முக்கியமல்ல. சிறியதாக இருந்தாலும் அவற்றின் பங்களிப்பு அதிகமானதாகக் காணப்படும்.

பயிர்ச்சூழற்தொகுதியும் அவ்வாறான ஒரு சூழற்தொகுதியாகும். இது வேறுபட்ட உயிரிகளின் பல்வகைமை மூலமாக சமநிலையில் பேணப்பட்டு வருகின்றது. இதில் நன்மை பயக்கும் பூச்சிகள், பீடைகள், ஏனைய உயிரிகள் (மண்புழு, ஈரூடக வாழிகள், ஊர்வன, பறவைகள்) போன்றன. மண், நீர் , வளி பேன்ற பௌதிகக் காரணிகளுடன் இடைத் தொடர்புகளைக் கொண்டு காணப்படுகின்றன. செயற்கை முறைகள் மூலமாக இச் சமநிலையினைக் குழப்ப முயலுகின்ற போது அசாதாரணமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக சாதாரணமாகக் காணப்படும் பூச்சியானது பெருமளவில் பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும் பீடையாக உருவெடுக்க முடியும். எனவே பயிர்ச் சூழற்தொகுதியில் காணப்படும் ஒவ்வொரு அங்கங்களினதும் பங்களிப்பை அறிந்த பிற்பாடு அவற்றைச் சாதகமான முறையில் பயன்படுத்தி தேவையான விளைவைப் பெற்றுக் கொள்ளுவதே புத்திசாலித்தனம்.

விவசாயம் என்பது ஒரு கலை. சாதாரணமாக எல்லோராலும் வெற்றிகரமாக நாற்று நட்டு அறுவடை செய்து விட முடியாது. பலகாலம் பெறப்பட்ட அனுபவங்களும் காலத்திற்கேற்ப பயிர் செய்தலும் தரமான உற்பத்திகளை தோற்றுவிக்க அடிப்படையானவை. அவற்றினோடு சில நுட்பங்களையும் ஒருங்கிணைத்துக் கொண்டால் பெரும்பாலான நட்டங்கள் ஏற்படுவதைத் தடுத்துக் கொள்ள முடியும் .

பீடை முகாமைத்துவம் என்பது பயிர்ச்செய்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். அதற்கான வியாபார நிலையங்களில் காணப்படும் முழு இரசாயனப் பீடைகொல்லிகளையும் விதம் விதமாக வாங்கி அடுக்கி வைத்திருந்து அளவு கணக்கில்லாமல் விசுறுகிறார்கள் நம் விவசாயிகள். இதனால் விவசாய உற்பத்திகளை வாங்கும்போது இரசாயனங்கள் இலவசம் என்பது போல எம்மை அறியாமலே அவற்றை பணம் கொடுத்து வாங்குகின்றோம் என்பது தான் உண்மை. இதன்மூலம் உடம்பில் உபாதைகள் ஏற்படுவதோடு உயிர்கொல்லி நோய்களுக்கு (புற்றுநோய், சிறுநீரகப் பாதிப்பு) ஆளாகி ஆயுட்காலமும் குறைவடைகின்றது. எனவே பயிர்ச்செய்கையில் வரும் பீடைகளை பக்க விளைவுகள் ஏற்படாமல் வினைத்திறனான முறையில் எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதைப் பார்ப்போம்.

நேர்த்தியான அவதானிப்பு பீடைக்கட்டுப்பாட்டின் அடிப்படையாகும். ஒரு கத்தரிச் செய்கையை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு நாளும் தோட்டத்துக்குச் சென்று என்னென்ன வகையான பூச்சிகள் காணப்படுகின்றன, அவற்றினால் சேதம் ஏற்படுகின்றனவா? , எப் பகுதியில் ஏற்படுகின்றது, சேதத்தின் அளவு, களைகளின் [illegible] காணப்படுகின்றதா என்பவற்றை ஆராய வேண்டும். சரி அதையடுத்து ஒரு சில பூச்சிகளை அவதானித்தவுடன் மருந்துக் கடைக்கு ஓடிச்சென்று மருந்தை வாங்கிக் கொண்டு வந்து தெளிக்கக் கூடாது. எமது விவசாயிகளின் வழமை அதுதான். காரணம் பின்னர் அப்பூச்சிகள் பல்கிப் பெருகி உற்பத்திகளின் தரத்தைக் குறைக்கும் என்பது அவர்களின் எண்ணம். இதன் மூலம் சாதாரண, வீரியமற்ற பூச்சிகளைக் கூட தமக்கு எதிரியாக்கி விடுகிறார்கள்.

ஒரு சூழலில் பீடை காணப்படின் அந்தப் பீடைக்குரிய இரை கௌவிகளும் அச் சூழலில் காணப்படும். இராசயனங்கள் பீடைகளை அழிக்கின்றனவோ இல்லையோ இரை கௌவிகளை அழிக்கின்றன. தொடர்ச்சியான அளவுக்கு அதிகமான இரசாயனப் பாவனை மூலம் தோற்றுவிக்கப்பட்ட எதிர்ப்புக்கு பீடை வகைகள் மேலும் உக்கிரமடைந்து பயிர்களுக்கு பொருளாதாரச் சேதத்தை விளைவிக்கின்றன. இரசாயனங்களின் பாவனையை உடனடியாக நிறுத்துவது சாத்தியமற்றது. எனினும் சூழலோடு ஒருங்கிணைந்த ஏனைய பீடைக் கட்டுப்பாட்டு முறைகளை இணைத்துக் கொள்வதன் மூலமாக படிப்படியாகக் குறைத்துக் கொள்ள முடியும்.

ஆரம்பத்தில் பூச்சிகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்ற சமயத்தில்கூட அவை சிறிதளவு சேதத்தை விளைவிக்கும். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் இரசாயனங்களை நாடுவது அவசியமற்றது. ஏனைய கட்டுப்பாட்டு முறைகளான கையால் அகற்றல், ஏனைய பொறிகளைப் பாவித்தல், களைகள் ஊடகமாக விளங்குமாயின் அவற்றைப் பிடுங்கி அகற்றல் போன்ற செயற்பாட்டு முறைகளை மேற்கொள்ளலாம். எனினும் அப்பூச்சியானது குறிப்பிடத்தக்க அளவு சேதத்தை ஏற்படுத்த முனையும்போது இரசாயனப் பீடை கொல்லிகளை அணுகலாம். இந்த நிலையை "பொருளாதாரச் சேதத்தைத் தாங்கும் மட்டம்" என்று அழைப்பர். இம்மட்டத்தை அனுபவமுள்ள விவசாயிகள் இலகுவாக கண்டறிந்து கொள்ளுவார்கள். பீடை கொல்லிகளைப் பாவிக்கின்ற போது நீலம் அல்லது பச்சை பட்டிகள் கொண்டவற்றைத் தேர்ந்து எடுப்பது ஆபத்துக் குறைந்தது. தற்போது மாவட்ட விவசாயத்திணைக்களத்தினால் அத்தகைய இரசாயனங்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. சிவப்பு, மஞ்சள் பட்டிகளைக் கொண்ட இரசாயனங்கள் ஆபத்தானவை மட்டுமல்லாது நீண்ட காலத்திற்கு உற்பத்திகளில் தேங்கி நிற்கக்கூடிய ஆற்றலையும் கொண்டவை. மருந்துச் சிட்டையில் மேலதிகமாகக் கவனிக்க வேண்டியது அறுவடைக்கு பின்னரான கால இடைவெளியாகும். உதாரணமாக அறுவடைக்குப் பின்னரான கால இடைவெளி 14 நாள்கள் என்று குறிப்பிட்டிருப்பின் மருந்தடித்து 14 நாள்களின் பின்னரே அறுவடை செய்ய வேண்டும். [illegible] யின் விலை அதிகரிக்கும் என அறிந்து இன்றைக்கு பிடுங்கி மருந்தடித்த கத்தரியை இன்றைக்கே சந்தைக்குக் கொண்டு செல்லல் உகந்ததான ஒரு செயற்பாடு அன்று. இலாப நோக்காக இருக்குமே தவிர விவசாயத் தொழிலுக்கான உன்னதம் இல்லாமல் போய் விடும். எனவே அனைவரது நலன்களையும் கண்முன்னே கொண்டு வந்து இன்றைய செயற்பாடுகளை மேற்கொள்வது பாராட்டுக்குரியது.

சில காலகட்டத்தில் பீடைகளின் தாக்கம் மிக உக்கிரமாகக் காணப்படும். அவை பொருளாதாரச் சேதத்தை தாங்கும் மட்டத்தையும் மீறி பொருளாதாரச் சேதத்தை ஏற்படுத்தும் மட்டத்தை அடைந்து விடும். அந்த மட்டத்திற்கு ஒருபீடையின் தாக்கம் வருமாயின் அப்பீடையைக் கட்டுப்படுத்துவது சாத்தியமற்றுப்போய் விடும். போதிய அறிவின்மையால் சேதம் அம்மட்டத்தை அடைந்த பின்னரும் இரசாயனங்களை அதிகளவில் வீசுவார்கள் நம்மவர்கள். இதனால் ஏனைய நன்மை பயக்கும் பூச்சியினங்கள், மண்வாழ் உயிரிகள் அழிவதோடு மட்டுமல்லாது அதிக செலவும் பயனற்றதாகிப் போய்விடும். இதனைவிட மழை மூலம் கழுவிச் செல்லப்பட்டு நீர் நிலைகளை அடைந்து மாசுக்களை ஏற்படுத்தும். இதன் மூலம் நீர் வாழ் உயிரிகளின் வாழ்க்கை அச்சுறுத்தலுக்குள்ளாகும். மேலும் நிலத்தின் கீழ் வழிந்தோடி குடிதண்ணீரில் நீர் மாசாக்கிகளை அதிகரிக்கும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக குறித்த பீடைகொல்லிகளுக்கு எதிர்ப்புக்குல வகைகள் தோற்றுவிக்கப்பட்டுவிடும். திரும்ப அடுத்த பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் போது இரசாயனப் பீடை கொல்லிகளினால் கூட கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு அப்பீடையின் தாக்கம் அதிகமாகக் காணப்படும். பின்னர் அதனைவிட செறிவு கூடிய மருந்துகளை அடிக்கும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் விவசாயிகள். இன்றைய சூழலில் அவ்வாறானதொரு நிலைமை தான் காணப்படுகின்றது . மாறி மாறி மருந்தடித்து விதம் விதமான பீடைகளும் உருவாகி விட்டன. அவற்றினை அழிக்க புதிய மருந்து வகைகளும் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. முடிவு தான் எட்டப்படவில்லை.

பயிரானது அறிகுறியினைக் காட்டுகின்ற போது அவை போசணைக் குறைபாட்டினால் ஏற்படக் கூட வாய்ப்புக்கள் உள்ளன. சிலவேளைகளில் பீடைகளினால் ஏற்படும் அறிகுறியும் போஷணைக்குறைபாட்டினால் ஏற்படும் அறிகுறியும் ஒரே மாதிரியானவையாகக் காணப்படும் . மண்ணில் தாவரத்திற்கு தேவையான போசணைகள் கிடைக்கின்றனவா என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். சத்துக்களின்றி பயிர்கள் பலவீனமாகக் காணப்படுமாயின் அவை பீடைகள் மூலம் இலகுவாகத் தாக்கமடையும்.

குறிப்பிட்ட ஒரு பூச்சித்தாக்கத்திற்கு சிலர் பூச்சிநாசினிகளைப் பாவிப்பதை விடுத்து பங்கசு நாசினிகளை விசுறுவார்கள். இது மூடத்தனமான செயற்பாடாகும். அதனால் எதுவித நற்பலனும் கிடைக்காது. பொதுவாக பீடைகள் மிகவும் சிறியனவாக காணப்படும்பட்சத்தில் அவற்றை அவதானிப்பது சிரமமானதாகக் காணப்படும். எனவே பயிர்களில் காணப்படும் அறிகுறியை வைத்துக் கொண்டே என்ன பீடையின் மூலம் ஏற்பட்டிருக்கலாம் என ஊகிக்க வேண்டியிருக்கிறது. காரணியை சரியாக இனங் காணல் எல்லோராலும் முடியாத விடயம்.

சில விவசாயிகளின் முன் அனுபவம் இதற்குக் கை கொடுக்கும். எனினும் காரணியை இனங்காண முடியவில்லை எனின் கண்டபடி மருந்துகளை விசுறாமல் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு அதற்கான ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளலாம். விவசாயபீடமும் அந்தப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

இன்றைய கால கட்டத்தில் மனிதன் இயற்கையுடனான உறவைத்துண்டித்து விட்டு செயற்கையுடன் உறவினை வளர்த்து வருகின்றான். விளைவுகளும் மனிதனை விலத்தியே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. முடிவாக பூச்சிகளின் பங்கினை உணராமல் அவற்றினைப் பீடைகளாக மாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

எல்லா வளங்களையும் அவற்றினை அழிப்பதற்கான செயற்பாடுகளுக்கும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். இவை ஏனைய உயிர்வாழிகளுக்கு அழிவை ஏற்படுத்துவதாக இருக்கும். எனவே எதிர்காலத்தை நினைவில் நிறுத்தி இயற்கையுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்வது சாலச்சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்முகப் பயணம்

எனது நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அப்போது "உங்களின் வீடு எதுவென்று உங்களுக்குத் தெரியுமா சேர்?" என்று கேட்டேன்.

அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். அதன் பின் தெரியும்!" என்றார்.

சரி உங்களின் தொலைபேசி எண் உங்களுக்குத் தெரியுமா? என்றேன்.

"தெரியும்!" என்றார்.

"உங்கள் மனைவி, பிள்ளைகள் யார் என்று தெரியுமா?" என்று கேட்டேன்.

"தெரியும் !" என்றார்.

"சரி.... நீங்கள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? என்றேன்.

இப்பதான் அவர் முழிக்க ஆரம்பித்தார்

அவர் மட்டும் அப்படி இல்லை

நாம் எல்லோரும் அப்படித்தான்

எதிரில் நிற்பது யார் என்று தெரியும். ஆனால் நாம் யார் என்று எமக்குத் தெரியாது

உண்மையில் நாம் யார்? இந்தக் கேள்விக்கான பதிலைத்தான் வாழ்க்கை முழுவதும் நாம் தேடிக்கொண்டிருக்கிறோம்.

புத்தர் என்ன சொல்கிறார் தெரியுமா?

"நீங்கள் கடவுளைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. உங்களைப் பற்றிய கவலை உங்களுக்கு இருந்தால் போதும் என்றார்.

நான் யார்? எனக்கு ஏன் இந்தக் கவலை? என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்!" என்றார்.

நாம் ஏன் கடவுளைப் படைத்தோம்?

அது ஒரு நழுவல் முயற்சியாம்! அதாவது தன்னிடமிருந்து தானே தப்பிக்கும் ஒரு முயற்சியாம்! என்று அறிஞர்கள் சொல்கின்றனர்.

மக்கள் பொய்யான பிரச்சினைகளில் ஆர்வமாக இருக்கின்றனர். அதற்குத் தீர்வுகள் காணவும் முயற்சிக்கின்றனர். கடவுளைப் பற்றி விவாதிக்க எல்லோருக்கும் விருப்பம். தன்னுடைய சுயம் பற்றிய பிரக்ஞையே இருக்கின்றதில்லை. எனவே இதில் பெரிய விடயம் என்னவென்றால்... கடவுள் சமாளிப்புக்குப் பயன் படுத்தப்படுகின்றார்!

மனவியல் என்ன சொல்கிறது தெரியுமா?

கடவுள், சொர்க்கம், மறுபிறவி இதைப்பற்றியெல்லாம் பேச ஆரம்பிக்கின்றவர்கள் யார் தெரியுமா?

போருக்குப் போகின்றவன், துன்பத்தில் உழல்கின்றவன் நோய்ப்படுக்கையில் விழுந்தவன் இவர்கள்தான்! எங்கள் அனுபவத்திலேயே பார்க்கின்றோம்!

கடவுளைத் துணைக்குக் கூப்பிடுகின்றவன் யார் என்று கவனித்துப் பாருங்கள்

பரீட்சை எழுதப் போகின்றவன்... வேலை தேடி அலைகின்றவன்... பண நெருக்கடியிலேயே இருக்கின்றவன், விபத்திலே சிக்கிக் கொண்டவன்.. இவர்கள் தான் எல்லோரும்....

பரீட்சையில் வெற்றிபெற்றதும் அவரை துணைக்குக் கூப்பிடுவதில்லை. வேலை கிடைத்ததும் அவர் துணை தேவைப் படுவதில்லை.

ஏன் இப்படி? சிறிது யோசித்துப் பாருங்கள்!

துன்பம் வருகின்றபோது.... அந்தத் துன்பத்தைத் தவிர்க்க வேண்டிய நிலையில்... அதிலேயிருந்து நழுவிப் போவதற்காக பிரார்த்தனை தேவைப்படுகின்றது.

எல்லாம் நல்லபடியாக நடக்கின்றபோது பிரார்த்தனையும் செய்வதில்லை.

புத்தருடைய வழி என்ன தெரியுமா?

அந்த வழியிலே கடவுளும் இல்லை. பிரார்த்தனையும் இல்லை.

புத்தர் செய்தது இதைத்தான்

அதாவது கடவுளிடமிருந்து மனிதனையும், மனிதனிடமிருந்து கடவுளையும் அவர் விடுவித்தார்.

புத்தமதம் என்ன சொல்கின்றது தெரியுமா?

கடவுள் பிரச்சினை அல்ல, மனிதன்தான் உண்மையான பிரச்சினை!"

உங்களை நீங்கள் அறிந்து கொண்டுவிட்டால் போதும்!நீங்களே கடவுளாகி விடுவீர்கள்.. என்கின்றது. அதனாலே எமக்குத் தேவை உள்முகப் பயணம்...

நான் யார்? என்கின்ற கேள்வியோடு உள்ளே போக வேண்டும், அங்கே போனால்தான் தெரியும் 'நான்' என்று அங்கே யாரும் இல்லை என்பது!

இதெல்லாம் புத்தர் சொல்லும் தத்துவம்

தத்துவம் என்று சொன்னாலே எமக்கெல்லாம் அதைப் புரிந்து கொள்வது கஷ்டம் தான்

எம்மைப் பொறுத்தவரை தத்துவம் என்பதில் இரண்டுவகை உண்டு.

ஒன்று தத்துவம். இன்னொன்று மகாதத்துவம். தத்துவம் என்றால் என்ன தெரியுமா?

கேட்கின்றவர்களுக்குப் புரியவில்லை என்றால் அது தத்துவம். சொல்பவர்களுக்கு புரியவில்லை என்றால் அது மகாதத்தவம்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 237 வருடங்களுக்கு முன் மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட புங்குடுதீவு றோ.க.த.வித்தி



அந்நியர்களின் வருகை நாட்டின் கல்வித்துறையில் புதிய சகாப்தம் ஒன்றை உருவாக்க உதவியது என்பதை வரலாறுகள் மூலம் அறிய முடிகின்றது. புங்குடுதீவு றோ.க.த.வித்தியாலயம் சுமார் 237 ஆண்டுகளுக்கு முன் தமது சமயத்தைப் பரப்பும் நோக்குடன் கத்தோலிக்க மிஷனரிமாரால் 1775 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்பது சிலரின் கருத்தாக உள்ளது. கத்தோலிக்கப் பாடசாலையாக இது உருவாக்கப்பட்ட போதும் ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு கல்வி பயில வாய்ப்பளித்த ஒரு பாடசாலையாகவும் இது அமைந்திருந்தது. அதனால் சகல மக்களும் இந்தப் பாடசாலையின் மூலம் தம் வாழ்வைச் சீர்படுத்திக்கொண்டனர் என்பதுவும் மக்களின் கருத்தாக உள்ளது.

**லக்ஸ்மன்**

இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 1950 ஆம் ஆண்டு வரை ஆரம்பப் பாடசாலையாகவே இயங்கிவந்துள்ளது. 1980 ஆம் ஆண்டில் சிரேஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. எனினும் 1972 இல் தரப்படுத்தல் முறைக்குள் உள்வாங்கப்பட்டு மீண்டும் ஆரம்ப நிலைக்கு மாற்றப்பட்டது. புங்குடுதீவு மகாவித்தியாலயம் இந்தப் பாடசாலைக்குச் சமீபமாக உள்ளதால் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். இந்தப் பாடசாலை தரப்படுத்தலுக்கு உள்வாங்கப்பட்டு 1972 வரை புங்குடுதீவின் கல்வி வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாற்றி வந்துள்ளது என்பதை அப்போதைய ஊர்காவற்றுறை வட்டாரக்கல்வி ஆசிரியர்கள் சங்கம் குறிப்பிடுகின்றது.

பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறைகொண்ட அதிபர்கள், அவர்கள் இதன் வளர்ச்சிக்காக மேற்கொண்டிருந்த பணிகள், கல்வித்திணைக்களம் மற்றும் அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் இதன் வளர்ச்சிக்காக வழங்கிய உதவிகள் குறித்த எந்தவொரு விவரங்களும் பாடசாலையில் இருப்பதாகத் தெரியவில்லை. 1975 இல் ஊர்காவற்றுறை வட்டாரக் கல்வி ஆசிரியர் சங்கம் வெளியிட்ட குறிப்பில், இந்தப் பாடசாலை குறித்த முழுமையான தரவுகள் எதுவும் காணப்படவில்லை. ஆரம்பகால அதிபர் முதல் அவரைத் தொடர்ந்து அதிபர் பதவியில் இருந்தவர்கள் குறித்த விவரங்கள் எதுவும் அந்தக் குறிப்பில் இடம்பெறாதிருப்பது பாடசாலையின் வரலாற்றை ஏனைய பிற்கால சந்ததியினர் தெரிந்துகொள்ள வாய்ப்பின்றிப் போயுள்ளது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாகவுள்ள ஒரு பாடசாலையின் வரலாற்றைத் தெரிந்து கொண்ட பெரியவர்கள் கூட, இப்போது புங்குடுதீவில் இருப்பதாகத் தெரியவில்லை.

1975 இற்கு முன் இது போன்ற நட்புறவுகள் பலமாகக் காணப்பட்டதாகவும் பாடசாலையின் முன்னேற்றத்துக்காக பெற்றோர்கள் பெரும் ஒத்துழைப் பையும், பண உதவிகளையும் வழங்கி தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தார்கள் எனவும் கூறப்படுகிறது. 1974 இல் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து சிறந்த ஒரு கலைவிழாவை நடத்தியிருந்தனர்.

ஓலையினால் வேயப்பட்ட கூரையையும், மண் சுவர்களையும் குந்துகளையும் கொண்டதாக இருந்த அதன் ஆரம்பத்தில் இப்பொழுது புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய கட்டடங்கள் போதிய இட வசதிகள், தளபாடங்களைக் கொண்ட பாடசாலையாக 1975 ஆம் ஆண்டு முதல் மாற்றமடைந்துள்ளது. இடப்பெயர்வுக்கு முன்னர் அதாவது 1991 இற்கு முன் பெற்றோர், ஆசிரியர்கள் மாணவர் தொடர்புகள் நட்புறவானதாக இருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

1975 இற்கு முன் இது போன்ற நட்புறவுகள் பலமாகக் காணப்பட்டதாகவும் பாடசாலையின் முன்னேற்றத்துக்காக பெற்றோர்கள் பெரும் ஒத்துழைப்பையும், பண உதவிகளையும் வழங்கி தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தார்கள் எனவும் கூறப்படுகிறது. 1974 இல் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து சிறந்த ஒரு கலைவிழாவை நடத்தியிருந்தனர்.

அந்தக் காலங்களில் பாடசாலை சகல துறைகளிலும் வளர்ச்சியுற்று விளங்கியதாகவும் அன்றைய ஆசிரியர் சங்கத்தின் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

போர் சூழ்நிலை காரணமாக 1991 இல் ஏற்பட்ட இடப்பெயர்வினால் இந்தப்பாடசாலை மூடப்பட்டது. மக்கள் மீண்டும் மீளக்குடியமரத் தொடங்கிய பின்னரும் போதிய மாணவர்களின்மையால் பாடசாலையைத் திறக்க முடியாத நிலை இருந்தது. எனினும் படிப்படியாக இதன் தற்காலிக மீள்குடியமர்வு ஓரளவு இடம் பெறத் தொடங்கியதை அடுத்து தீவகவலயத்தின் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வி.இராதகிருஷ்ணன். தற்போதைய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ் ஆகியோர் மேற்கொண்ட முயற்சியினால் 2010 ஆம் ஆண்டில் மீண்டும் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி புங்குடுதீவு றோ.க.த.க. வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் அதிபராக ச.ஸ்ரீதரன் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆரம்பத்தில் 42 மாணவர்கள் மட்டுமே இணைந்து கொண்டனர். எனினும் 2012 இல் மாணவர்களின் தொகை 84 ஆக அதிகரித்துள்ளது. அதிபர் உட்பட ஐந்து நிரந்தர ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதால், மாணவர்களின் கல்வி விளையாட்டுத்துறைகளில் அதிபர் ஆசிரியர்களின் அக்கறை கூடுதலாகக் காணப்படுகின்றது. தமது கடமை நேரத்திற்குப் புறம்பாக மேலதிக வகுப்புகளிலும் கலந்து கொள்கிறார்கள். எதிர்காலத்தில் புலமைப்பரிசில் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டுகின்றார்கள். இணைபாட விதான செயற்பாடுகளிலும் வளர்ச்சி தென்படுகின்றது. கோட்ட வலய மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெற்று பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுக் கொடுப்பதில் இவர்களுக்கும் விருப்பமுண்டு.

இடப்பெயர்வின் பின் மீண்டும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலை என்பதால் தமது தேவைகள் குறித்து வலயத்துடன் தொடர்பு கொள்ளும் போது வலயம் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தீவின் கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பை இந்தப் பாடசாலை வழங்கி வந்ததாகவும் சொல்லப்படுகிறது. மீண்டும் அந்த நிலையை எட்ட வேண்டும் என்ற தனது முயற்சிக்கும் பாடசாலையின் ஆரம்பம் முதல் இடப்பெயர்வு ஏற்பட்ட காலப் பகுதி வரைக்குமான வரலாறு குறித்த தேடல்களுக்கும் ஆசிரியர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது போன்று பாடசாலை குறித்த தகவல்கள் தொடர்பாக மக்களும் தமக்குத் தெரிந்த உண்மையான தகவல்களைத் தந்துதவ வேண்டும் எனவும் அதிபர் ஸ்ரீதரன் கேட்டுக் கொண்டுள்ளார். தற்போது பெய்து வரும் மழையால் பாடசாலை வளவில் வெள்ளம்தேங்கிக் கிடப்பதையும் காண முடிந்தது. அதுவும் கவனிக்க வேண்டியதே.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பினரால் என்ன தர முடியும்? அவர்களின் தேசியம் எமக்குச் சரிவராது

## அரசுடன் சமாளித்துப் போவதே நன்மை என்கிறார் தவம்

அம்பாறை,ஒக்.25

முஸ்லிம்களுக்கு என்ன அந்தஸ்தை தரப்போகிறார்கள் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகத் தெளிவாகக் கூறாதவரைக்கும் தமிழ்த் தேசியத்தோடு உடன்பட்டுப் போகமுடியாது. இது யதார்த்தம்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபை அமைச்சர் எம்.ஐ.முகம்மத் மன்சூருக்கு சம்மாந்துறையில் இடம்பெற்ற வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று அரசுடன் ஆட்சியமைத்திருக்கின்றது. ஏனெனில், மு.காவைப் பொறுத்தவரை அரசுடனான உறவுகளிலே இருக்கின்ற விரிசல்களைக் கருத்திற்கொண்டு அரசுடன் இருக்கின்ற நம்பிக்கையைக் கட்டி வளர்க்க வேண்டிய தேவை முஸ்லிம் சமூகத்திற்கு இருக்கின்றது.



எதிர்க்கட்சியால் இன்னுமொரு ஆட்சி மாற்றத்துக்கான சூழல் தோன்றியிருக்கிறதா என்று பார்த்தால் அதையும் காணவில்லை. இப்படியான சூழ்நிலை இருக்கும்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணசபையில் எதிரணியில்போய் அமர்ந்து என்ன சாதிக்க முடியும்? ஒன்றுமே செய்யமுடியாது.

முஸ்லிம் சமூகம் மிக நீண்டகாலமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நிர்வாக ரீதியிலான எந்தப் பிரச்சினையிலும் ஏதாவது ஒன்றைத் தமிழ்க் கூட்டமைப்பால் நிறைவேற்றித்தர முடியுமா? இல்லை. அவர்களே அவர்களுடைய பல பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றபோது முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியிருக்கின்ற எத்தனையோ பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்வது?

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிய முதலமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டு எமது பிரச்சினைகளை எவரிடம் கேட்பது என்ற விடயம் இருக்கிறது. அது மாத்திரமல்ல, அரசோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு தெளிவான உடன்படிக்கையைச் செய்திருக்கிறது. அடுத்த இரண்டரை வருடங்களுக்கு முஸ்லிம்களுக்கு முதலமைச்சர் பதவி கிடைக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்ற முஸ்லிம் மக்களைக்கொண்ட ஒரு நிர்வாக அலகு, குச்சவெளியிலும், புல்மோட்டையிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக கொண்ட நிர்வாக அலகுகள் என்று முஸ்லிம் காங்கிரஸ் பெற்றிருக்கின்ற அரசியல் உடன்படிக்கையை இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யமுடியுமா? முடியாது.

அதேபோல் அம்பாறை மாவட்ட நிர்வாக அலகு என்று பல ஒப்பந்தங்களை அரசுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்திருக்கின்றது. தெளிவான எழுத்தில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன- என்றார். (ச)

# தமிழ் - முஸ்லிம் உறவு ஒருபோதும் சிதையாது


## மு.கா. உறுப்பினர்களுக்கு முஸ்லிம்கள் சரியான வேளையில் தக்க பாடம் புகட்டுவர் என்கிறார் அரியநேத்திரன் எம்.பி.

மட்டக்களப்பு,ஒக்.25

கிழக்கில் தமிழ் - முஸ்லிம் உறவைச் சிதைக்க பொய்யான தகவல்களைக் கூறி இனவாதத்தைப் பேசும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் முஸ்லிம் மக்கள் தக்க பதில் வழங்குவார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த திங்கட்கிழமை சம்மாந்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தமிழ் - முஸ்லிம் உறவை சிதைக்கும் - உடைக்கும் வகையில் உரையாற்றியுள்ளார்கள்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடுமையாக விமர்சித்துள்ளார்கள்.



அதில் குறிப்பாக அதாவுல்லாவின் கட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வாக்குப் பிச்சை கேட்டு வெற்றி பெற்ற உறுப்பினர் ஒருவர் முஸ்லிம் தேசியம், தமிழ்த் தேசியத்தோடு ஒருபோதும் இணைந்து போக முடியாது என்று கூறியுள்ளார்.

இவரின் இந்தக் கருத்து கட்சி ரீதியானது என்பதல்ல. இது அவரின் தனிப்பட்ட கருத்து. இதை தமிழ், முஸ்லிம் மக்கள் நன்கு புரிந்து கொள்வார்கள். இவருக்கும், இவருடன் சேர்ந்து தமிழ் - முஸ்லிம் உறவைச் சிதைக்க இனவாதத்தைப் பேசுவோருக்கும் எதிர்வரும் தேர்தல்களில் முஸ்லிம் மக்கள் தக்க பதில் வழங்குவார்கள்.

யார் எதைக் கூறினாலும் தமிழ் - முஸ்லிம் உறவு ஒருபோதும் உடையாது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாதிரி நாம் முஸ்லிம் மக்களை நடுத்தெருவில் விடமாட்டோம். முஸ்லிம் மக்களை அரவணைத்தே நாம் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பங்கெடுப்போம்- என்றார். (ச)

## களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை அபிவிருத்திக்கு ஜப்பான் நிதியுதவி

மட்டக்களப்பு,ஒக்.25

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்காக ஜப்பானின் அபிவிருத்தி ஸ்தாபனம் 500 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது.

இதுதொடர்பான சந்திப்பு நேற்றுமுன்தினம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்த அபிவிருத்திப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் சுகாதார சேவைகளின் அபிவிருத்திக்காக, ஜப்பானின் அபிவிருத்தி ஸ்தாபனம் 4000 கோடி ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## விவசாயிகளுக்கு உபகரணங்கள்

மட்டக்களப்பு,ஒக்.25

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கும், கால்நடை உற்பத்தியாளர்களுக்கும் ஊக்குவிப்பு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வு கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி, அபிவிருத்தி கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் மாகாண அமைச்சின் விவசாய திணைக்களம் சிறந்த விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கிக் கௌரவித்தது.

## மாணவியின் சீருடை மீட்பு

### பொலிஸார் விசாரணை

திருகோணமலை,ஒக்.25

திருகோணமலை, தம்பலகாமம் பகுதியில் உள்ள பொற்கேணி கிராமத்துக்கு அருகில் உள்ள பற்றைக் காடொன்றில் இருந்து 13 வயது மதிக்கத்தக்க பாடசாலை மாணவி அணியக் கூடிய சீருடை மற்றும் பெண்கள் பாவிக்கும் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

அநாதரவாக விடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ள இந்த சைக்கிள், சீருடை தொடர்பாக தம்பலகாமம் பொலிஸாரின் கவனத்துக்குப் பொது மக்கள் கொண்டுவந்ததையடுத்து, பொருள்களை கைப்பற்றிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவிகள் யாரும் காணாமற் போனது குறித்தோ பொருள்கள் திருடப்பட்டது குறித்தோ எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக பெற்றோர் மிகவும் கவனத்துடன் செயற்படுமாறு பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (ச)

## மான்களை வேட்டையாடிய நால்வர் கைது

கண்டி,ஒக்.25

மான்களை வேட்டையாடியதாகக் கூறப்படும் நான்கு பேரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி, சுதுவெல்ல பகுதியில் வைத்தே இந்த நபர்களை பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து துப்பாக்கியொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச)

## ஒரே குடும்பத்தில் மூவருக்கு மரண தண்டனை

கண்டி,ஒக்.25

கொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டு குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்குக் கண்டி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

புசல்லாவ பகுதி தோட்டத்தில் 51 வயது நபரை கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

மூவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள கொலைக் குற்றம் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளிப்பதாக நீதிவான் மணிலால் வைத்தியதிலக தெரிவித்தார். (ச)

### தாயே காளியே நவீன சூரன்களை ஒழித்திடு அம்மா..!



திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை சூரசங்காரம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மீது குடும்ப உறுப்பினர்கள் கூடுதல் நம்பிக்கை கொள்வர். குறித்த காலத்தில் தொழில், வியாபார இலக்கு நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கி தருவார்.

**இடபம்:** புதிய பணிகள் குறுக்கிடுவதால் உங்களின் அன்றாட செயல்களில் தாமதம் ஏற்படும். அனுபவசாலியிடம் ஆலோசனை கேட்டுச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** உங்கள் செயல்களில் முன்யோசனை நிறைந்திருக்கும். முயற்சிகளுக்கு உரிய பலன் குறைந்தளவில் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி பெற தகுந்த வாய்ப்பு வரும், பயன்படுத்துவதால் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** உங்களைச் சுற்றி நடக்கும் சூழ்நிலை உணர்ச்சி வசப்படும் தன்மையை உருவாக்கும். பொது விடயங்களில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதம் உண்டு.

**சிங்கம்:** உங்களை மதிப்பவரிடம் சொந்த விடயம் பற்றிப் பேசுவீர்கள். புதிய செயல்கள் எளிதாக நிறைவேறி நல்ல பாராட்டுதல்களை பெற்றுத்தரும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** நல்லவர்களின் அன்பும், ஆசியும் பலமாகக் கிடைக்கும். உருவாகும் பணியை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரம் சிறந்து திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரிவருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சிறந்த பணிக்காக நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர்.

**நாளை**

ஐப்பசி - 10 வெள்ளிக்கிழமை 26.10.2012
திதி: துவாதசி மு.இ.10.39 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி, மு.இ 10.38 வரை சித்தம்
சுபநேரம்: 06.03-07.33 வரை
ராகுகாலம்: 10.33- 12.03 வரை

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். கூடுதல் நம்பிக்கையுடன் செயற்படுவது அவசியமாகும். தொழில் வியாபாரம் வளர்ச்சிபெற சிலமாற்றம் செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் மனதில் அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். சுயதேவையைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற அதிகப்பணி புரிவது அவசியம். மிதமான அளவில் பணவரவு இருக்கும். பாதுகாப்பு குறைவான இடங்களில் பிரவேசிக்க வேண்டாம்.

**தனுசு:** இளமைக்கால நல்ல நிகழ்வுகளை எண்ணி மனதில் சந்தோஷம் கொள்வீர்கள். இதனால் செயல்களைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பாராத வகையில் அவசரப்பணி ஒன்று ஏற்படலாம். அன்றாடப் பணிகளில் சிறுமாற்றம் செய்வீர்கள். தொழில், வியாபாரம் சீர்பெற நண்பரின் உதவி கிடைக்கும். அளவான பணவரவு பெறுவீர்கள். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி கொடுக்கவேண்டாம்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் கூடுதல் வெற்றி கிடைக்கும். மனதில் ஆன்மிக நம்பிக்கை அதிகரிக்கும், தொழில், வியாபாரம் சிறந்து வாழ்க்கைத்தரம் உயரும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். நீண்டநாள் விவகாரத்தில் அனுகூலமான தீர்வு கிடைக்கும்.

**மீனம்:** உங்களின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். பொறுமை, புத்திசாலித்தனம் பணி சிறக்க உதவும். தொழில், வியாபாரத்தில் ஓரளவு வளர்ச்சி ஏற்படும். அளவான பணவரவு கிடைக்கும். செலவுகளில் சிக்கனத்தைப் பின்பற்றுவீர்கள். உத்தியோகத்தர் நிர்வாகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் கூடுதல் கவனம் கொள்வது நல்லது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | | | | 3 | | 7 | 5 |
| | 1 | 7 | | 6 | 9 | 3 | 4 | 2 |
| | | 3 | | 4 | | | | |
| 2 | | | | 1 | | | | |
| | | 8 | 9 | | 2 | 7 | | |
| | | | | 5 | | | | 9 |
| | | | | 7 | | 2 | | |
| 7 | 2 | 6 | 3 | 9 | | 8 | 5 | |
| 9 | 3 | | 4 | | | | 6 | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 2 | 3 | 4 | 1 | 8 | 6 | 9 |
| 8 | 6 | 3 | 5 | 9 | 7 | 4 | 2 | 1 |
| 4 | 1 | 9 | 6 | 2 | 8 | 5 | 7 | 3 |
| 6 | 2 | 4 | 8 | 1 | 9 | 3 | 5 | 7 |
| 9 | 7 | 5 | 4 | 6 | 3 | 1 | 8 | 2 |
| 3 | 8 | 1 | 2 | 7 | 5 | 9 | 4 | 6 |
| 1 | 9 | 6 | 7 | 5 | 4 | 2 | 3 | 8 |
| 5 | 3 | 7 | 9 | 8 | 2 | 6 | 1 | 4 |
| 2 | 4 | 8 | 1 | 3 | 6 | 7 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 . 01 . 1951

மறைவு
06 . 11 . 2011

அமரர் **நன்னியர் கணேஷ்**

**திதி : 25.10.2012 ( ஏகாதசி)**

கண்ணிமைக்கும் கணப்பொழுதில்
கடுகதியாய் வந்தானோ காலன் ?
எம் தலைவா !
எண்ணி முடியுமுன் வந்ததையா ஓராண்டு!
குன்றா உழைப்பும், குறையா ஊக்கமும்
வற்றா அன்பும், வியக்கும் கடமையும்
நித்தமும் மலருதப்பா எம் மனதில்
மாங்காத உம் நினைவுடன் என்றும் வாழ்வோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஊரெழு கிழக்கு, ஊரெழு. (24698)(6.8) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## குட்டியன் குணரத்தினம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டியன் குணரத்தினம் நேற்று 24.10.2012 காலை காலமானார்.

அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குட்டியன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரவன் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகலட்சுமியின் ( செல்வா) அன்புக் கணவரும், திருமகள், திருச்செல்வி, குணபாலன் (மன்னன், ஆஸ்திரேலியா), சஞ்சேகாந்தன் (மதி, டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைநாதனின் அன்பு மாமனும், திருஷா, திருசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று 24.10.2012 நடைபெற்று வேருண்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானவைரவர் கோயிலடி,**
**கரவெட்டி மேற்கு, கரவெட்டி.** (23668)(6.8)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65 வீதமான கைதிகள் போதைக்கு அடிமை

**மனித உரிமை ஆணைக்குழு தகவல்**

கொழும்பு,ஒக்.25

சிறையிலுள்ளவர்களில் 65 வீதத்துக்கும் அதிகமானோர் போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் என்று மனித உரிமைகள் ஆணையாளர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

சிறைக்கைதிகளில் பலர் குற்றம் ஏதும் சாட்டப்படாத நிலையில் நீண்ட காலமாக சிறையில் வாடுபவர்களாக உள்ளனர் என்று அவர் கூறினார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்ட ஆய்வின் மூலம் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினைகளை தீர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு இந்தப் பிரச்சினை தொடர்பாக பொதுவான பரிந்துரைகளை செய்யும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**சிறைக்கைதிகளில் பலர் குற்றம் ஏதும் சாட்டப்படாத நிலையில் நீண்ட காலமாக சிறையில் வாடுபவர்களாக உள்ளனர்.**



ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மொத்த தேசிய உற்பத்தியில் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்க வேண்டும் என்பது குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக துண்டுப்பிரசுர விநியோகம் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

# கட்டடத்தில் தீ விபத்து

கொழும்பு,ஒக்.25

அத்துருகிரிய பகுதி கட்டடம் ஒன்றில் நேற்று புதன்கிழமை அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துருகிரிய பிரதான வீதியில் உள்ள இரண்டு மாடிக் கட்டடத்தில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அத்துருகிரிய பொலிஸார் தீயணைப்பு படையினரின் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ மூண்டது எப்படி என்பது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# கருக்கலைப்பு சட்ட ரீதியாக

**சட்ட வரைவு விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு என்கிறார் திஸ்ஸ கரலியத்த**

கொழும்பு,ஒக்.25

இலங்கையில் தற்போது அதிக அளவில் சட்டத்துக்கு முரணாக இடம்பெறும் கருக்கலைப்பு நடவடிக்கைகளை சட்ட ரீதியானதாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான சட்ட வரைவு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது என்று பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

சில முக்கிய நிலைமைகளின் போது கருக்கலைப்பை சட்ட ரீதியானதாக மாற்றுவதற்கு இதன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய சிறுவயதில் கர்ப்பம் அடைதல், தாய் மனநிலை பாதித்திருத்தல், குழந்தை குறைபாடுகளுடனோ அல்லது இறந்தோ பிறக்கும் நிலைமை, குழந்தை பிரசவத்தால் தாயின் உயிருக்கு பாதிப்பு ஏற்படும் என்ற நிலையில் கருக்கலைப்பை மேற்கொள்வது சட்ட ரீதியாக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தச் சட்ட வரைவு விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**சட்டத்துக்கு முரணாக இடம்பெறும் கருக்கலைப்பு நடவடிக்கைகளை சட்ட ரீதியானதாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது என்றார் கரலியத்த.**



# 2 லொறிகள் மோதியதில் ஒருவர் சாவு

கொழும்பு, ஒக்.25

சிலாபம் - புத்தளம் வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமைஅதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையே (வயது-38)உயிரிழந்துள்ளார்.

புல்மோட்டையில் இருந்து தொடுவாவவுக்கு எண்ணெய் ஏற்றிச் சென்ற லொறியுமே கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி இரும்பு ஏற்றிச்சென்ற லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள் ளது.

எண்ணெய் ஏற்றிச் சென்ற லொறியின் சாரதி உறக்கத்தில் இருந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தோர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (ச)

# 350 முன்னாள் போராளிகள் சிவில் பாதுகாப்புப் படையில்



கொழும்பு,ஒக்.25

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் 350பேர் சிவில் பாதுகாப்பு படையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களைச் சேர்ந்த முன்னாள் போராளிகளில் 350 பேரே இவ்வாறு படையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று சிவில் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகளையும் சிவில் பாதுகாப்பு படையில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிவில் பாதுகாப்பு படையின் வட பிராந்தியப் பொறுப்பதிகாரி மேஜர் அனில் பண்டார தெரிவித்தார்.

இந்தப் போராளிகளுடன் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் இளைஞர், யுவதிகள் சிவில் பாதுகாப்பு படையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் 2200 பெண்களும், 800 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களை உள்ளடக்கிய விவசாய வேலைத்திட்டம் ஒன்று நேற்று புதன்கிழமை, கிளிநொச்சி, அம்பாள்நகர் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த விவசாயத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கொன்ஸ்டபிள்களாக 240 பேர் இணைப்பு

கொழும்பு,ஒக்.25

தமிழ் மொழியை பேசக்கூடிய 240 பேரை கொன்ஸ்டபிள்களாக பொலிஸ் திணைக் களம் இணைத்துக் கொண்டுள்ளது. இவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் கடமையில் ஈடுபடுத் தப்படவுள்ளனர் என்று பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் தெரிவித்தார்.

கொன்ஸ்டபிள் சேவைக்காக 350 பேர் தேவைப்பட்டபோதிலும் 240 பேரை மாத்திரமே இணைத்துக் கொள்ள முடிந்தது என்று அவர் மேலும் தெரி வித் தார். (ச)

# வைத்தியர்கள் இன்று வேலை நிறுத்தம்

கொழும்பு,ஒக்.25

சம்பள அதிகரிப்பு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்தியர்கள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 24 மணி நேர வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் அவசர நடவடிக்கைகளில் மாத்திரமே வைத்தியர்கள் ஈடுபடுவார்கள் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# படகுகள் அதிகம்; அகதிகள் குறைவு

**நேற்றும் மாட்டினர் 16 பேர்**

கொழும்பு,ஒக்.25

இலங்கையில் இருந்து அகதிகளாக ஆஸ்திரேலியா செல்வோரின் படகுகள் அதிகரித்துள்ளபோதும், அந்தப் படகுகளில் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது என்று ஆஸ்திரேலியாவின் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 10 ஆம் திகதி முதல் இதுவரையில் 6 இலங்கை அகதிப் படகுகள் ஆஸ்திரேலியாவை சென்றடைந்துள்ளன. எனினும் அந்தப் படகுகளில் 12 பேருக்கும் குறைவான அகதிகளே பயணித்துள்ளனர்.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முனைந்த 16 பேர் நேற்று புதன்கிழமை அம்பாந்தோட்டையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படகுப்பயணத்தை ஆரம்பிக்க திட்டமிட்ட நிலையில் இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நபர்கள் அம்பாந்தோட்டை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# சாதாரண தரப் பரீட்சை டிசெ.11 இல்

கொழும்பு,ஒக்.25

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி தொடக்ம் 21 ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இந்தப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

www.doenets.lk என்ற இணையத்தள முகவரியில் பரீட்சை அட்டவணையைப் பார்வையிட முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகளால் மூடும் நிலையில் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம்

**சாடுகிறார் விஜித ஹேரத்**

கொழும்பு,ஒக்.25

ஊழல் மோசடிகளினால் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடும் நிலை ஏற்படவுள்ளது என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார்.

மசகு எண்ணெய் இறக்குமதியை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி அரசியல் வாதிகள் தரகுப் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூட நேரிடும் என்று சில காலங்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தேன். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையேனும் பராமரிக்க வேண்டும். அரசு இதுகுறித்து கவனம் செலுத்தத் தவறியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பல ஆண்டுகளாக செயற்பட்டு வந்த சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புநிலையத்தை மூடுவதனால் கோடிக் கணக்கான ரூபா நட்டம் ஏற்படும்



என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் ஸ்தம்பிதம் அடைவதனால் நாளொன்றுக்கு ஐந்தரை கோடி ரூபா நட்டம் ஏற்படுகிறது என்று அவர் கூறினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகக் குறைபாடுகளே இதற்கான காரணம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

# காரைநகர் மணிவாசகர் சபையின் சைவ சமயப் பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபையினால் காரைநகர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் சைவ சமயப் பாடப் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக மணிவாசகர் சபையின் பரீட்சைச் செயலாளர் க.நேத்திரானந்தன் தெரிவித்தார்.

ஆயிரத்துக்கும்மேற்பட்ட மாணவர்கள் தோற்றும் இந்தப் பரீட்சையானது காரைநகரில் உள்ள 12 பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் 5 மாணவர்கள் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன் தரம் ரீதியாக முதல் 5 இடங் களைப் பெறும் மாணவர்களுக்கு புத்தகப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி அவர்களும் கௌரவிக்கப்பட உள்ளனர்.

(வ-250)

## HOLY FAMILY CONVENT
## 1862 - 2012
## SESQUICENTENARY GLOBAL REUNION
## PAST PUPILS' ASSOCIATION

Join the joyous celebration of the sesquicentenary of the establishment of Holy Family Convent, Jaffna The Global Reunion Lunch of the Past Pupils' Association will take place on Sunday the 28th of October 2012 in the School Hall.

Walk down your memory lane from 9.00 am beginning with the Holy Eucharist in the Convent Chapel.

Date : 28 October 2012
Time : 9.00 a.m.
Venue: School Hall

Past Pupils' Association
Holy Family Convent, Jaffna.

(24717)(6-8)

## தவறிவிட்டது

23.10.2012அன்று (607881804V) இல. தேசிய அடையாள அட்டை, கைத்தொலைபேசி, மோட்டார் சைக்கிள் வரிப்பத்திரம், இன்சூரன்ஸ், வங்கிப்புத்தகங்கள், அடகுச் சிட்டை, கண்ணாடி, ஒரு தொகைப் பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை இணுவில் கே.கே.எஸ் வீதியில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் கே.கே.எஸ் வீதி இணுவிலில் உள்ள 'கணமயிலோன் பார்மசி' அல்லது அதன் அருகிலுள்ள 'பகவான் ஸ்ரோர்ஸ்' என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(224718)(5-6)

## கண்ணீர் அஞ்சலி



இரு தசாப்தங்களுக்கு மேலாக யாழ் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றி அமரத்துவம் அடைந்த Dr. விநாயகமூர்த்தி குகதாஸ் (பல்வைத்திய நிபுணர்) அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

லாவன்யா பல் மூக்கு கண்ணாடியகம்
(றெஜிசொலமன்)
மொறாயஸ் பல் மூக்கு கண்ணாடியகம்
(மொறாயஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(24719)(3-6)




யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் (பிரதி அதிபர்)

### திருமதி விமலரத்தினம் சிவகுமாரன்

(பிரதி அதிபர் S.L.T.S-I)

35 ஆண்டுகள் ஆசிரிய சேவையில் எமது பாடசாலையில் 16 வருடங்கள் ஆசிரியராகவும் ஏழு வருடங்கள் பிரதி அதிபராகவும் சிறந்த சேவையாற்றி இன்று 25.10.2012 இல் ஓய்வுபெறுகின்ற எமது பிரதி அதிபர் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

அவரது ஆசிரிய சேவை விவரம்:

| | |
|---|---|
| .யா/தொண்டைமானாறு மகா வித்தியாலயம் | 17.05.1977 – 23.05.1978 |
| .யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை | 24.05.1978 – 31.07.1979 |
| .யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | 01.08.1979 – 15.01.1980 |
| .யா/வட இந்து மகளிர் கல்லூரி | 16.01.1980 – 31.12.1980 |
| .கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | 01.01.1981 – 31.12.1981 |
| .தி/திரியாய் மகா வித்தியாலயம் | 01.01.1982 – 07.02.1982 |
| .வு/கனகராஜன்குளம் மகா வித்தியாலயம் | 08.02.1982 – 31.03.1989 |
| .யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் | 01.04.1989 – 03.01.2006 |
| .யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் பிரதி அதிபர் | 04.01.2006 இன்றுவரை |

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
தும்பளை, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி ரதிதேவி கணேஷக்குருக்கள்

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி ரதிதேவி கணேஷக்குருக்கள் 23.10.2012 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கௌரி.கணேஷக்குருக்களின் அன்பு மனைவியும் முள்ளியவளை காலஞ்சென்றவர்களான பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர்-புவனேஸ்வரி அம்மாள் தம்பதியரின் மகளும், இலங்கை இந்துமத குருபீடாதிபதி சிவாசாரிய சிம்மம் நாயன்மார்கட்டு சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாசாரியார்-கௌரி அம்மாள் தம்பதியரின் மருமகளும்,காயத்திரி, காத்யாயினி, கல்யாணி கஜன், கௌரிகணேஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.10.2012 நேற்று கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.கணேஷ்வர குருக்கள்
(மருமகன்)
இல. 70, முகத்துவாரம் வீதி,
கொழும்பு-15
தொ.பே.: 011 252 8484

ஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவக் குருக்கள்
(மைத்துனர்).

(சி/4303)(5-6)

## தங்கப் பவுணுக்கு அதிகூடிய பணம் தரும் வங்கி


24 கரட்
ரூ. 48,500/-

22 கரட்
ரூ. 44,500/-



ரூ. 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட சகல அடகுக் கொடுக்கல் வாங்கல்களுக்கும்* சுடுநீர் போத்தல் ஒன்று இலவசம்

NDB
ரன்னப
அடகுச் சேவை



இச்சலுகையை பின்வரும் NDB கிளைகளில் பெறமுடியும்

| | | | |
|---|---|---|---|
| அம்பாறை | யாழ்ப்பாணம் | மாத்தறை | வவுனியா |
| மட்டக்களப்பு | கல்முனை | நீர்கொழும்பு | வத்தளை |
| சிலாபம் | கண்டி | புத்தளம் | சுன்னாகம் |
| காலி | கொட்டாஞ்சேனை | இரத்தினபுர | நாவலப்பிட்டி |
| ஜா-எல | மாத்தளை | திருகோணமலை | அளுத்கம |

அழையுங்கள் 011 2 44 88 88

இச்சலுகை 2012 செப்டெம்பர் 26 முதல் நவம்பர் 26 வரை மட்டுமே

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
* இருப்பு உள்ளவரை மட்டுமே.

AA (lka) Fitch Rating

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

PHOENIX O&M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லா மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# அகில இலங்கை சைவப்புலவர் சங்க பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும்

## ஞாயிறன்று மட்டு. கல்லடி உப்போடையில்

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் பட்டமளிப்பும் சைவ மாநாடும் எதிர்வரும் 28 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு உப்போடை கல்லடி சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின்தலைவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பேராதனை பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் முதன்மை விருந்தினராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் க.விமலநாதன், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.பிறேம்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் காலை அமர்வு, முத்தமிழ் முனிவர் சுவாமி விபுலானந்தர் அரங்கில் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில், பண்டிதர், சைவப் புலவர் க.நல்லரெத்தினத்துக்கு 'சித்தாந்த வித்தகர்' எனும் பட்டமும், தொழிலதிபர் வி.ரஞ்சிதமூர்த்திக்கு சைவப்புலவர் எனும் பட்டமும், 2012 ஆம் ஆண்டு தேர்வில் சித்தி பெற்றவர்களுக்கு 'சைவப்புலவர்' எனும் பட்டமும், 'இளஞ் சைவப் புலவர்' எனும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளன.

நிகழ்வில் மாலை நிகழ்வு பிற்பகல் 1.30 மணிக்கு சைவப்புலவர் அருணாசல தேசிக மணி அரங்கில் சங்க உப தலைவர் சா.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும்.

'சைவநாதம்' மலர் வெளியீட்டுரையினை கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிக இணைப்பாளர் முதுநிலை விரிவுரையாளர் திருமதி சாந்தி கேசவன் நிகழ்த்தவுள்ளார்.

இதேவேளை பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் பத்மநாதன் தலைமையில் சைவமாநாடு நடைபெறவுள்ளது. (வ-13-31)

## கடவுள் எங்கே இருக்கிறார்?

கடவுள் எங்கே இருக்கின்றார் என்பதற்கு விடையை இயற்கையே அளிக்கின்றது. ஒரு மணித்தியாலத்துக்கு ஆயிரம் மைல்கள் வீதம் பூமி தன்னைத்தானே தனது அச்சில் இருந்து சுழலுவதால், இரவு பகல் என்ற விநோதம் ஏற்படுகிறது. ஒரு மணித்தியாலத்தில் 6,600 மைல் வீதம் பூமி சூரியனைச் சுற்றி வரும் போது பலவகையான காலபோகங்களும், மழைவீழ்ச்சியும் அதன் விளைவால் உணவுப் பயிர்ச் செய்கையும் நடைபெறுகின்றன. உணவுப் பயிரின்றி மனிதன் பூமியில் வாழ இயலாது. இது ஒன்றே இறைவன் இருக்கிறார் என்பதற்குக் கண்கூடான அத்தாட்சியாகும்.

நன்றி,
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## மாணவருக்கு இலவச கண் சோதனை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான இலவச கண்பரிசோதனை முகாமை அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடத்தினர்.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 7 வரையிலான வகுப்புகளில் கற்கும் 183 மாணவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய அதிகாரி பரிசோதனைகளை மேற்கொண்டார்.

அவர்களில் 25 பேருக்கு பார்வையில்குறைபாடு காணப்பட்டதுடன் அதில் 12பேருக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை சோதனையில் தெரியவந்தது. இதனையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை பார்வைக் குறைபாடு காணப்படும் மாணவர்களுக்கு அடுத்த மாதம் மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படுமென கழகத்தலைவர் லயன் ச.மனோகரன் தெரிவித்தார். (வ-9)

## நாகர்கோவில் ஆலய குள சூழலில் அலரி மரங்கள்

வடமராட்சி, ஒக்.25

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் சுவாமி கோயில் சூழலில் உள்ள குளத்தைச் சுற்றி அலரிப் பூ மரங்கள் நடப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபை ஆளும் தரப்பு உறுப்பினர் திருமதி கிருஷாந்தி ரஞ்சனின் ஏற்பாட்டில் 100 அலரி மரக் கன்றுகள் பெறப்பட்டு குளத்தைச் சுற்றி நடப்பட்டுள்ளன.

குளத்துக்குப் பாதுகாப்பாகவும் அதேவேளை நடப்பட்ட அலரி மரத்தில் பூக்கும் பூக்கள் நித்திய பூசைக்கு பயன்படுத்துவதற்காகவுமே அலரிப் பூ மரங்கள் நடப்பட்டுள்ளன. (வ-8)

## சாவகச்சேரி பிரதேச சபையால் உள்ளூராட்சி வார நிகழ்வு

சாவகச்சேரி, ஒக்.25

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் மண்டபத்தில் பிரதேச சபையின் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெற்றன.

மேற்படி நிகழ்வில் தலைவர் சி.துரைராசா, உறுப்பினர் க.தங்கராசா ஆகியோர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து பொதுநூலகங்கள் ரீதியாக பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் முன்பள்ளி மாணவர்கள் மத்தியிலும், நடத்தப்பட்ட போட்டிகளில் தெரிவான மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மத்தியிலும் நடத்தப்பட்ட போட்டிகளில் தெரிவானவர்களுக்கும் பரிசில்கள் வழங் கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள், உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். (வ-131)

## ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி, ஒக்.25

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகையின் ஐப்பசி மாத இதழ்வெளியீட்டுவிழா நாளைவெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. பேரவை உறுப்பினர் ஜே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத் தலைவரும், நகர சபை உபதலைவருமான சி.பத்மநாதனும், மதிப்பீட்டுரையை சைவப் புலவர் க.நித்திய தசீதரனும் நிகழ்த்துவார்கள். (வ-8)

## சபரிமலை யாத்திரிகர்களுக்கு விசேட அ.அட்டை

சபரிமலை ஐயப்ப யாத்திரிகர்களுக்கான விசேட அடையாள அட்டைகளை வழங்க இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. மேற்படி விசேட அடையாள அட்டையைப் பெற விரும்புவோர் இல.248, 1/1, காலி வீதி, கொழும்பு-04 என்ற முகவரியில் அமைந்துள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அதனைப் பூர்த்தி செய்து கடவுச்சீட்டு அளவிலான புகைப்படப் பிரதிகளையும் இணைத்து திணைக் களத்தில் சமர்ப்பிக்குமாறு மேற்படி திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## வரணியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

வரணி, ஒக்.25

வரணிப்பிரதேசத்தில் சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் சாவகச்சேரி சுகாதார சேவைகள் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அம்சமாக கடந்த வார பிற்பகுதியில் சுகாதாரப் பணியாளர்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று குடிமனையின் சுற்றாடல் தூய்மை பற்றி பரிசோதனை மேற்கொண்டனர். வீடுகளில் மேற்கொண்ட சோதனையை உறுதிப்படுத்தும் நோக்கில் குடும்பத் தலைவர்களின் கையொப்பத்தையும் பெற்றுச் சென்றனர். (வ-122)

விமானடிக்கட்டுக்கள் மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள.............
ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்.
இல. 687, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்.
தொ.பே- 0212219686
(சி/2039)(3.14)

காணியும் வீடும் விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புங்கங்குளம் வீதியில் அமைந்துள்ள நி.ப 1 குளி 10¾ கொண்ட காணியும் அதனுள்ளமைந்துள்ள மாடி வீடும் உடன் விற்பனைக்குண்டு.
077 6693471 உடன் தொடர்பு கொள்ளவும்
021 7901915
(24711)(6-8)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற
திருமதி மிமலாதேவி விமலநாதன்
B.A (Hons). Dip.in Ed., M.Ed.
அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
ஆசிரியர் நலன்புரிக்கழகம்.
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்.
(24715)(6.8)

சிவமயம்
ஷஷ்டி யப்த பூர்த்தி வைபவ அழைப்பு



ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான நந்தன வருடம் ஐப்பசி மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (26.10.2012) நாளை துவாதசி திதியும் சித்தயோகமும் பூரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபவேளையில்
பாரத்வாஜ கோத்திரம் – உத்தரகோவை
நகுலேஸ்வரம் – கீரிமலை
பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா
ஸ்ரீமதி கௌரிமாலதி
தம்பதிகளுக்கு
இஷ்டதேவதா குலதேவதா பாரம்பர்ய தேவதா அனுக்கிரகத்துடனும் மட்டக்களப்பு மயிலம்பாவெளி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் அனுக்கிரகத்துடனும் பெரியோர்களின் ஆசியுடனும் மேற்படி ஆலயத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவம் நடைபெற இருப்பதால் தாங்கள் இஷ்ட மித்ர பந்துக்கள் சகிதம் வருகை தந்து சபையை சிறப்பித்து விப்ரபோஜனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
ஸ்ரீ லக்ஷ்மி வாசா
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
யாழ்ப்பாணம்.
T. P. No : 077 0072036, 077 8019106
தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ சந்திர சாந்தரூப சிவாச்சாரியார்
பிரதம குரு
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்,
ஸ்ரீமதி ச. ஸ்ரீ கௌரி தம்பதிகள்
செல்வி ச. பிரஹர்ஷிதா, செல்வி ச. ஹம்ஸத்வனி,
செல்வி ச. மயூரத்வனி, கா. நகுலேஸ்வரி அம்மா,
சு. பத்மாவதி
(24714)(6.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆற்றலை வளப்படுத்துவது




மாணவர் ஆற்றலை வெளிப்படுத்துவது என்று பொதுவாகப் பார்த்தால் பரீட்சைகள், நிகழ்ச்சிகள், தலைமைத்துவம், விளையாட்டு, இசை போன்ற விசேட செயற்பாடுகள். இவை அனைத்துப் பாடசாலையிலும் உள்ளன. ஆனாலும் ஆண்கள், பெண்கள் சமத்துவமாகவும் சகோதரத்துவத்துடனும் பழகுவதற்கான வாய்ப்பு கலவன் பாடசாலையிலேதான் உள்ளது. இதன் மூலம் ஆண்பிள்ளைகள், பெண் பிள்ளைகளின் சமத்துவத்தையும் அவர்களுக்கிருக்கும் ஆற்றலையும் புரிந்துகொள்ளவும் பெண் பிள்ளைகள் ஆண்பிள்ளைகளுடன் சமத்துவமாக வாழ்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படுகின்றது.

அத்துடன் தனிப் பாடசாலையில் கல்வி கற்றவர்களுக்கு கல்லூரியை விட்டு வெளியேறி பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரி, வேறு நிறுவனங்கள், வேலைவாய்ப்புகள் என்று செல்கின்றபோது வித்தியாசமான சூழலை உணர்தல், சகஜமாகப் பேசுவதற்கான தயக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் உண்டு. ஆனால் கலவன் பாடசாலையில் கல்வி கற்றவர்களுக்கு அவ்வாறான சந்தர்ப்பம் இல்லை. அவர்களுக்கு பாடசாலையிலே ஆண், பெண்களுக்கிடையிலான புரிந்துணர்வு, சமத்துவம், நட்பு என்னும் விசேட தன்மைகள் வளர்க்கப்பட்டிருக்கும் இதுவும் ஓர் ஆற்றல் என்பது பொதுவான கருத்து.

ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் எமக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்று புரிந்துகொள்ளவும், பெண்பிள்ளைகள் தாங்கள் ஆண்பிள்ளைகளுடன் போட்டியிடக் கூடிய வல்லமையும் ஆளுமையும் உடையவர்கள்தான் எனத் துணிந்து தமது ஆற்றலை வெளிப்படுத்த ஏற்ற இடம் கலவன் பாடசாலையே. அத்துடன் தங்கத்தின் அசல், நகல் நீரில் இடப்படும் போது அறியலாம். பிள்ளைகளின் ஒழுக்கமும் கலவன் பாடசாலையில் கற்கும்போது அறியமுடிகின்றது. பிறநாடுகளுக்குச் செல்வதற்கும், உயர்பதவிகளை வகிப்பதற்கும் அனைவருக்குள்ளும் ஒருவராக இருந்து கற்பதே சிறந்தது.


மேலும் பெண்கள் ஆண்களுடனும் ஆண்கள் பெண்களுடனும் போட்டியிட்டு ஒருவருக்கொருவர் சளைத்தவர் இல்லை என்பதை உணர்ந்து தத்தமது ஆற்றலை வெளிப்படுத்தவும் இணைந்தும் பிரிந்தும் செயற்படவும் பெண்களிடம் இருந்து பொறுமையைக் கற்கவும் ஆண்களிடம் இருந்து துணிச்சலைக் கற்கவும் ஏற்ற இடம் கலவன் பாடசாலை. மகாகவி பாரதியார் ஆண்களுக்கு பெண்கள் சரி நிகர் சமன் என்று கூறியுள்ளார். ஆகவே ஆண்களுக்கு சமமாக அமர்வதற்கு ஆசனம்கிடைக்கின்ற கலவன் பாடசாலை, பெண்பிள்ளைகளின் ஆற்றலை வளர்க்க சிறந்த இடம். அதேபோல் ஆண்பிள்ளைகளுக்கும் தனிப் பாடசாலையில் கற்பதனால் ஆணாதிக்கத்தில் உணரக் கூடிய பெண்களுக்கு சமனான உரிமை, சமனான ஆசனம் வழங்குவதற்கு தயக்கம் ஏற்படலாம்.

அதனால் கலவன் பாடசாலையே மாணவர் ஆற்றலை வெளிப்படுத்த, வளப்படுத்த சிறந்தது என்பது எனது தாழ்மையான கருத்து.



க.அபர்ணா, வட்டுக்கோட்டை.

# கடிகார முள்கள் வலப் பக்கமாக நகருவது........



பண்டைய காலத்தில் கடிகார முள்கள் கிடையாது. வளர்ச்சியடைந்த பின்பு, எழுத்துக்களைக் கொண்டு கணக்கிட்டனர். பின்னரே முள்கள் பயன்படுத்தப்பட்டன. காலப்போக்கில் மணி, நிமிடம், நொடி என்பனவற்றுக்கு தனித்தனியே முள்கள் பயன்படுத்தப்பட்டன. கடிகாரமானது வட அரைக்கோளத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. பூமியின் நடுப்பகுதியில் செல்லும் பூமத்திய ரேகையின் மேற்பகுதியில் வாழ்ந்த மக்களால் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் சூரியக் கடிகாரத்தின் நிழல் செல்லும் பாதையைப் பின்பற்றி முள்களின் திசையையும் வலப்பக்கமாக அமைத்தனர்.

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

# தோழியே...

எதிர்பாராத காலங்கள்
எம்மை இணைத்தது
எதுவரை தொடரும் என
ஏங்கினோமோ...
புரியலையா..
நம் நட்புக்கு
ஏதடி எல்லை
பள்ளி நாள்களில்
உன்னுடன் பழகிய
நினைவுகள்
பசுமையாயுள்ளன.
எத்தனை பல உறவுகளை
பள்ளி நாள்களில் சேமித்தோம்
அதிலும்
உன்னையும் பிரியாத
வரம் கேட்டேன்- அன்றும்
இன்றும் என்றும்
நீ தந்த நினைவுகள்
உனக்காகவே எனக்குள் வாழும்



நிஷா அஸ்ஷி

# அனர்த்தம்

அனர்த்தம் பல கோடி
அதிலும் சில வகையுண்டு
பல லட்சம் மக்களைப் பலி
கொள்ளும் பாவியாய்
எம்மவரைக் காவு கொண்டு
மண்ணுக்கு உரமூட்டும்
காவிக் கொள்ளிகள்

சுனாமி எனும் பேரலையாம்
சூறாவளி எனும் சுழல் காற்றாம்

சாதி, மத பேதமின்றி
சரிநிகராய் அனைவரையும்
சின்னா பின்னமாக்கியதே

அல்லல்பட்ட மக்களை
அனுசரிக்க யாருமின்றி
நினைவுத் தூபிகட்டி
இட்டனரே அடிக்கல்லை
மடியவில்லை எம் மக்கள்
மகிழ்வுடனே கல்லறையில்
என்றும் [illegible]கின்றனர்

பா.கருணைரூபி, 2 ஆம் வருடம், ஆரம்பப் பிரிவு, தேசிய கல்வியியற் கல்லூரி.



# பிரிவு...

தினம் உனைப் பார்த்து
எப்போதும் உன்
நினைவுகளுடன்
வாழ்ந்த எனக்கு
உன் பிரிவு மரணத்தை
விட கொடிய
வலிமை தந்த டி
உன் பிரிவால்
நான் அடைந்த
வேதனையை...
வார்த்தைகளால்
சொல்லவும் முடியாமல்...
கதறி அழவும் முடியாமல்
தினம் தினம்
மரணிக்கிறேன் நான்...

ச.மேனுஷா, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :- ..........................................................

..........................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது

**கலவன் பாடசாலைகளா?**
**தனிப் பாடசாலைகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் மினிபஸ்கள் நேற்று சேவைப் புறக்கணிப்பு

## மினிபஸ் நடத்துநர் கைதுக்கு எதிராக

யாழ்ப்பாணம், ஒக்.25

தென்மராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர் நேற்று சிலமணி நேரம் திடீர் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டதால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

மினிபஸ் நடத்துநர் ஒருவர் கடமையிலிருந்த வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டதால் அவரை விடுவிக்கக் கோரியே இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து பணிப்புறக்கணிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மீண்டும் மினிபஸ்கள் பணியில் ஈடுபட்டன.

இதுதொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ். பிராந்திய அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது,

நேற்றுமுன்தினம் 811 ஆம் இலக்க தமது பஸ் கைதடியில் பயணிகளை இறக்கிவிட்டு பஸ் புறப்படத் தயாரான போது திடீரென அந்த பஸ்ஸுக்கு முன்பாக தனியார் மினிபஸ் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய நடத்துநர், அரச பஸ்ஸின் சாரதியைத் தாக்கியுள்ளார். பின்னர் கொடிகாமம் பஸ் நிலையத்திலும் அரச பஸ்ஸின் சாரதியைப் பலர் சேர்ந்து தாக்க முற்பட்டுள்ளனர்.

அதனால் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்ய சென்றபோது, சம்பவம் நடந்த இடம் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்டது என்பதால் அங்கு சென்று முறையிடுமாறு கூறப்பட்டது. அதன்படி சாவகச்சேரிப் பொலிஸில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது என்றார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட தனியார் பஸ் ஒன்றிய தலைவர் பொ.கெங்காதரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

அரச பஸ் பக்கம் மாறி விதிமுறைக்கு முரணாக மினிபஸ்ஸை முந்திச் சென்றதால் நடத்துநர் அரச பஸ்ஸின் சாரதியைப் பேசியிருந்தார். மறுநாளான நேற்று சாவகச்சேரிப் பொலிஸார் அந்த மினிபஸ் நடத்துநரைக் கைது செய்தனர். அவரை விடுவிக்குமாறு கோரியே தென்மராட்சி தனியார் பஸ்சேவைச் சங்கத்தினர் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நீதிமன்றினால் மினிபஸ் நடத்துநர் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து பணிப்புறக்கணிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது - என்றார்.

(ஜ-4-9)


## தேவை

உடுவிலிலுள்ள மருத்துவ நிலையத்துக்கு பரிசோதனைக்காக இரத்தம் எடுப்பதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை.

தொடர்பு: 0773715670

(24716)(3.6)



**தவறிவிட்டது** சுரேஸ்குமார் நிக்ஷன் (921904266V) தே.அ.அட்டை உரும்பிராய்க்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்- 0771536215 (24732)(6.9)


## அறிவித்தல்

வட்டாரம் - 14
பருத்தியடைப்பு வீதி (விளையாட்டரங்க வீதி)
ஆதன இல - 87
பெயர் - இளையப்பு கந்தையா

வட்டாரம் - 14
பருத்தியடைப்பு வீதி (விளையாட்டரங்க வீதி)
ஆதன இல - 85
பெயர் - இளையப்பு அப்பாக்குட்டி

வலி. கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்தின் எல்லைக்குட்பட்ட மேற்படி விவரத்தையுடையவர்களின் காணிகளை விற்பனை செய்வதற்கோ, வாங்குவதற்கோ எவருக்கும் உரிமை இல்லை என்பதனை இத்தால் உறுதிசெய்கின்றேன்.

தவிசாளர்,
வலி.கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

(24720)(3.6)

# மரண அறிவித்தல்கள்

## மார்க்கண்டு பாலமார்க்கண்டன் (seman)



உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலமார்க்கண்டன் கடந்த (21.10.2012) ஞாயிற்றுக் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் நீலாம்பாள் (கனடா) தம்பதியரின் மகனும், ஏழாலை மேற்கைச் சேர்ந்த கந்தையா - காலஞ்சென்ற சொர்ணலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், கலாவதியின் அன்புக் கணவரும், விதுஷன், ஷரன், வைஷாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மீனலோஜினி மற்றும் குமாரமார்க்கண்டன், சோதி மார்க்கண்டன், சரோஜினிதேவி, பத்மினி (கனடா), ரஞ்சினி (இத்தாலி), இராஜமார்க்கண்டன், விஜயமார்க்கண்டன் (கனடா) ஆகியோரின் சகோதரனும், சரோஜினிதேவி (கனடா), ரமா (லண்டன்), உஷா (லண்டன்), தனம் (லண்டன்), தேவகுமார் (லண்டன்), பாமினி (பிரான்ஸ்), பானுதேவன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2012) வியாழக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(24730)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## பஞ்சாட்சரம் சிவயோகி

(முன்னாள் ஊழியர் - காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)



அகிலேசர் வளவு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் சிவயோகி நேற்று (24.10.2012) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் - சரஸ்வதி தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், தனலட்சுமியின் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், வலிகாமம் கல்வி வலயம்), அன்புக் கணவரும், காயத்திரி (பிரதேச செயலகம், தெல்லிப்பழை), யாழினி (பிரான்ஸ்), தவநவேந்திரன் (Virthusa, கொழும்பு), துவாரகா (இலங்கை வங்கி, காங்கேசன்துறை), சிவசுரேந்திரன் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அங்கதனின் (பிரான்ஸ்) மாமனும், திருமதி ஜெயதேவி சுஜிதன், காலஞ் சென்ற கெங்காதேவி மற்றும் திருமதி சத்தியதேவி நித்தியானந்தன், செல்வி காசிதேவி, இராஜயோகி, திருமதி ரதிதேவி, சிவஅனுபூதிச்செல்வன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி இராஜலக்ஷ்மி கெங்காகுலதிலகம், திருமதி விஜயலக்ஷ்மி இராமச்சந்திரன், தெய்வேந்திரம், சந்திரசேகரம், வன்னியசேகரம், தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2012) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பங்களா வீதி, மல்லாகம்.

(24731)(6.8)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



(24728) (15-14)

எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் செல்வி காயத்திரி சிவயோகி அவர்களின் அன்புத் தந்தை

**பஞ்சாட்சரம் சிவயோகி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரி சங்க
அங்கத்தவர்களும்.*

*நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.*

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சந்திரசேகரம்



செம்பியன் பற்று தெற்கைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சந்திரசேகரம் நேற்று (24.10.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் மகனும், பாலசிங்கம், காலஞ்சென்ற செல்லக்கொழுந்து ஆகியோரின் சகோதரனும், இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், மனோகரி, மதியழகன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேந்திரன் (ஆசிரியர்), பாமதி ஆகியோரின் பிரியமான மாமனும், பாமினி, அஜந்தன், மதுஷன், மதுஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2012) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேருண்டை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி கிழக்கு.

(c/4306)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## கிளைக்குழுத் தெரிவுக்கான அறிவித்தல் 28.10.2012 - ஞாயிற்றுக்கிழமை

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 11.11.2005 ஆம் திகதி 1419 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் என் மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இன் ஏற்பாட்டின் படி வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களால் ஆக்கப்பட்டு 19.05.1998 ஆம் திகதி 1028/06 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானியில் வெளியிட்டதுமான '' வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்'' இன் ஏற்பாடுகளுக்கு அமைய வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை நடத்துவதற்காக மேற்படி விதிகளின் பிரிவு 06 இன் படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணைகள் பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி உப விதியின் பிரிவு 07 இன் படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும் அதன் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரமளித்து நியமித்துள்ளேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| தொ. இல. | கிளைகளின் பெயர் | கிளை இல. | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி | நேரம் | கிளைப்பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | மண்டை தீவு | 01 | திரு. க. நிமலன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | மண்டைதீவு மகாவித்தியாலயம் |
| 2. | மண்டைதீவு | 02 | திரு. வே. பிரதீஸ்குமரன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | மண்டைதீவு மகாவித்தியாலயம் |
| 3. | அல்லைப்பிட்டி | 03 | திரு.க. கமலநாதன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | அல்லைப்பிட்டி கிளைக்கட்டடம் |
| 4. | மண்கும்பான் | 04 | திரு. செ. செல்வகுமரன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | மண்கும்பான் மகாவித்தியாலயம் |
| 5. | ஆலம்புலம் | 05 | திரு.க.சுரேஸ்பாபா | 28.10.2011 | மு.ப. 10.00 மணி | வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 6. | தேவிகோட்டம் | 06 | திரு. அ. தயாளன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 7. | துறையூர் | 07 | திரு. அ. விமல்ராஜ் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | துறையூர் ஐயனார் பாடசாலை |
| 8. | சந்திரா | 08 | திரு. கு. நிசாந்தன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | துறையூர் ஐயனார் பாடசாலை |
| 9. | சிற்பனை | 09 | திரு.வை. கைலைநாதன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | வேலணை சரஸ்வதி வித்தியாலயம் |
| 10. | வங்களாவடி | 10 | திரு. சி. குணாளன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | வேலணை சரஸ்வதி வித்தியாலயம் |
| 11. | வேலணை மத்தி | 11 | திரு. இ. பாலச்சந்திரன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | வேலணை சரஸ்வதி வித்தியாலயம் |
| 12. | சோளாவத்தை | 12 | திரு. த. கண்ணதாசன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் |
| 13. | பள்ளம்புலம் | 13 | திரு. ம. கபிலன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் |
| 14. | சரவணை | 14 | திரு. இ. வேல்குமார் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் |
| 15. | கேணிக்கரை | 15 | திரு. நா . குமணதாசன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம் |
| 16. | அம்பிகைநகர் | 16 | திரு. பா. வாகீசன் | 28.10.2012 | மு.ப. 10.00 மணி | துறையூர் ஐயனார் பாடசாலை |

இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச்சபைக்கு வந்து வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் அநேகமான அங்கத்தவர்கள் இடப்பெயர்வு காரணமாக வேறு இடங்களில் வசிப்பதால் இந்த அறிவித்தலை தமக்கு வழங்கப்பட்ட தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்துக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

V.K. அருந்தவநாதன்
கூ. அ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி/4305)(6.8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். கோட்ட மட்டத்திலான உதைபந்து இறுதிப் போட்டிகள் சென்.ஜோன்ஸில் இன்று

**இறுதிப் போட்டியில் விளையாட 14 வயதுப் பிரிவின் யாழ். மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரிஆகிய அணிகளும்,18 வயதுப் பிரிவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி அணிகளும் தகுதி பெற்றுள்ளன.**

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாட 14 வயதுப் பிரிவின் யாழ்.மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகிய அணிகளும்,18 வயதுப் பிரிவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி அணிகளும் தகுதி பெற்றுள்ளன.

யாழ். கோட்ட மட்ட அரையிறுதியாட்டங்கள் நேற்றுப் புதன்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான முதலாவது அரை இறுதியாட்டத்தில் ஒஸ்மானியக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மத்தியகல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் சென் .ஜோன்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான முதலாவது அரை இறுதி யாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை அணி மோதிக் கொண்டது.

இதில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதி யாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி மோதிக் கொண்டது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இந்த இறுதியாட்டங்கள் இன்று வியாழக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

(ங-23)

## சென்.சாள்ஸ்– சென்.ஜோன்ஸ் சிநேகபூர்வஉதைபந்து




யாழ்ப்பாணம்ஒக்.25

சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென். சாள்ஸ் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு, 18 வயதுப் பிரிவு, 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று புதன்கிழமை சென். ஜோன்ஸ் கல் லூரி மைதானத்தில் இடம் பெற்றன. இந்தப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு-


14 வயதுப் பிரிவு மற்றும் 20 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணிகளுக்கும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. 16 வயது, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் சென். சாள்ஸ் வித்தியாலய அணி 2:0 என்ற கோல்கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

(ங-23)





புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை செட்டிக்குளம் மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்றது. இதில் ஆண்களுக்கான பிரிவில் கயிறு இழுத்தல் போட்டியில் ஆர்வத்துடன் பங்கு பற்றிய போட்டியாளர்களையும், கிரிக்கெட் போட்டியில்



# ஓய்வு குறித்து முடிவு கிடையாது

கிரிக்கெட் போட்டியிலிருந்து தனது ஓய்வு குறித்துத் திடமான முடிவேதும் கிடையாது என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் ஜாம்பவான் ஷேன் வோர்ண், 2007 ஆம் ஆண்டு கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டின் இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றிய ஷேன் வோர்ண், 2011 ஆம் ஆண்டு வரை இந்தியன் பிமிறியர் லீக் தொடரில் பங்குபற்றினார். அதன் பின்னர் போட்டியிலிருந்து ஓய்வுபெறுவதாக அவர் அறிவித்த போதிலும், அதே ஆண்டு டிசெம்பரில் இடம்பெற்ற முதலாவது பிக்பாஷ் லீக் தொடரில் அவர் பங்குபற்றியிருந்தார்.

இரண்டாவது முறையாக இடம்பெறவுள்ள பிக்பாஷ் லீக் தொடரில் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் தலைவராகச் செயற்படத் தயாராகிவரும் ஷேன் வோர்ண், தனது ஓய்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

2007ஆம் ஆண்டு ஓய்வுபெறும் போது கிரிக்கெட் போட்டியிலிருந்து முழுமையாகவே ஓய்வுபெற்றதாகத் தெரிவித்த ஷேன் வோர்ண், ஆனால் 2008 ஆம் ஆண்டு இந்தியன் பிறிமியர் லீக் தொடர் ஆரம்பித்தபோது அதில் பங்குபெற வேண்டுமென விரும்பியதாகவும், அதன் காரணமாகப் போட்டியில் மீண்டும் பங்குபற்றியதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு ஆஸ்திரேலியக் கிரிக்கெட்டிற்குத் தன்னால் ஏதாவதொரு வகையில் உதவிபுரிய முடியும் என்றால் அதை எந்தவகையிலாவது வழங்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்த அவர், கிரிக்கெட் போட்டி தொடர்பாக இன்னமும் விருப்புடனேயே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

708 டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றியுள்ள ஷேன் வோர்ண் - ஆஸ்திரேலியா சார்பாக அதிக டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றியவராக காணப்படுகின்றார்.

(5)

## போதைப் பொருள் பாவனை குறித்து எச்சரிக்கை

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வீரர் ஒருவர் போதைப் பொருள் பாவனை தொடர்பாக எச்சரிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கொக்கேன் பாவனை தொடர்பாகவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வீரர் யார் என்ற அடையாளம் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

போதைப் பொருள் பாவனை தொடர்பாக சோதனையில் குறித்த வீரர் சிக்கியிருக்காத நிலையில் அவருக்கெதிராக உத்தியோகபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாத நிலையில் அவருக்கு உத்தியோக பூர்வமற்ற ரீதியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை, தொழில் வழங்குநர் ஒருவர் தனது ஊழியர்களுக்கு ஒழுக்கவியல் விதிகளை நினைவுபடுத்துவது வழக்கமானது எனவும், அவை ரகசியமாகவே இடம்பெறுவது வழக்கம் எனவும் தெரிவித்துள்ளது.


இந்த விடயம் தொடர்பாக மேலும் விளக்கமளித்துள்ள அந்தச் சபை, ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தம் பெற்ற எந்தவொரு ஆஸ்திரேலியத் தேசிய வீரரோ, மாநில வீரரோ, பிக்பாஷ் லீக் தொடரில் பங்குபற்றும் வீரரோ போதைப் பொருள் பாவனை தொடர்பான சோதனையில் சிக்கியிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த விரும்புவதாகத் தெரிவித்துள்ளது.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லிக்கு வழிவிட்டது ஒக்லண்ட்

## பேர்த் ஆறுதல் வெற்றி



சாம்பியன்ஸ் லீக் தொடரில் ஒக்லண்ட் ஏசஸ் அணி, பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணியிடம் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இதையடுத்து 'ஏ' பிரிவில் இருந்து டெல்லி டெயாடெவில்ஸ், ரைட்டன்ஸ் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

தென்னாபிரிக்காவில் 4 ஆவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' கிரிக்கெட் தொடர் நடக்கிறது. செஞ்சூரியனில் நேற்றுமுன்தினம் நடந்த 'ஏ' பிரிவு லீக் ஆட்டத்தில் நியூஸிலாந்தின் ஒக்லண்ட் ஏசஸ், ஆஸ்திரேலியாவின் பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பேர்த் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

ஏற்கனவே அரையிறுதி வாய்ப்பை இழந்த பேர்த் அணிக்கு கிப்ஸ் (6) மீண்டும் ஏமாற்றினார். பின்னர் இணைந்த மார்கஸ் நார்த், சைமன் கட்டிச் ஜோடி பொறுப்பாக ஆடியது. இரண்டாவது இலக்குக்கு 55 ஓட்டங்கள் சேர்த்த போது நார்த் (37) 'ரன்-அவுட்' ஆனார். சிறிது நேரத்தில் கட்டிச் (21) நடையை கட்டினார்.

பின்னர் கொலிங்வூட், டாம் பீட்டன் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டது. நான்காவது இலக்குக்கு 51 ஓட்டங்கள் சேர்த்த போது பீட்டன் (22) வெளியேறினார்.கொலிங்வூட் (38), 'ரன்-அவுட்' ஆனார். அடுத்து வந்த லூக் ராஞ்சி (4), ஜோயி மெனியே (2) நிலைக்கவில்லை. பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 140 ஓட்டங்கள் எடுத்தது. நாதன் கவுல்டர்-நைல் (1), பிரட் ஹொக் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய ஒக்லண்ட் அணிக்கு வின்செண்ட் (2) மோசமான தொடக்கம் கொடுத்தார். பின் மார்டின் குப்தில், அசார் மெஹமூத் ஜோடி நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தது. இரண்டாவது இலக்குக்கு 49 ஓட்டங்கள் சேர்த்த போது குப்தில் (36) வெளியேறினார். அடுத்து வந்த கிட்ச்சன் (6) நிலைக்கவில்லை. கட்டாய வெற்றியை எதிர்நோக்கிய நிலையில், அசார் மெஹமூத் (24) கைவிட, அரையிறுதி நம்பிக்கை தகர்ந்தது.

மத்தியவரிசையில் களமிறங்கிய டி கிராண்ட்ஹோமி (4), ஹாப்கின்ஸ் (9), ஹிரா (2) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். முன்ரோ (23) ஆறுதல் தந்தார். கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு 27 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், 10 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. ஒக்லண்ட் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளுக்கு 124 ஓட்டங்கள் எடுத்து 16 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இரண்டாவது ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ், ரைட்டன்ஸ் அணிகள் மோதவிருந்தன. இந்த ஆட்டம மழை காரணமாக ஒரு பந்தும் வீசப்படாமல் கைவிடப்பட்டது. முன்னரே ஒக்லண்ட் வெளியேறியதால் 'ஏ'பிரிவில், முதல் இரு இடங்களை பெற்ற டெல்லி டேர்டெவில்ஸ் (4 ஆட்டம், 12 புள்ளி), ரைட்டன்ஸ்(4 ஆட்டம், 10 புள்ளி) அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

(5)

## ஆட்ட நிர்ணய சதியை தடுக்க சட்டம்

கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதியை தடுப்பதற்காக ஊழல் மோசடிகளை தடுக்கும் சட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆட்ட நிர்ணயத்தில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகளை கண்டறியும் வகையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும், மேற்கிந்திய தீவுக்கும் இடையிலான 'ரி-20' இறுதி ஆட்ட முடிவுகள் முன்னரே தெரிவிக்கப்பட்டதை பற்றிக் கருத்துக் கூறிய அமைச்சர், இவ்வாறான சந்தேகங்கள் ஆதாரமற்றவையென விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது, என்று கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட்டில் சூதாட்டம் காணப்படுகின்றது. எனவே மக்கள் இவ்வாறான சந்தேகங்களை தெரிவிப்பது இயல்பானதே. நாம் விசாரணை செய்தபோது இந்த சந்தேகத்தில் உண்மையில்லை என்பது தெரியவந்தது. பிரித்தானியா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இந்தப் பிரச்சினையை கையாள விசேட சட்டங்களை இயற்றியுள்ளன.

2000 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை போட்டியில் முடிவுகளை முன்னரே தீர்மானித்த குற்றம் நிரூபிக்கப்பட்ட 20 வீரர்களுக்கு ஐ.சி.சி வாழ்நாள் தடை விதித்துள்ளது. எமது அணியில் திறன்மிக்க பலர் உள்ளனர். நாம் இறுதி போட்டியில் தோற்க வேண்டியதில்லை. நாம் எமது வீரர்களின் உளவியல் நிலைமையை முன்னேற்ற வேண்டும். இவர்களுக்கு உள நெருக்கீடு முகாமைத்துவ பயிற்சி தேவை. இதற்காக உலகப் புகழ்பெற்ற உளவியலாளர்களின் சேவைகளை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது, என்று மேலும் அமைச்சர் கூறினார்.

(5)

## தொடரை வெல்லும் தகுதி எமக்கிருந்தது

இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரினை வெற்றிகொள்ளும்தகுதிசென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்குக் காணப்பட்டதாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். சில தவறுகள் காரணமாக அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற முடிந்திருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரையிறுதி ஆட்டத்துக்கான வாய்ப்புக்களை ஏற்கனவே இழந்துவிட்ட நிலையில் தனது இறுதி ஆட்டத்தில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வழமையான தலைவர் மகேந்திரசிங் டோனிக்குப் பதிலாக சுரேஷ் ரெய்னா தலைமை தாங்கினார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சுரேஷ் ரெய்னா, அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெறாமை வருத்தம் தருவதாகத் தெரிவித்தார். சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரைத் தாங்கள் வென்றிருக்க முடியும் எனத் தான் இன்னமும் எண்ணுவதாகத் தெரிவித்த சுரேஷ் ரெய்னா, இந்தத் தொடரில் தாங்கள் சில தவறுகளை விட்டதாகவும், அவை தங்களைப் பாதித்ததாகவும் தெரிவித்தார்.

மகேந்திரசிங் டோனி - சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாகப் பங்குபற்றிய போதிலும், அணித்தலைவராக சுரேஷ் ரெய்னா செயற்பட்டமை குறித்.துக் கருத்துத் தெரிவித்த ரெய்னா, அணித்தலைமையை மகிழ்வாக ஏற்றுச் செயற்படுமாறு மகேந்திரசிங் டோனி தனக்கு அறிவுரை வழங்கியதாகத் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலிரண்டு ஆட்டங்களில் தோல்வியடைந்திருந்தாலும், அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## சச்சினுடன் களமிறங்கியது மகிழ்ச்சியானது

சம்பியன்ஸ் லீக் தொடரில் இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சினுடன் இணைந்து தொடக்க வீரராக களமிறங்கியது மகிழ்ச்சி அளிக்கிறது, என்று மும்பை இந்தியன்ஸ் அணியின் மேற்கிந்தியத்தீவுகள் வீரர் டுவைன் ஸ்மித் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவில் நடக்கும் சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரில், நடப்பு சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி, ஒரு ஆட்டத்தில் கூட வெற்றி பெற முடியாமல், அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

இது குறித்து மும்பை இந்தியன்ஸ் அணியின் தொடக்க வீரர் டுவைன் ஸ்மித் கூறியதாவது:

சம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதிக்கு முன்னேற முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. ஒரு அணியாக இணைந்து சோபிக்கத்தவறிவிட்டோம். துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு எங்களுக்கு சாதகமாக அமையாததால், ஒரு ஆட்டத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. இந்தத் தொடரில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டு, அடுத்து வரும் போட்டியில் முழுத்திறமையை வெளிப்படுத்தி எழுச்சி பெற போராடுவோம்.

இந்தத் தொடரில் சச்சினுடன் இணைந்து தொடக்க வீரராக களமிறங்கியது மகிழ்ச்சி அளிக்கிறது. பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரரான இவருடன் இணைந்து தொடக்க வீரராக விளையாடியதை மிகப் பெரிய சாதனையாக கருதுகிறேன். உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரான இவருடன் இணைந்து துடுப்பெடுத்தாடும் போது சாதிப்போம் என்ற தன்நம்பிக்கை அதிகரிக்கிறது. துடுப்பாட்டத்தின் போது நிறைய ஆலோசனைகள் வழங்குகிறார். தவறான 'ஷொட்' அடிக்கும் போது, அதனை சுட்டிக் காட்டி திருத்துகிறார். தவிர வலைப்பயிற்சியின் போது துடுப்பாட்டம் குறித்த நிறைய நுணுக்குகளை வழங்கினார். இவரது ஆலோசனைகள் சர்வதேச போட்டியில் சாதிக்க நிச்சயம் கைகொடுக்கும் என்று நம்புகிறேன்.

பயிற்சியாளர் ரொபின் சிங் நிறைய ஆலோசனை வழங்கி உற்சாகப்படுத்தினார். தொடக்க வீரராக களமிறங்குவதை மிகப் பெரிய கௌரவமாக கருதுகிறேன். ஏனெனில் தொடக்க வீரராக களமிறங்குவது சவாலான விடயம். தொடக்க வீரருக்கு கூடுதல் பொறுப்பு அதிகம் உள்ளது - என்றார்.

(5)



## பாகிஸ்தானில் பாதுகாப்பு பிரச்சினையே இல்லை

பாகிஸ்தானில் பாதுகாப்பு குறித்து எவ்வித பிரச்சினையும் இல்லை. இங்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளைப் பயமின்றி நடத்தலாம், என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூர்யா தெரிவித்தார்.

கராச்சியில், பாகிஸ்தான் பதினொருவர் மற்றும் உலக பதினொருவர் அணிகளுக்கு இடையிலான இரண்டு 'ரி-20' ஆட்டங்கள் நடந்தது. இதில் உலக பதினொருவர் அணியின் தலைவராக ஜெயசூர்யா நியமிக்கப்பட்டார். ஆட்டங்கள் முடிந்த பின், உலக பதினொருவர் அணி வீரர்கள் தங்களது சொந்த ஊருக்கு சென்ற போதும், ஜெயசூர்யா கராச்சியில் தங்கி, 'ஷொப்பிங்' மற்றும் சில சுற்றுலா தலங்களை பார்வையிட்டார்.

இதுகுறித்து ஜெயசூர்யா கூறியதாவது:

பாகிஸ்தான் மற்றும் உலக பதினொருவர் அணிகளுக்கு இடையிலான இரண்டு 'ரி-20' போட்டியின் மூலம், பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேச போட்டிகளை நடத்தும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. பாகிஸ்தானில் பாதுகாப்பு குறித்து எவ்வித பிரச்சினையும் இருப்பதாக தெரியவில்லை. எனவே ஒவ்வொரு நாடுகளும், பாகிஸ்தானில் சர்வதேச போட்டியில் விளையாட முன்வர வேண்டும். பாகிஸ்தான் ரசிகர்கள் தங்களது சொந்த ஊரில் சர்வதேச போட்டிகளை காண மிகுந்த ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

கடந்த 2009 இல் பாகிஸ்தான் வந்த இலங்கை வீரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் மறக்க முடியாத கொடூரமான சம்பவம். தற்போதுள்ள சூழ்நிலையில், இதுபோன்ற மோசமான நிகழ்வுகள் அரங்கேற வாய்ப்பு இல்லை. இதனால் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் இதுகுறித்து பேசி, விரைவில் இலங்கை அணி பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டியில் விளையாட முயற்சி மேற்கொள்வேன் - என்றார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா - டக்ளஸ் இடையே '13' ஆல் வெடித்தது மோதல்

யாழ்ப்பாணம், ஒக்.25

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவுக்கும், ஈ.பி.டி.பி. யின் செயலாளரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையில் கருத்து மோதல்கள் வெடித்துள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈ.பி.டி.பி. யின் செயலாளரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது கட்சிப் பத்திரிகைக்கு வழங்கியுள்ள நேர்காணலில் 13 ஆவது திருத்தச் சட்டம் வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், 13 ஆவது அரசியல் திருத்தமும் அதற்கு அப்பாலான '13 +' திட்டமும்தான் எமது மக்களின் அரசியல் உரிமைகளை உறுதி செய்யும் சரத்துக்கள். இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே அரசிடம் கோரிவந்துள்ளோம்.

மேலும் 'திவிநெகும' எதிர்ப்புக் காரணமாக ஏற்கனவே அரசியல் அமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தத்தையும் அதன் மூலமான பயன்களையும் பொது மக்கள் இழக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடனும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடனும் நேரடியாகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முரண்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (த-5)

## அமெரிக்கத் தூதரின் வாகனம் விபத்தில்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே.சிசன் பயணித்த வாகனம் நேற்று மாலை மட்டக்களப்பில் விபத்துக்குள்ளாகியது. கரடியனாற்றில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டுவிட்டு மட்டக்களப்பு திரும்பும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தூதுவர் பயணித்த வாகனம் இராணுவ சிப்பாய் ஒருவரின் மோட்டார் சைக்கிளுடன் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

சிப்பாய்க்கு சிறியளவில் காயம் ஏற்பட்டுள்ள போதும் அமெரிக்கத் தூதுவருக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லை என கரடியனாறு பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ-16)

**வீடு வாடகைக்கு**

யாழ். பிறவுண் வீதியில், வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0773867574
(24726)(3.6)

## மாணவர் சீருடைத் துணியின் 50 வீதம் சீனாவில் இருந்து

கொழும்பு, ஒக்.25

அரசினால் வருடாவருடம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச பாடசாலைச் சீருடைத் துணியின் 2013 ஆம் ஆண்டுக்கான தேவையின் 50 வீதத்தை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதெனவும், மீதி 50 வீத சீருடைத் துணியை சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதெனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

குறிப்பிட்ட இலவச சீருடைத் துணி விநியோகம் தொடர்பாக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனையின் பேரில் தேவைப்படும் அளவு துணியை உள்ளூர் உற்பத்தி மூலம் பெற்றுக்கொள்ள இயலுமா என்பது குறித்து ஆராய்ந்தறியுமாறு அமைச்சரவை உறுப்பினர்களை ஜனாதிபதி பணித்திருந்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அமைச்சர்கள்ால் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில், தேவைப்படும் சீருடைத் துணியின் 50 வீதத்தை உள்ளூர் துணித் தயாரிப்பு ஆலைகளிலிருந்து கொள்வனவு செய்வதெனவும், மிகுதியைச் சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதெனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

வருடாந்தம் 200 கோடி ரூபா செலவில் நாடளாவிய ரீதியில் 9714 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு 39 லட்சத்து 70 ஆயிரம் பாடசாலைச் சீருடைகள் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றது. (த)

**மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம் படைத்த சாதனையை பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. திருமதி **ஜெகதீஸ்வரன்** தம்பதியரின் செல்வப் புதல்வனும் யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் மாணவருமான செல்வன்

Best Wishes

**ஜெ.சாருஷன்**

2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவர் மேலும் பல சாதனைகளைப் பெற உளமார வாழ்த்துவதோடு இப்பரீட்சையில் 130க்கு மேல் புள்ளிகளைப் பெற்ற

**செல்வி குணவண்ணன் கோபிகா - 141**
**செல்வன் சிவமூர்த்தி சாருஷன் -139**
**செல்வன் கடோற்கஜன் சுபீட்சன் - 138**
**செல்வி சத்தியலிங்கம் கிருஷிகா - 135**
**செல்வன் கேதீஸ்வரன் கஜலக்ஷன் - 133**

இவர்களையும் மனதாரப் பாராட்டுவதோடு இவர்களுக்கு கல்வி புகட்டிய தரம் 5 வகுப்பாசிரியர் **ச.முகுந்தன்** அவர்களையும் அதிபர்,ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி/4309)(6.9)

**வாழ்த்துவோர்:**
பாடசாலைச் சமூகம் யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்.

## விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.25

நல்லூர் பிரதேச சபையின் பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விசேட கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இதில் இன்று காலை 9 மணிக்கு கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் 'புத்தகப் புதையல்களை புசிப்போம்' எனும் தலைப்பில் ஜாக்ரத சைதன்ய சுவாமியின் சொற்பொழிவும்.

நாளை காலை 9 மணிக்கு நல்லூர் கலாமன்ற சனசமூக நிலையத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வை. இரவீந்திரனின் சுகாதாரக் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் நல்லூர் பொது நூலகத்தில் புத்தகக் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-16)

## மரண அறிவித்தல்

### Lion கந்தையா விஜயரத்தினம்

(சமாதான நீதிவான் யாழ் மாவட்ட இணைப்பாளர் சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமைகள் அமைப்பு, இளைப்பாறிய பிரதேச முகாமையாளர் அரசாங்க மரக்கூட்டுத்தாபனம், வடபிராந்தியம்)



சிங்கராஜர் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட கந்தையா விஜயரத்தினம் நேற்று (24.10.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் இரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும், றஜீத் (டாக்டர்), பிரதீப் (எயார் டெல்), பிரசன்யா (கனடா), ஜீவிதா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் பஞ்சரத்தினம் (நிலஅளவையாளர் திருகோணமலை), காலஞ்சென்ற கனகரத்தினம் (ஜேர்மனி) இராசரத்தினம் (லண்டன்), சிவரத்தினம் (ஆஸ்திரேலியா), கமலாதேவி (ஜேர்மனி), நகுலாதேவி (லண்டன்), பரமேஸ்வரி (ஜேர்மனி), மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், கதிர்காம சௌந்தரி, கௌரி, யூத்தா (ஜேர்மனி), வாசுகி (லண்டன்), ரமணி (ஆஸ்திரேலியா), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), செல்லத்துரை (லண்டன்), தற்பரானந்தலிங்கம் (ஜேர்மனி), மகேந்திரன் (ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (24733)(3)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும், நன்றி நவிலலும்



### அமரர் ஆறுமுகம் வேலும்மயிலும்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

தோற்றம் 09.03.1943 | மறைவு 26.10.2012

23.09.2012 ஆம் திகதி அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் சகலவிதமான உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் நன்றி கூறுவதுடன், அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.10.2012) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோயில் அந்தியேட்டி மடத்தில் நடை பெறும், அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

(23669)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் செல்வக்குமார்

(ஓய்வு நிலை எழுதுநர் வவுனியா மாவட்டச் செயலகம்)



அல்வாய் கிழக்கு, வெள்ளுருவையைப் பிறப்பிடமாகவும், புலோலி மேற்கு தம்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் செல்வக்குமார் நேற்றுமுன்தினம் (23.10. 2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - விசாலாட்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சந்திரசேகரம் - பத்மாவதி தம்பதியரின் மருமகனும், சரோஜினியின் அன்புக் கணவரும், தர்ஷன், மிதுர்சன் (வவுனியா மகா வித்தியாலய உயர்தர மாணவன்), மிதுர்ஷா (வட இந்து மகளிர் கல்லூரி உயர்தர மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், ஈஸ்வரி, ஜெகதீஸ்வரி, ஜெயக்குமார், இலங்கேஸ்வரி (வவுனியா), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் விக்கினேஸ்வரி (கனடா), சத்தியகுமார் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரவீந்திரன் (வவுனியா), தயாபரன், பகீரதன் (உள்ளூராட்சி அமைச்சு வ.மா), கமலலோஜினி (பொறியியலாளர், மின்சாரசபை, யாழ்ப்பாணம்), ஜனகன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2012) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தம்பசிட்டி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பசிட்டி வீதி,
தம்பசிட்டி பருத்தித்துறை. (23670)(3)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

203/2,கண்டி வீதி, அரியாலை யாழ்ப்பாணம் லோகநாயகி சபாரட்ணம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (678421804V) 20.10.2012 சனிக்கிழமை யாழ்.கொமர்ஷல் பிரதான வங்கியில் காசாளர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 288 0928, 021 221 1051

(24660)(5-6-7)

## சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த கருத்தரங்கு

சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சிறுவர் பாதுகாப்பும், பெற்றோர் திறன் அபிவிருத்தியும் என்னும் தொனிப்பொருளிலான கருத்தமர்வுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இரண்டு கருத்தரங்குகளும், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 3 கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன.

இந்தக் கருத்தரங்குகள் கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் அவர்களது கணவன்மாருக்கே நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## சிக்கன தினத்தையொட்டி சித்திரப்போட்டி

உலக சிக்கன தினத்தையொட்டி தேசிய சேமிப்பு வங்கி யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம் 4, 5 இல் கற்கும் மாணவர்களிடையே சித்திரப் போட்டியை இன்று வியாழக்கிழமை நடத்தவுள்ளது.

சேமிப்பின் முக்கியத்துவம் என்ற தலைப்பிலான மேற்படி சித்திரப் போட்டி யாழ். மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக தேசிய சேமிப்பின் வங்கியின் வட வலய முகாமையாளர் சி.அருளானந்தம் தெரிவித்துள்ளார்.சித்திரப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி பரிசில்கள் வழங்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-8)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத நிலையிலுள்ள துவிச்சக்கரவண்டிகள்

பின்வரும் இலக்கங்கள் கொண்ட துவிச்சக்கர வண்டிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு இன்றிலிருந்து ஒரு வாரத்திற்குள் பெற்றுக்கொள்ளவும். உரிமை கோரப்படாத துவிச்சக்கர வண்டிகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

உரிமை கோரப்படாத நிலையிலுள்ள துவிச்சக்கர வண்டிகள் இலக்கங்கள்

| | |
|---|---|
| 1.56041724 | ஆண்களின் துவிச்சக்கர வண்டி |
| 2.57149856 | ஆண்களின் துவிச்சக்கர வண்டி |
| 3.68231306 | ஆண்களின் துவிச்சக்கர வண்டி |
| 4.ENF06416 | ஆண்களின் துவிச்சக்கர வண்டி |
| 5.55991914 | ஆண்களின் துவிச்சக்கர வண்டி |
| 6.JL753610 | பெண்களின் துவிச்சக்கர வண்டி |
| 7.D-51155 | பெண்களின் துவிச்சக்கர வண்டி |
| 8.0607279 | பெண்களின் துவிச்சக்கர வண்டி |
| 9.C 959590 | பெண்களின் துவிச்சக்கர வண்டி |
| 10.GAB194 | பெண்களின் துவிச்சக்கர வண்டி |
| 11.55798087 | பெண்களின் துவிச்சக்கர வண்டி |
| 12.57176907 | பெண்களின் துவிச்சக்கர வண்டி |

இவற்றுடன் இலக்கங்கள் தெரியாத நிலையில் இரு துவிச்சக்கர வண்டிகள் உள்ளது.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(G/4294)(5-6-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
22
06
1936

இறைவன் அடியில்
06
11
2011

### அமரர் துரையப்பா ஜெயரட்ணம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் தலைமைக் காரியாலய பரிசோதகர், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் உதவி வடமாகாண ஆணையாளர், அதல் பாதுகாப்பு சேவை இயக்குநர், முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி, அகில இலங்கை சமாதான நீதிவான்)

சீருறு கரவாண்டு ஐப்பசித் திங்கள் இருபது
பேருறு பூர்வபக்க ஏகாதசியில் -பார் புகழும்
துரையப்பா ஜெயரட்ணம் எனும் பண்புடைய பேராளன்
பரம பதம் சென்றடைந்த நாள்

புலவனார் வீதி,
கல்வியங்காடு,
யாழப்ப்பாணம்.

அன்பு மனைவி ராஜேஸ்வரி,
மகள் அகல்யா நவரட்ணம்(ஜேர்மனி),
மகள் சுகன்யா ரகுநாதன்(சுவிஸ்),
பேரப்பிள்ளைகள்.

(24539)(5-6-7)

## நீங்கா நினைவில் 28 ஆம் ஆண்டு

தோற்றம்
11.04.1972



மறைவு
25.10.1984

### செல்வி நிமாலினி வீரசிங்கம் (பாப்பா)

எங்கள் ஆசை மகளே
நீ பூவாக மலர்ந்த வேளையில்
நாங்கள் அடைந்த இன்பத்துக்கு அளவே இல்லையம்மா
உன்னை நினைத்து கற்பனையில் இருந்த வேளையில்
கண்ணசைக்கும் வேளையில் காலனவன் பறித்துவிட்டான்
ஒவ்வொரு காலையும் உன்னைத் தேடுகின்றோம் கண்ணீருடன்
எங்கள் இதயத்தில் அம்மா உன் நினைவுகள் அழியாத சொத்தம்மா

34/1, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்:
அம்மா, அப்பா,
தம்பிமார், தங்கைமார்.

(2465)(6.8)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
1993.10.11

ஆண்டவன் மடியில்
2012.09.26

ஜேர்மனை பிறப்பிடமாகவும்,
Vadems ஐ வசிப்பிடமாகவும்
கொண்ட

### பரஞ்சோதி விகிலா

பெண்முகம் பூர்த்து புதுமலராய்
இப் பூமியில் மலர்ந்த விகிலாவே
இப் பூமியைவிட்டு ஏன் நீ பிரிந்தாயோ?
எத்தனை இரவுகள் உனக்காகக் காத்திருந்தோம்
எங்களை ஏமாற்றிவிட்டு தனிமரமாய் எங்குதான் சென்றாயோ
எங்கள் அருமை விகிலாவே
எத்தனை வித்தைகள் காட்டி எங்களை சிரிக்க வைத்தாய்
கதைகள் பல சொல்லி

கட்டி அணைத்தாயே எங்கள் அன்பு விகிலாவே
ஊட்டி வளர்த்த உன்தாய் தந்தை தம்பியை விட்டு
எங்குதான் சென்றாயோ நிலவாய் உன்
தாய் வயிற்றில் வந்து உதித்தாயோ பளிச்சிட்ட
உன் முகம் மறக்கமுடியவில்லை உயிரோடு உயிராய்
கலந்து மீண்டும் உன் அன்னை மடியில்
வருவாயோ விகிலாவே

26.09.2012 அன்று சிவபதமடைந்த எமது அன்பு செல்வி விகிலாவின் 31ஆவது நினைவு அஞ்சலி உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்.

தகவல்:
சிவதரன் (சித்தப்பா)
தனேஸ் (சித்தி)
பிள்ளைகள்(ஜேர்மன்)
077 151 0366

அப்பா - பரஞ்சோதி, அம்மா - சகிலா,
தம்பி - வினித், தாத்தா- பாலசிங்கம்,
அம்மம்மா - சந்திரகுமாரி, அப்பப்பா - முத்து,
அப்பம்மா - சுந்தரி, மாமா - தர்சன்,
சின்னமாமா - கபிலன் மற்றும் உற்றார், உறவினர்கள்.

(24692)(5.6.7)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10
10
1934



மறைவு
22
10
2007

அமரர்

### சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் (J.P)

(தென்மராட்சி மேற்கு,கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைவரும், யாழ். விவசாய நுகர்ச்சி கூ.ச.சமாசத் தலைவரும்)

திதி: 25.10.2012

அகத்தில் தூய்மை கொண்டு இறைவனை வசமாக்கி
அறத்தில் தூய்மை கொண்டு அனைவரையும்
முன்னேற்றப் பாதையில்
முயற்சியுடன் வாழ வைத்து உம் உழைப்பால்
முன்னுதாரணமாய் திகழ்ந்தீர்கள்......
இலட்சியப் பாதையில் வெற்றியோடு வாழ்ந்தீர்கள்
காலதேவன் உங்களை அழைத்துச் சென்று
ஆண்டுகள் ஐந்து ஆனாலும் உம் நினைவுகள்
என்றும் ஓயாதைய்யா!

கைதடி தெற்கு,
கைதடி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(24685)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org